

தூர நோக்கு
பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்கி பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.
செயற்பணி
நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்
மைய விழுமியங்கள்
மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

# கணக்களிப்பொறுப்பு சம்பந்தமான வரலாற்றுப் பின்னணி



(iv ஆவது மிஹிந்து மன்னனால் இலங்கையின் மிஹிந்தலையில் கி.மு. 10 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருந்த மேற்படி புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள கல்வெட்டில் இருந்து எடுக்கப்பட்ட பொழிப்பு வருமாறு.)

“சேகரிக்கப்படும் வருமானத்திலிருந்து விஹாரைகளை பராமரித்துச் செல்வதற்காகவும் புனரமைப்பதற்காகவும் நாள்தோறும் செய்யப்படுகின்ற செலவினங்கள் பதிவேட்டில் பதிந்து வைத்திருத்தல் வேண்டும்.” குறித்த வணிக நிலையங்களிலுள்ள நபர்களின் இணக்கப்பாட்டுடன் மேற்படி பதிவேடுகளிலுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும் என்பதுடன் தவறானவையாக காணப்படுகின்ற பதிவுகள் கணக்குகளிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் நிதிக்கூற்றுக்கள் பெட்டகத்தில் பூட்டி வைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு வைக்கப்பட்ட கணக்காவணங்கள் மாதந்தோறும் பொதுமக்களிற்கு பிரசித்தப்படுத்தப்பட்டு அவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக (மாதந்தேறும்) கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஆண்டின் போது இவ்விதமாகத் தயாரிக்கப்பட்ட 12 கணக்குக் கூற்றுக்களின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் ஐந்தொகையொன்று தயாரிக்கப்பட்டு அது மதகுருக்களின் முன்னிலையில் பகிரங்கமாக வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும். இந்த நிபந்தனையை மீறுகின்ற அனைத்து ஊழியர்களும் “ஹேதண்டி” எனும் தண்டப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுதலும் வேண்டும்.”

***(இலங்கை, மிஹிந்தலையில் : கி.மு. 10 ஆம் நூற்றாண்டு – IV ஆம் மிஹிந்து மன்னனால் பொறித்து வைக்கப்பட்டவற்றில் இருந்து பெறப்பட்டது. தொகுப்பு : செலானிகா கல்வெட்டு அலகு– 1 பக்கம் 75 எப் எப்)***

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் முன்னோக்கிய பாதை

1799 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம், அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக, உயர் இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்குடன் இரு நூற்றாண்டுகளில் நிறைவேற்றிய சேவைகளை தொடர்ந்தும் விரிவுபடுத்தி, அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் இலங்கை மாதாவுக்கு பக்க பலமாக இருந்து, அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டில் முன்னனி வழிகாட்டியாக மாற்றமடைந்து, இலங்கை மக்களின் நலனோம்பலுக்காக இயங்கி வருவதுடன் அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிற்கு அவைகளின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வழிகாட்டுவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

# 1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் முன்னோக்கிய பாதை

1799 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம், அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக, உயர் இலக்குகளை **அடைந்து கொள்ளும் நோக்குடன் இரு நூற்றாண்டுகளில் நிறைவேற்றிய சேவைகளை** தொடர்ந்தும் விரிவுபடுத்தி, அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் இலங்கை மாதாவுக்கு பக்க பலமாக இருந்து, அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டில் முன்னனி வழிகாட்டியாக மாற்றமடைந்து, இலங்கை மக்களின் நலனோம்பலுக்காக இயங்கி வருவதுடன் அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிற்கு அவைகளின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வழிகாட்டுவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

# உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| **பகுதி 1 – பொதுவான விடயங்கள்** | |
| பொதுக் கணக்களிப்பொறுப்பில் எமது வகிபாகம் | 01 |
| எமது பணிப்பொறுப்பு மற்றும் சுதந்திரம் | 02 |
| எமது சேவைபெறுனர் அடிப்படை | 07 |
| நிறுவனக் கட்டமைப்பு | 08 |
| சர்வதேச உறவுகள் | 13 |
| சமய மற்றும் கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள் | 16 |
| | |
| **பகுதி II – எமது செயலாற்றல் மீதான அறிக்கை** | 18 |
| அரசாங்க கணக்காய்வின் ஊடாக நாட்டுக்குக் கிடைத்தவை | 19 |
| **பகுதி III – நிதிக்கூற்றுக்கள்** | 22 |
| 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் | 23 |
| **பகுதி IV – அரசாங்க கணக்காய்வுத் துறைகளின் சுருக்கமான கணக்காய்வு மீளாய்வு** | 37 |
| பொது முயற்சிகள் முகாமைத்துவம் | 38 |
| வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் | 50 |
| மாகாண சபைகள் | 52 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 54 |
| புலனாய்வுக் கணக்காய்வு மற்றும் பொது மக்கள் பிரதிநிதித்துவக் கணக்காய்வு நடவடிக்கைகள் | 56 |
| **பகுதி V – அரசாங்க கணக்காய்விற்குரிய துறைகள் தொடர்பான விரிவான கணக்காய்வு மீளாய்வு** | 59 |
| அரசாங்க வருமான முகாமைத்துவம் | 60 |
| அரசாங்க செலவின முகாமைத்துவம் | 70 |
| பொதுப் படுகடன் முகாமைத்துவம் | 75 |
| வங்கியியல் | 79 |
| தேசிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 89 |

# பொதுக் கணக்களிப்பொறுப்பில் எமது வகிபாகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பொது நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பின் பிரகாரம், வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களிற்கு நிதியும் வளங்களும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. வளங்களின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் முகாமைத்துவம், அவரவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுக் கணக்களிப் பொறுப்பினை சரிவர நிறைவேற்றியுள்ளதா என்பது தொடர்பில் சுயாதீன பரிசோதனையை மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதான கடமையாவதுடன் பேணிவரப்படுகின்ற அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் கணக்கு வைத்தல்கள் தொடர்பிலான சுதந்திர மதிப்பாய்வில் பாராளுமன்ற எதிர்பார்ப்புகளை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட அரசாங்க நடவடிக்கைகள் கணக்கீடு செய்யப்பட்டமைக்கான சுதந்திரமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு பாராளுமன்றம், கணக்காய்வாளர் தலைமை அதிபிதியின் மீது நம்பிக்கை வைத்துள்ளது. பொதுக் கணக்களிப்பொறுப்புச் சங்கிலியின் பிரதான படிமுறைகள் பின்வருமாறாகும்.

### பொதுக் கணக்களிப்பொறுப்பு நடவடிக்கைகள்

பொதுக் கணக்களிப்பொறுப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான செயற்பாடுகள் கீழுள்ளவாறாகும்

- ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்தால் அரசாங்கச் செலவினம் அங்கீகரிக்கப்படுதல்.
- அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய பொது முயற்சிகளால் வருடாந்தக் கணக்குகள் தயாரிக்கப்படல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அக்கணக்குகள் மற்றும் பொது முயற்சிகளின் செயற்பாடுகள் கணக்காய்வு செய்யப்படல்.
- பொதுக் கணக்குகள் மீதான குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் மீதான குழு (COPE) என்றழைக்கப்படும் இரண்டு பாராளுமன்றக் குழுக்களால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்புடைய தரப்பினர்கள் வரவழைக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படல்.
- பொதுக் கணக்குகள் மீதான குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் மீதான குழு (COPE) என்பவற்றால் அறிக்கைகளும் சிபார்சுகளும் வழங்கப்படல்.
- மேற்குறித்த அறிக்கைகளிற்கான அரசாங்கத்தின் ஆர்வ வெளிப்பாடு

பாராளுமன்றம், பொதுத் திறைசேரி மற்றும் நாட்டின் அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் என்பன நிறுவக மற்றும் அமைப்பு ரீதியான கணக்களிப்பொறுப்புச் சட்டகத்தில் மூன்று மத்திய முகவர்களாக உள்ளன. பொது நிதிக் பொதுக் கணக்களிப்பொறுப்பு முறை உரிய விதத்தில் செயற்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்காக, அரசாங்க நிறுவனங்களிற்கு பாதீட்டின் மூலம் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் சுற்றாடலைப் பாதுகாக்கும் விதத்திலும் பயன்படுத்தல் தொடர்பான நிலமையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது அறிக்கையின் மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றார். அவ்வாறே பொது முயற்சிகள், நிதியங்கள் மற்றும் செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் மீது வேறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதன் மூலம் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் நிலைமை தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு தொடர்பாடல் செய்யப்படுவதுடன் காணப்படுகின்ற நியதிச்சட்ட தேவைப்பாடுகளின் படி தமது கணக்காய்வு நடவடிக்கைகளின் அளவு, திசையினை நிர்ணயிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுதந்திரமான தற்றுணிபு அதிகாரத்தைக் கொண்டுள்ளார். இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால்

மேற்கொள்ளப்படுகின்ற குற்றச் சம்பவங்கள் தவிர்ந்த கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற நிதிசார், செயலாற்றல், இணங்கியொழுகுதல் மற்றும் முறைமைக் கணக்காய்வின் ஊடான கண்டுபிடிப்புக்களும் பரிந்துரைகளும் இறுதியாக அரசாங்கத் துறையின் செயலாற்றல், நிதிக்கட்டுப்பாடு மற்றும் வினைத்திறன் போன்றவற்றை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டு கணக்காய்வு அறிக்கைகளாக மும் மொழிகளிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஏனைய பொதுநலவாய நாடுகளைப் போன்று இலங்கையின் COPA மற்றும் COPE என்பன சகல அரசாங்கத் துறை நிறுவனங்களினதும் எந்தவொரு நடப்பு மற்றும் வரலாற்று நிதிச்செயற்பாட்டினையும் விசாரிப்பதற்கு அனுமதிகொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களமும் இரண்டு பாராளுமன்றக் குழுக்களும் அவசியமான நெருக்கமான உறவினைப் பேணி வரவேண்டியுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம் இரண்டு குழுக்களினதும் வேலைகளிற்கு அடிப்படையான முழுமையாக மேவுகை செய்யப்பட்ட, நிதிக் கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகள், செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் புலனாய்வுக் கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## எமது பணிப்பொறுப்பு மற்றும் சுதந்திரம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை கீழே குறிப்பிடப்பட்டவாறான பொதுத் துறை நிறு வனங்களை கணக்காய்வு செய்வதற்கான பணிப்பொறுப்பினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது. *“சகல அரசாங்க திணைக்களங்கள், அமைச்சரவை அலுவலகங்கள், நீதிச் சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, நிர்வாகத்திற்காக பாராளுமன்ற ஆணையாளளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், மற்றும் தேர்தல் ஆணையாளளர், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் வணிக அல்லது ஏதாவது ஏழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனங்கள்” கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

**இருப்பினும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருவதில்லை என்பதுடன் இந்நிலமை பொது நிதிக் கட்டுப்பாட்டில் பலவீனமான நிலமையாகும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.**

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகள் கீழே காட்டப்பட்டுள்ள நியதிகளால் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II

(ஆ) மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு

(இ) மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு

(ஈ) நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு

(உ) பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு

(ஊ) கமத்தொழில் அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு

(எ) விளையாட்டுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவு.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. *அரசியலமைப்பின் 154 (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஒரு நபராவது கடமை வெளிப்பாடு, பணிகள் என்பவற்றை ஆற்றுகையில்*

- *சகல புத்தகங்கள், பதிவேடுகள், திரட்டுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும்*
- *களஞ்சியங்கள் மற்றும் எனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும்*
- *அவ்வாறான கடமைகள், பணிகள் என்பவற்றை ஆற்றுவதற்குத் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் அருகதையுடையவராகின்றார்.*

## எமது சுதந்திரம்

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் சிறப்பான விதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**“அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையுடன் சனாதிபதி அவர்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர் தனது பதவிக் காலத்தின் போது நன்நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்”. நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம்.**

---

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில்,

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.**

---

இருப்பினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பில் நடைமுறைச் செயற்பாட்டு நிலமை அரசியலமைப்பிற்கு அமைவாக காணப்பட வேண்டிய நிலையினை அணுகியிருக்காமையை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு எந்தவொரு அமைச்சரோ அல்லது அரச உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழோ வரமாட்டார். கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்டபோதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளினால் நிறைவேற்றுநர்களது இடர்பாட்டுக்கு உள்ளாகின்றது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்திற்கோ தனிநபருக்கோ முற்றாக கடப்பாடு இன்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவராயும் அவர் இருத்தல் வேண்டும். பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது.

தற்போது தனது வரவு, செலவுத் திட்டத்திற்குப் பொதுத் திறைசேரியிலேயே அவர் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அவரது திணைக்களத்திற்கான மூலவள ஒதுக்கீடு பொறுப்புக்குரிய அபாயங்களுடன் பிணைந்தவை அல்ல. ஏனைய முன்னேறிய பொதுநலவாய நாடுகள் போல் அல்லது இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் நீதித்துறைக் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்படுவதோ அல்லது அங்கீகரிக்கப்படுவதோ இல்லை. அவரது வரவு, செலவுத் திட்டத்தின் மீதான நிறைவேற்றுநர்களது கட்டுப்பாடுகளிலிருந்து அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதுமில்லை. கண்காய்வாளர் தலைமை அதிபதியினது பதவியணியினரது நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் என்பன முன்னர் சனாதிபதியின் செயலாளரில் தங்கியிருந்தது. பின்னர் அரசியலமைப்பின் பதினேழாவது திருத்ததையடுத்து அந்த அதிகாரங்கள் அரசசேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்காமையால் தற்போதைய ஏற்பாட்டின் கீழும் தனது பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இடர்களை எதிர்நோக்குகின்றார். நீதித்துறைச் சேவை ஆணைக்குழு எனும் விசேட அமைப்பின் கீழ் வரும் நீதித்துறைச் சேவை போன்று சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டிய விசேட சேவை ஒன்றாகக் கணக்காய்வுச் சேவையையும் கருதப்படக் கூடியதாகும். மேலும், அரசியலமைப்பின் படி அரசாங்க உத்தியோகத்தர் விதிவிலக்கு நிரலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் சேர்த்துக் கொள்ளப்படாமையால், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டவாறான சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்கதுத் தடையாக இருந்துள்ளன.

ஊழியப் புரள்வு அடிப்படையில் நோக்குகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் ஊழியப் புரள்வு அதிகமானதாகும். சர்வதேச கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அரசாங்கத் துறைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி வருகின்ற அரசாங்க நிறுவனங்களின் கணக்கு நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச கணக்காய்வு நியமங்களின் படி நிறைவேற்றுவதற்காக பொருத்தமான பதவியணியொன்றை சேர்த்துக் கொள்வதற்கும் அவர்களது சேவையினை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்கும் கவர்ச்சிகரமான கொடுப்பனவொன்று அடிப்படையானதாகும். விசேடமாக அரசாங்கக் கணக்காய்வினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு சேர்க்கப்படுகின்ற பெறுமதி சொற்பமானதன்று, இது தொடர்பில் எந்தவொரு துறையினதும் செயற்பாடுடைய கவனம் திரும்பியிருக்காகமையை ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

“இன்டொசாய்”, அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் 1977 இன் “லீமா பிரகடனத்தில்” அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளிற்குப் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலில் (இன்டசாய் 2007 மெக்சிகோ) அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரத்திற்கு பின்வரும் எட்டு விடயங்கள் அத்தியாவசியமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

- தற்றுணிபு பிரயோகித்திற்கான ஏற்பாடுகள் அடங்கலாக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தினை விரிவுபடுத்துவதற்கு அரசியலமப்பிலும் நியதிச்சட்டங்களிலும் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டும் தெளிவானவையாகவும் காணப்படுதல் வேண்டும்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் (SAI) தேவையானதும் நியாயமானதுமான மனித வளம், பொருட்கள் மற்றும் நிதி வளத்தினைக் கொண்டிருப்பதோடு அரசாங்கத்தினதும் ஏனைய அதிகாரத் தரப்பினரதும் தலையீடின்றி தனது சொந்த பாதீட்டில் முகாமை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களது (SAI) தலைவர்களையும் நிறுவன அங்கத்தவர்களையும் நியமிப்பதற்கான நிபந்தனைகள் நியதிச்சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும். போதியளவு நீண்டகால நிரந்தர விதிகளுடன் நிறைவேற்றுனரிலிருந்து சுதந்திரமாக நீங்கக்கூடியதாக அஉக நிறுவங்களின் தலைவர்களும் அவரது அங்கத்தவர்களும் நியமனங்களைப் பெற்றுக்கொள்தல் வேண்டும். எவ்வித அச்சுறுத்தலுமின்றி தமது பணிப்பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு இது அவர்களிற்கு வாய்ப்பளிக்கும்.

- தமது சட்டபூர்வ பணிப்பொறுப்புகளை வினைத்திறனாக ஆற்றுவதற்கு கணக்காய்வு விடயங்களைத் தெரிவுசெய்தல், கணக்காய்வினைத் திட்மிடல், மற்றும் கணக்காய்வு முறைகளை அமுல்படுத்தல் அவ்வாறே அவர்களது கணக்காய்வை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தினையும் அவற்றினது உத்தியோகத்தர்களையும் முகாமைத்துவம் செய்வதற்கு அஉக சுதந்திரம் கொண்டிருத்தல் வேண்டும். அதன்காரணமாக அஉக ஆனது தனது கணக்காய்வு வேலைகளை நிறைவேற்றுவதற்காக நியதிச்சட்டரீதியான வழிகாட்டல்கள் மற்றும் தலையீடுகள் என்பவற்றிலிருந்து சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர்கள் தமக்குரிய பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவதற்காக தேவையான நேரத்தில் சகல ஆவணங்கள் மற்றும் தகவல்களை அணுகிப் பெறுவதற்கும் சுதந்திரமான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- தமது கணக்காய்வு வேலைகளை குறைந்தது ஆண்டுக்கொரு முறையாவது அறிக்கை மூலம் அஉக வெளியிடுதல் வேண்டும் இருப்பினும், தேவையெனக் கருதப்படுமிடத்து அதற்கு மேற்பட்ட தடவைகளில் அறிக்கையிடுவதற்கு அவர்கள் சுதந்திரத்தினைக் கொண்டவர்கள்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளது உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதற்கும் பொருத்தமன அதிகாரத்தரப்பினர்களிற்கு முறைப்படியாக முன்வைக்கப்பட்ட அவர்களது அறிக்கையினை பிரசுரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் அஉகநி சுதந்திரம் உடையதாகும்.

- கணக்காய்விற்குள்ளான நிறுவனம் கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை கவனித்திற் கொண்டு தேவையான திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என பின்தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளும் சுதந்திரத்தை அஉகநி கொண்டிருக்கும்.

இச்சூழ்நிலையில் மெக்ஸிகோ பிரகடனத்தின் மேற்படி தேவைப்பாடுகளின் தற்போதைய அபிவிருத்தியாக 2011 திசெம்பர் 22 ஆந் திகதி கூடிய ஐக்கிய நாடுகளின் 66 ஆம் பொதுச் சபை நிறைவேற்றிய ஏ/ஆர்ஈஎஸ்/66/209 தீர்மானத்தின் படி "அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களை (அஉகநி) பலப்படுத்துவதன் மூலம் வினைத்திறன், கணக்களிப்பொறுப்பு, பயனுறுதி மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை மேம்படுத்தலாம்" என்பதாகும். அவ்வாறே 2013 ஆம் ஆண்டில் மக்கள் சீனக் குடியரசில் பீஜிங் நகரத்தில் இடம்பெற்ற மாநாட்டினாலும் 2013 இல் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிலும் அரசாங்கக் கணக்காய்வின் சுதந்திரமும் செயற்திறனும் தொடர்பில் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இந்த மாநாட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயனுள்ள பங்களிப்பு குறித்த பொறுப்புடைய தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்படாதுள்ளமையை குறிப்பிட விரும்புகின்றேன். கணக்காய்வு நடவடிக்கைகளில் செயற்திறனான தன்மையினை வரைவிலக்கணப்படுத்துவற்குத் தேவையான தேசிய கணக்காய்வுச் சட்டமொன்றை ஏற்படுத்தும் முதலாம் கட்ட நடவடிக்கை 2000 ஆம் ஆண்டில் ஆரம்பம் வரை விரிவடைந்து செல்கின்ற போதிலும் அதன் பெறுபேறுஇது வரை அடையப்பட்டிருக்கவில்லை. இந்நிலமை பொது நிதி தொடர்பில் பாராளுமன்றத்திற்குள்ள கட்டுப்பாட்டை உரிய விதத்தில் செயற்படுத்துவதற்கு தடையாக உள்ளமையை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

## கணக்காய்வின் நோக்கெல்லை

தனது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தீர்மானிப்பார். இது தொடர்பில் அவர் தற்போதுள்ள நியமங்கள் அதாவது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது

சர்வதேச அமைப்பு (INTOSAI), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது ஆசிய அமைப்பு (ASOSAI), தொடர்பான விதிகளும் சிறந்த செயல் முறைகளும் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குக் குழு (COPA), பொது முயற்சிகள் மீதான குழு (COPE) என்பவற்றினது வழிகாட்டல் ஆகியவற்றால் வழிநடாத்தப்படுகின்றார். இவற்றிற்கும் மேலாக, அரச கூட்டுத் தாபனங்களைப் பொறுத்தவரை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கருதப்பட வேண்டிய கணக்காய்வின் நோக்கெல்லையை மிகத் தெளிவாக வரைவிலக்கணப்படுத்துகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கான விபரமான அறிக்கை, கூட்டுத்தாபனம் ஒன்றின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரசுரிக்கப்படும் அறிக்கை, பாராளு மன்றத்திற்கான பிறிதொரு அறிக்கை என்ற வகையில் 3 முக்கிய நியதிச்சட்ட அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பிலான கணக்காய்வு நோக்கெல்லையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

- தகவல் தெரிவிப்பதற்கான நோக்கில் கூட்டுத்தாபன செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பிடக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன உரிய விதத்தில் போதியளவில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும் அவ்வாறான முறைமைகள் நடைமுறைகள் புத்தகங்கள் பதிவுகள் ஏனைய ஆவணங்கள் யாவும் பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதும்,

- அரசாங்க கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் அக் கூட்டுத்தாபனச் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கிணங்க உள்ளனவா மற்றும் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் நியாயம் நிலவுகின்றதா என்பதும்,

- நிதிகளின் கடப்பாடு மற்றும் நிதிகளின் பயன்பாடு சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் உள்ளனவா என்பதும்,

- பணம் வைத்திருத்தலும் சொத்துப் பாதுகாப்பும் திருப்திகரமாக உள்ளனவா,

- கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கூட்டுத்தாபனக் காலப் பகுதிக்குரிய விவகாரங்களது உண்மையானதும் நேர்மையானதுமான தன்மையை வெளிப்படுத்துமாறு கணக்கீடு, நிதியளிப்பு, பெறுமதியிடல் போன்ற அடிப்படைகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேவையெனக் கருதப்படுகின்ற அவ்வாறான ஏனைய விடயங்கள்

  1971 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நிதி அதிகாரச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ள மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற்கொள்கையில், பணப் பெறுமதிக் கணக்காய்வு அல்லது செயலாற்றல் கணக்காய்விற்குள் நுழையும் எத்தணிப்பு இலங்கையில் 1970 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றுள்ளது என்பது உறுதியாகின்றது. அதன்படி நடைமுறையில் ஆழமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பணப் பெறுமதி அல்லது செயலாற்றல் கணக்காய்வின் முன்னோடியாக இலங்கை செயற்பட்டுள்ளது என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அரசாங்க மற்றும் அரை அரசாங்க நிறுவனங்களின் கணக்குகளைப் பரிசோதனை செய்வதனை மாத்திரமே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு செய்யக் கூடியதாக உள்ளது. இருப்பினும் ஏனைய கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்புக்குள் வருவதில்லை. திறைசேரியினால் மூலதனமிடப்படுவதற்கு நேரடியாக மூலதனம் முதலீடு செய்யப்படாது பொது முயற்சிகளால் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனிகளை தாபிக்கும் போக்கொன்றும் காணப்படுகிறது. அவ்வாறே அரசாங்க நடவடிக்கைகளுடன் தொர்புறுகின்ற தனியார் நிறுவனங்களை விசாரிப்பதற்கான உரிமையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காணப்படுவதில்லை. இருப்பினும் தனியார் நிறுவனமொன்றுடன் தொடர்புகொண்டுள்ள அல்லது நேரடியாக நிதி வழங்கியுள்ள பொது முயற்சியின் செயற்பாடுகள் மற்றும் தனியார்

நிறுவனத்தினால் பொது நிதி பிரயோகிக்கப்படுவதனை பொது முயற்சி எவ்வாறு கண்காணிக்கின்றது என்பதனை மாத்திரம் அவரால் அவதானிக்க முடியும். அவ்வாறே, அரசாங்கக் கொள்கை தொடர்பான விடயங்களை விசாரிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. இருப்பினும் பிரயோகித்தக்க கொள்கைக்கு அமைய அவ்வறான தீர்மானம் எந்தளவு சிறப்பகாக பொதுத் துறை நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்டுள்ளது எனவும் தொடர்புடைய நியமங்களிற்கு அமைய தீர்மானமெடுத்தல் செயன்முறை இடம்பெற்றுள்ளதா எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விசாரணை செய்ய முடியும். கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் பகுதியளவிலான நீதித்துறை தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு குறித்த அதிகாரச்சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது உள்ளூராட்சி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் தொடர்பில் மிகை அறவீடுகளை விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## எமது சேவைபெறுனர் அடிப்படை

கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்கக் கம்பனிகள் தவிர்ந்த பின்வரும் சகல பொதுத்துறை நிறவனங்களுடன் தொடர்புடைய 1500 இற்கும் மேற்பட்ட நிதிக்கூற்றுக்கள் ∴ கணக்குகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அரசாங்க அமைச்சுக்கள் | 54 |
| அரசாங்க திணைக்களங்கள் | 92 |
| மாவட்டச் செயலகங்கள் | 25 |
| பொது முயற்சிகள் | 181 |
| நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 77 |
| ஏனைய சுயாதீன நிறுவகங்கள் | 22 |
| விளையாட்டுச் சங்கங்கள் | 42 |
| கமத்தொழில் சேவை நிலையங்கள் | 557 |
| வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்கள் | 145 |
| உள்ளூராட்சி அதிகாரசபைகள் | 335 |
| மாகாண சபைகள் | 09 |

அரசாங்க அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் தொடர்பான வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளை சான்றுறுதிப்படுத்தல், பொது முயற்சிகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பான முகாமைத்துவ அறிக்கைகளையும் பிரசித்தப்படுத்தும் அறிக்கைகளையும் வெளியிடுதல், வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய முகாமைத்துவ அறிக்கைகளை வெளியிடுதல், மாகாண சபைகளுக்கான முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்தல் என்பனவும் பாராளுமன்றத்தில் சம்ப்பித்தல் என்பனவும் இடம்பெறுவதுடன் மேலதிகமாக மாகாண சபைகளின் நடவடிக்கைகள் தொடர்பான விபரமான அறிக்கைகளும் மாகாண கணக்குகள் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நோக்கில் தொடர்புடைய மாகாண சபைகளில் முன்வைக்கப்படுகின்றது. கமத்தொழில் நிலையங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்ட போதிலும், அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதில்லை.

விளையாட்டுச் சங்கங்களின் அநேகமான நிதிக்கூற்றுக்கள் பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்கறிஞர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்படுவதுடன், இல்கை கிரிக்கட், ஒலிம்பிக் சங்கத்தின் நடவடிக்கைகள், கைப்பந்து உள்ளிட் 5 சங்கங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் திணைக்களத்தினால் நேரடியாக மேற்கொள்ளப்படுவதுடன் இச்சங்கங்களின் கணக்காய்விலிருந்து எழுகின்ற முக்கிய அதவதானிப்புகள் விளையாட்டுக்கள் அமைச்சின் கீழ் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது.

## எமது நிறுவனக் கட்டமைப்பு

திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 06 மட்டங்களைக் கொண்டதாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிலை எனும் முதலாம் மட்டம் திணைக்களத் தலைவராவதுடன் சகல ஊதியம், படிகள் மற்றும் நிர்வாக நோக்கங்களிற்காக அவர் அமைச்சுச் செயலாளருக்கு இணையானவராவார். புதிய நிறுவனக் கட்டமைப்பின் படி மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் காணப்படுவதுடன் குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பு அங்கீகரிக்கப்படும் வரை பதிற்கடமை அடிப்படையில் அப்பதவிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள், செயலாற்றல் கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் திணைக்களத்தின் கணக்குகள் அத்துடன் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியும், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய மத்திய அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மாகாண கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் மிகை அறவீட்டு நடவடிக்கைகள் கணக்காய்வு தொடர்பில் ஒரு மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பதவிகள் இரண்டாம் மட்டத்தில் உள்ளவையாகும்.

திணைக்கள நிறுவனக் கட்டமைப்பில் மூன்றாவது நிலை பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதுடன் தற்போது மத்திய அரசாங்க நடவடிக்கைகளுக்காக பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 10 பிரிவுகளும் மாகாணங்களுக்காக இரண்டு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 2 பிரிவுகளும் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்விற்காக ஒரு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் புலனாய்வு மற்றும் மிகை அறவீடுகளிற்காக மேலுமொரு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் இறுதியாக தரக் கட்டுப்பாடு, இயலளவு அபிவிருத்தி மற்றும் சேவை நடவடிக்கைகளிற்காக இன்னொரு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுமாக 15 பிரிவுகளைக் கொண்டு செயற்படுகின்றது.

கணக்காய்வு நேரடிக் கண்காணிப்பு நடவடிக்கைகள் உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் நான்காவது மட்டத்தினராவர், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் காணப்பட வேண்டியதுடன் அதில் 08 பேர் தொழில்சார் தகைமை கொண்ட கணக்காளர்களாகவும், மேலும் மூவர் பொறியியல், சட்டம் மற்றும் கணனி தொடர்பான தொழில்சார் தகைமை கொண்டோர்களாகவும் காணப்பட வேண்டிய போதிலும், அப்பதவிகளை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்படாமையால் ஆட்சேர்த்தல் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை.

நிறுவனக் கட்டமைப்பில் ஐந்தாம் மட்டத்தில் கணக்காய்வு அத்தியட்சகர்கள் உள்ளனர். அவர்கள் கணக்காய்வினை செயற்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுவதுடன், இறுதி மட்டத்தில் கணக்காய்வுப் பரீட்சகர்கள் உள்ளனர். அவர்கள் அலுவலக மற்றும் வெளிக்கள கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கணக்காய்வுப் பரீட்சகர்கள் நிறுவனக் கட்டமைப்பில் ஆறாவது மட்டத்தில் உள்ளனர்.

இதன்படி கிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்தக் கள உத்தியோகத்தர்கள் திட்டமிடப்பட்டவாறு இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க களப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாக அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர்.

2014 யூன் 30 இல் உள்ளவாறான நிறுவன மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு கீழே விளக்கப்பட்டுள்ளது.

அதிபதி

**மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி (SMPE)**
சேவை, முகாமைத்துவம், செயலாற்றல் மற்றும் சுற்றாடல்

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (PES)**
செயலாற்றல் மற்றும் சுற்றாடல்

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (CQS)**
இயலளவு அபிவிருத்தி, தரக் கட்டுப்பாடு மற்றும் சேவைகள்

**உகதஅ (ST)**
செயலகம்

**உகதஅ (PE)**
செயலாற்றல்

**உகதஅ (AD)**
நிர்வாகம்

**உகதஅ (PL)**
தொழில்நுட்ப மற்றும் பாராளுமன்ற

**உகதஅ (IT)**
தகவல் தொழில்நுட்பம்

**உகதஅ (RA)**
அச்சிடல் மற்றும் அறிக்கையிடல்

**மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி (CGSE))**
(மத்திய அரசாங்க மற்றும் துறைவாரியான

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (EHS)**
(சக்தி, வீடமைப்பு, ஊழியர் மற்றும் விளையாட்டு)
**உகதஅ** – EH(1) EH(2) LS (1) LS (2)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (YS)**
(காணி, பெருந்தோட்டம், நீர்ப்பாசனம், இளைஞர் அலுவல்கள **உகதஅ**

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (JPS)**
(நீதி மற்றும் பாராளுமன்ற அலுவல்கள்)
**உகதஅ** JP(1) JP(2)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (ECS)**
(கல்வி மற்றும் சுகாதாரம் )
**உகதஅ** EC (1) EC (2) HM

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (DES)**
(பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி )

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (TMS)**
(தொலைத்தொடர்பு மற்றும் ஊடகத்துறை )

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (TCS)**
(வியாபாரம் மற்றும் வர்த்தகம் ) AAG TC (1) TC (2)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (FBS)**
(நிதி மற்றும் வங்கி) **உகதஅ**

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (FBR)**
(நிதி மற்றும் வருமானம்) **உகதஅ** FR (1) Fr (2)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (RTS)**
(வீதி மற்றும் போக்குவரத்து) (RTS) **உகதஅ** (RT)

**மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி (PZIA)**
(மாகாண மற்றும் வலயக் கணக்காய்வு)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (PZN-1)**
மாகாண வலயம் – 1
**உகதஅ** (UV,SG,SN, WP-1,WP 2)

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (PZN-2)**
மாகாண வலயம் -2
**உகதஅ** (CL – 1,CL-2, NW,NC,NN -1,NN-

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (ISS)**
புலனாய்வு மற்றும் மிகைஅறவீடு

**உகதஅ (SY)**
(முறைமை அபிவிருத்தி மற்றும் உள்ளகக்

**உகதஅ (EG)**
(பொறியியல்)

**உகதஅ (LE)**
(சட்டம்)

**உகதஅ (IS)**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆ

## எமது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு நிலைமை

2013 திசெம்பர் 31 மற்றும் 2014 யூலை 31 இல் உள்ளவாறான ஊழியர் கோப்பு நிலைமை பின்வருமாறு இருந்தது.

| வகுதி | அங்கீகரிக்கப்பட்டது | | உள்ளபடியானது | | வெற்றிடங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஏ | பீ | ஏ | பீ | ஏ | பீ |
| **கணக்காய்வுப் பதவியணி** | | | | | | |
| மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 03 | 03 | - | - | 03* | 03* |
| பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 15 | 15 | 06 | 12 | 09 | 03 |
| உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 44 | 44 | 32 | 22 | 12 | 22 |
| கணக்காய்வு அட்தியட்சகர்கள் | 288 | 288 | 172 | 177 | 116 | 111 |
| கணக்காய்வு பரிசோதகர்கள் | 1,200 | 1,200 | 817 | 804 | 383 | 396 |
| **கணக்காய்வல்லாத பதவியணி** | | | | | | |
| பணிப்பாளர்- நிர்வாகம் | 01 | 01 | 01 | 01 | - | - |
| உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம் | 01 | 01 | - | - | 01 | 01 |
| கணக்காளர்கள் | 02 | 02 | 02 | 02 | - | - |
| அ.மு.உ.சே. மேற் தரம் | 03 | 03 | 01 | 01 | 02 | 02 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் - விசேட | 01 | 01 | - | - | 01 | 01 |
| நூலக அதிபர் | 01 | 01 | 01 | 01 | - | - |
| அர. முகாமைத்துவ உதவியாளர் சேவை. | 121 | 121 | 86 | 91 | 35 | 30 |
| மொழி பெயர்ப்பாளர் | 10 | 10 | 06 | 06 | 04 | 04 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் -1 | 01 | 01 | - | - | 01 | 01 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | 01 | 01 | - | - |
| அறிக்கை செயன்முறைப்படுத்துனர் | 54 | 54 | 50 | 50 | 04 | 04 |
| சாரதிகள் | 23 | 23 | 19 | 17 | 04 | 06 |
| அலவலக உதவியாளர் சேவை | 148 | 148 | 98 | 121 | 50 | 27 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர்கள் | 10 | 10 | 01 | 01 | 09 | 09 |
| **மொத்தம்** | **1 ,927** | **1,927** | **1,293** | **1,307** | **634** | **620** |

அ - 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆ – 2014 யூலை 31 இல் உள்ளவாறு

* பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் 2014 யூலை 31 இல் உள்ளவாறும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு ஆளணிக் கோப்பு 1,550 ஆக இருந்தது. 2013 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு

கணக்காய்வு பதவியணியில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 523 ஆக காணப்பட்டதுடன் அது 2013 யூலை 31 இல் உள்ளவாறு 535 ஆகக் காணப்பட்டமையால் திணைக்களம் 35 சதவீத வெற்றிடங்களுடன் இயங்கிவந்திருந்தது.

2014 யூலை 31 இல் உள்ளவாறு நேரடியாகக் கணக்காய்வில் ஈடுபடும் கணக்காய்வு அட்தியட்சகர் மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர்களின் பதவிகளில் மாத்திரம் அங்கீகரித்த ஆளணியில் 507 அல்லது 34 சதவீத வெற்றிடங்கள் நிலவியமையை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இது எமது திணைக்களத்தின் சுமுகமான செயற்பாடுகளில் பாதகமான விளைவை ஏற்படுத்தியிருந்தது.

## இலங்கை கணக்காய்வுச் சேவை

இலங்கை கணக்காய்வுச் சேவை ஆளணிக் கோப்பு மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள், 15 பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள், 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள், மற்றும் 288 கணக்காய்வு அத்தியட்சகர் அடங்கிய சிரேஷ்ட நடுத்தர முகாமைத்துவ மட்டங்களைக் கொண்டுள்ளது. 15 பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளில் இருவரை திறந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கணக்காய்வை பல்வேறு அணிகளைக் கொண்ட (Multidecipilinary Culture) ஆட்களை உள்ளடக்கி மேற்கொள்வதற்கான முயற்சியாக 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளில் 8 பேர் பூரணத் தகைமை கொண்ட கணக்காளர்களிற்கும், சட்டம், கணனி ஆற்றல் மற்றும் பொறியியல் தகைமை கொண்டோர்களில் ஒருவர் வீதம் 3 பதவிகளும் உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளுக்காக ஒதுக்கப்பட்டு புதிய அங்கீகரித்த ஊழியர் கோப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கணக்காய்வு பரிசோதகர் சேவை

இலங்கை கணக்காய்வு பரிசோதகர் சேவையின் ஆளணிக் கோப்பு 1,200 கள மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளதுடன் இது கணக்காய்வுப் பரிசோதகர் I மற்றும் II ஆம் தரங்களை உள்ளடக்கிய எண்ணிக்கையாகும். கணக்காய்வைச் செயற்படுத்துவதற்கு இந்த உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இலங்கை கணக்காய்வுப் பரிசோதகர் சேவை மீதான சேவைப் பிரமாணக் குறிப்பின் படி தரம் II இற்கான ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை ஊடாக மாத்திரமே இடம்பெறுகிறது. தற்போதுள்ள ஏற்பாடுகளின் படி கணக்காய்வுப் பரீட்சகர் II ஆந் தரத்தில் 10 ஆண்டு கால திருப்திகரமான சேவையினைக் கொண்டுள்ள மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளில் சித்திபெற்று ஒழுக்காற்று குற்றச்சாட்டுக்கள் இல்லாத உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் நேர்முகப் பரீட்சை சபையின் சிபார்சின் மீது முதலாம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படுகின்றனர்.

## நலன்புரிச் சங்கம்

திணைக்களத்தின் தலைமையகத்தில் 30 ஆண்டுகளிற்கும் மேலாக நடாத்தி வரப்படுகின்ற நலன்புரிச் சங்கத்தின் நடவடிக்கைகளை மறுசீரமைத்தல் 2013 இன் இறுதிப் பகுதியிலும் 2014 இன் ஆரம்பப் பகுதியிலும் இடம்பெற்றது. நலன்புரிச் சங்கம், அசரண சரண நிதியம் மற்றும் மதியநேரக் காப்பக நிதியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து திணைக்களத்தின் புதிய நலன்புரிச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. திணைக்களத்தின் சகல தரங்களிலுமுள்ள உத்தியோகத்தர்களுக்கும் இதில் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் யாப்பு திருத்தியமைக்கப்பட்டதுடன் பழைய நலன்புரிச் சங்கத்தினதும் அசரண சரண நிதியத்தினதும் அங்கத்தவர்களுக்கு புதிய நலன்புரிச் சங்கத்தில் அங்கத்துவம் வழங்கப்பட்டது.

புதிய சங்கத்தின் நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 7 இலிருந்து ரூபா 50 வரை அதிகரிக்கப்பட்டதுடன், 2014 மார்ச் மாதத்தில் “தெவியொத் தன்னே நே” என்ற மேடை நாடகம் அரங்கேற்றப்பட்டு ரூபா 3 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகை நிதியத்திற்கு திரட்டப்பட்டது. அங்கத்தவர்கள் விலகிச் செல்கையில் / மரணிக்கையில் அல்லது ஓய்வு பெறுகையில் கொடுப்பனவொன்றை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் ஏற்பாடுகள் யாப்பில் உள்ளடக்கப்பட்டதுடன் திணைக்களச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் சகல அங்கத்தவர்களுக்கும் பிரியாவிடை வைபவத்தை நடாத்துவதற்கும் திட்மிடப்பட்டது. புலமைப் பரிசில் பீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சைகல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை ஆகியவற்றில் விசேட சித்தகளைப் பெறுகின்ற அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையில் நலன்புரி அடிப்படையில் ஆடைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் ஆடைக் கம்பனிகளுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு ஆடைகள் வழங்குதலும் இடம்பெற்றது.

தலைமை அலுவலகத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற நலன்புரிச் சங்கத்திற்கு மேலதிகமாக மத்திய, வட மத்திய, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நலன்பரிச் சங்கங்கள் நடாத்தப்பட்டு அங்கத்தவர்களிடையே அண்ணியோன்ய புரிந்துணர்வை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பௌத்த சங்கம்

திணைக்களத்தின் பௌத்த சங்கம் 2013 ஆம் ஆண்டில் மதரீதியான மற்றும் சமூக செயற்பாடுகள் ஆனேகமானவற்றை மேற்கொண்டது. பௌத்த சங்கத்தின் அனுசரணையில் 2013 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட மதரீதியான நிகழ்வுகள் சமூகப் பொறுப்புக்கள் என்ற அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் சோமாவதி மஹ சே வந்தனாவ மற்றும் முனி சிரிபா நமதிமு சமன்சுரிந்துட பின்தெமு என்ற வெளியீடுகள் பௌத்த சங்கத்தின் அனுசரணையில் வெளியிடப்பட்டன.

# சர்வதேச உறவுகள், பதவியணியினர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

## சர்வதேச உறவுகள்

2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளில் பின்வரும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

2013 மார்ச் 03 முதல் மார்ச் 07 ஆந் திகதி வரை ஐக்கிய நாடுகள் தாபனத்தினதும் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பினதும் செயலமர்வு (22nd UN/INTOSAI Symposium) அவுஸ்திரேலிய வியனா நகரத்தில் இடம்பெற்றதுடன், அச்செயலமர்வில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களும் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன அவர்களும் பங்குபற்றியதுடன் நாடு திரும்பும் வேளையில் ஒஸ்ட்ரியா மற்றும் இத்தாலிய நாடுகளிலுள்ள உயர் ஸ்தாணிகர் அலுவலகங்கள் மற்றும் ஜர்மனியின் பென்க்பார்ட் இலுள்ள இலங்கை தூதுவரின் அலுவலகம் மற்றும் பர்லின் இலங்கை உயர் ஸ்தாணிகர் அலுவலக என்பன கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன.

2013 ஒத்தோபரில் மக்கள் சீனக் குடியரசின் பீஜிங் நகரத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களும் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. யூ.ஜீ.எஸ். விஜேசிங்க அவர்களும் பங்குபற்றியதுடன் நாடு திரும்பும் வேளையில் ரசியாவின் மொஸ்கவ் நகரில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தாணிகர் அலுவலகம் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது.

2014 மார்ச் 03 முதல் 07 ஆந் திகதி வரை ஹங்கேரியாவில் இடம்பெற்ற (ROLE OF SAI IN FIGHTING AGAINST CORRUPTION) ஊழலுக்கு எதிராக உயர் கணக்காய்வு நிறுவனங்களின் வகிபாகம் என்ற தொணிப் பொருளிலான செயலமர்விற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களும் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ்.ஏ.டீ.எஸ்.ஏ. கிரிஸ்டி அவர்களும் பங்குபற்றியதுடன் இப்பயணத்தினிடையே டுபாயிலுள்ள தூதுவரின் அலுவலகம் மற்றும் போலாந்திலுள்ள இலங்கை உயர் ஸ்தாணிகர் அலுவலகம் என்பன கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன.

## சர்வதேசப் பயிற்சிகள்

பின்வரும் கணக்காய்வு அத்தியட்சகர்கள் ஆசிய நாடுகளுக்கான உயர் கணக்காய்வு நிறுவனத்தின் (ASSOSAI) அங்கத்ததுவ நாடுகளில் வழங்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு, பொது வேலைகள் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டுக் கணக்காய்வுகளில் பங்குபற்றியிருந்தனர்.

| உத்தியோகத்தரின் பெயர் | பயிற்சி பெற்ற காலப்பகுதி | பயிற் பெற்ற நாடு |
|---|---|---|
| திருமதி. எஸ். ரத்னவீர | 2013.06.23 – 2013.07.13 | யப்பான் |
| திருமதி. எம்.டீ.எஸ். அமரதுங்க | 2013.11.04 – 2013.11.15 | மலேசியா |
| திரு. என்.ஆர்.எம். தர்மசிரி | 2013.11.11 – 2013.11.15 | கொரியா |
| திரு. எம்.ஜீ. மதரசிங்க | 2013.11.25 – 2013.12.06 | மலேசியா |
| செல்வி. எம்.கே.டீ..என். மாயாகடுவ | 2013.11.18 – 2013.11.27 | தாய்லாந்து |
| திரு. ஏ. சந்ரபால | 2013.12.02 – 2013.12.05 | வியட்னாம் |

## உள்நாட்டுப் பயிற்சிகள்

2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினால் திணைக்களத்தின் ஏனைய கணக்காய்வுப் பதவியணியினருக்கு புதிய புலனாய்வு நடைமுறைகளுடன் இணங்கியவாறு புலனாய்வுகளில் ஈடுபடுவதற்கு பயிற்சி வழங்கப்பட்டது. அதன்படி, 2013 ஆம் ஆண்டில் இரண்டு நாள் பயிற்சி நெறிகள் இரண்டு நடாத்தப்பட்டதுடன் அதன் மூலம் 65 கணக்காய்வுப் பதவியணியினருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அவ்வாறே 2013 இல் சேர்த்துக் கொள்ளப்பட்ட 19 கணக்காய்வு அத்தியட்சகர்களுக்கு புலனாய்வுக் கணக்காய்வு தொடர்பில் குறுங்காலப் பயிற்சி வழங்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் திணைக்களப் பதவியணியினருக்காக வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பயிற்சித் துறை** | **உத்தியோகத்தர் எண்ணிக்கை** | **பயிற்சி வழங்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| நிதிக் கணக்காய்வு | 859 | 11,728 |
| நிர்மாணங்கள் | 60 | 3,360 |
| செயலாற்றல் கணக்காய்வு | 60 | 1,560 |
| புலனாய்வுக் கணக்காய்வு | 30 | 720 |
| உள்ளுராட்சி | 158 | 1,106 |
| பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் | 95 | 560 |
| தலைமைத்துவப் பயிற்சி | 179 | 7,990 |
| கணனி மென்பாகப் பயிற்சி | 06 | 270 |
| கணனி வலைப்பின்னல் பயிற்சி | 03 | 135 |
| இணையதளப் பயிற்சி | 01 | 45 |
| தரவு செயன்முறைப்படுத்தல் பயிற்சி | 01 | 45 |
| புதிய கணக்காய்வு அத்தியட்சகர்கள் | 46 | 3,680 |
| மொத்தம் | 1,498 | 31,199 |

## உள்ளகக் கணக்காய்வாளர்களுக்குப் பயிற்சியளித்தல்

மீளாய்வாண்டில் சுகாதார அமைச்சின் 40 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கும் இலங்கை கடற்படையின் 40 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கும் 5 நாட்கள் பயிற்சிப் பாடநெறி நடாத்தப்பட்டது.

## அரசாங்கக் கணக்காய்வு நாளேடு

2000 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட அரையாண்டுப் பிரசுரத்தின் வெளியீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த நிலைமையினை மாற்றி புதிய செய்தி மடல் சஞ்சிகையொன்றை அரசாங்கக் கணக்காய்வுக் குறிப்பிதழ் என்ற பெயரில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அந்த சஞ்சிகையின் முதலாவது தொகுதி 2014 சனவரி 01 ஆந் திகதி வெளியிடப்பட்டது.

## உயர் கணக்காய்வு நிறுவனங்களின் கொழும்பு சர்வதேச மாநாடு (எஸ்ஏஐஎஸ்)

உலக வங்கியின் இயலளவைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையின் கீழ் “உயர் எதிர்பார்ப்புகள் சந்திப்பு” என்ற தொனிப்பொருளில் இலங்கையின் கொழும்பிலுள்ள சின்னமன் லேக்சைட் ஹோட்டேலில் 2013 யூலை 23 முதல் 25 ஆந் திகதிகளில் சர்வதேச மாநாடொன்று நடாத்தப்பட்டதுடன், அதில் 19 நாடுகள் பங்கேற்றிருந்தன.



# சமய மற்றும் கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள்

கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களக் கணக்காய்வுப் பதவியணியினர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினால் தமக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நியதிச் சட்டக் கணக்காய்வினை நிறைவேற்றுதலில் தம்மை அர்ப்பணித்துள்ளதுடன் அவர்களது பெறுமதிமிக்க சேவை இந்நோக்கத்திற்காக வழங்கப்படுகின்றது. சட்ட பூர்வமான கடமைகளுக்கும், பொறுப்புக்களுக்கும் மேலதிகமாக, திணைக்களத்தின் அலுவலர்கள் யாவரும் தமது சமூகப் பொறுப்புக்களையும் விருப்புடன் நிறைவேற்றுகின்றனர். திணைக்களத்தின் அலுவலர்கள் தமது வேலையை ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று அல்லது முதலாவது வேலை நாளில் சகல மதங்களினதும் ஆசீர்வாதத்துடன் தொடங்குகின்றனர். அத்துடன் ஒவ்வொரு திங்கட்கிழமை காலையிலும் தலைமையலுவலகத்திலுள்ள புத்த பெருமானின் சிலைக்கு முன்னால் புத்தர் பூஜை நடாத்துதலையும் 31 வருடங்களாக தொடர்ந்து செய்கின்றனர். மேலும் முக்கியமான பௌர்ணமி தினங்களில் ஆன்மீக வளர்ச்சிக்காக சமய ரீதியான நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் அரசசேவைக்கு ஒரு முன்மாதிரியாகச் செயற்படுகின்றனர். கிறிஸ்மஸ், தீபாவளி, தைப்பொங்கல் மற்றும் ரம்ழான் விழாக்களில் அலுவலர்கள் ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர். பின்வரும் சமூகச் செயற்பாடுகளை மேற்கொள்தலில் 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சகல அலுவலர்களும் பங்கேற்றனர்.

2013 ஆம் ஆண்டில் பின்வரும் சமூக மற்றும் சமய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ருவன்வெலிசாய விஹாரையில் கப்ருக் பூசை

(ஆ) தூபாராம விஹாரையில் கப்ருக் பூசை

(இ) சிவனொளிபாத மலையில் கப்ருக் பூசை





**தூபாராமையின் அருகிலுள்ள பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களைப் பகிர்ந்தளித்தலும் துபாராமை வெஹர வஹன்சே இற்கு கப்ருக் பூசையும்**

## கணக்காய்வுத் தின கொண்டாட்டங்கள் - 2014 மார்ச் 19

2014 மாா்ச் 19 ஆந் திகதி கணக்காய்வாளா் தலைமை அதிபதித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினதும் கிளைகளினதும் பங்குபற்றலுடன் விசேட வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது. பிரதான அலுவலகத்தில் பௌத்த பூசையுடன் ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வுத் தினத்தில் இரத்த தான நிகழ்ச்சி, சுதேசிய மற்றும் மேலைத்தேய மருத்துவ சிகிச்சையளித்தல், பிரசித்திபெற்ற சொற்பொழிவாளா் திரு லால் பொன்சேகா அவா்களால் நோ் மனப்பாங்கு என்ற தொணிப்பொருளில் விசேட சொற்பொழிவு என்பன நடாத்தப்பட்டதுடன் ஊவா, வட மத்திய, வடக்கு, கிழக்கு, வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் உதவிக் கணக்காய்வாளா் தலைமை அதிபதிகளால் இரத்தான நிகழ்வு, அலுவலகத்தை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சி, விசேட சொற்பொழிவு, விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டன.





# பகுதி - II

# எமது செயலாற்றல் மீதான அறிக்கை

# அரசாங்கக் கணக்காய்வினால் நாட்டிற்குக் கிடைத்தவை

## நகர அபிவிருத்தி அதிகாரசபை

சனாதிபதிச் செயலாளரின் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக, பல்வேறு அரசாங்க நிறுவனங்களிற்குரிய 78 வாகனங்கள் அகற்றப்படாது நீண்ட காலமாக செத்சிரிபாய I மற்றும் II ஆம் கட்ட வளவுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபை

கொழும்பு 15 டயஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடமைப்புத் திட்டத்தின் I ஆம் கட்டம் மற்றும் திசாநாயக வத்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளுக்கு வர்ணம் பூசி புதுப்பித்தல் ஒப்பந்தம் தொடர்பான கொடுப்பனவின் போது பின்வரும் பொய்யான செலுத்துதல்கள் இடம்பெற்றிருந்தன.

| | | ரூபா |
|---|---|---|
| (அ) | விநியோகிக்கப்படாத 6 நீர் தாங்கிகளுக்கான கொடுப்பனவு | 180,000 |
| (ஆ) | டயஸ் பிரதேச வீடமைப்புத் திட்டத்தின் கழிவறை மற்றும் குளியலறையினைத் திருத்துவதற்கான மதிப்பீட்டுள்ள 15 செய்யப்படாத வேலைகளிற்காக கொடுப்பனவு செய்தல் | 544,277 |
| (இ) | விநியோகிக்கப்படாத தற்காலிக கழிவறைகளுக்கான கொடுப்பனவு | 153,000 |
| (ஈ) | திசாநாயக வத்த வீடமைப்புத் திட்டத்தின் கழிவறை மற்றும் குளியலறையினைத் திருத்துவதற்கான மதிப்பீட்டுள்ள செய்யப்படாத வேலைகளிற்காக கொடுப்பனவு செய்தல் | 2,012,529 |
| (உ) | மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் விநியோகிக்கப்படாத மேலதிக கழிவறைகளுக்கான கொடுப்பனவு | 510,000 |
| | | ------------------ |
| | **மொத்தம்** | **3,399,806** |
| | | ========= |

## நீர்ப்பாசனத் திணைக்களம்

பொலன்னறுவை மாவட்டத்தின் மெதிரிகிரிய மற்றும் லங்காபுர பிரதேச சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள கஹம்பிலியா ஓய பெருக்கெடுப்பதனை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தினால் கஹம்பிலியா ஓயவின் பெருக்கெடுக்கும் இடங்கள் மற்றும் தடைகளை அகற்றுவதற்காக கும்புக், மதுரம் மற்றும் கோன் போன்ற பெறுமதியான 1885 மரங்களை வெட்டி அகற்றுவதற்கு திட்டமிட்டிருந்ததுடன், கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியளவில் ஏறத்தாழ 250 மரங்கள் வெட்டப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இன் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் 1993 யூன் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தலின் படி 5 ஹெக்டயார்களிற்கு மேற்பட்ட காணிகள் பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற

செயற்திட்டங்கள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், 25 ஹெக்டயர்களிற்கும் மேற்பட்ட இடப்பரப்பில் அமைந்துள்ள இச்செயற்திட்டத்திற்காக அவ்வாறான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதகுகளை அமைத்தல் உள்ளடங்கலான மேற்படி செயற்திட்டத்திற்காக சாத்தியக்கூற்று ஆய்வொன்று அல்லது பொறியியல் ஆலோசனைகளைப் பெற்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்திற்காக நிதிப் பிரேரணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மரங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றின் வேர்களை அகற்றுவதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அகற்றப்பட்ட மரங்கள் உரியவாறு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்காக முறையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

(உ) செயற்திட்டத்திற்காக பங்குபற்றுகின்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்களிடையே முறையான ஒருங்கிணைப்பு காணப்படவில்லை.

## மொனராகலை பிரதேச செயலகம்

2006-2011 காலப்பகுதியினுள் சமுர்த்தி “சிப்தொர” தொலைநோக்கு கல்வி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மரணம், விவாகம் மற்றும் மகப்பேற்று நிகழ்வுகளிற்காக கொடுப்பனவுகளைச் செலுத்துகையில் முறையே முறையே ரூபா 3,407,300 தொகையும் ரூபா 1,252,680 தொகையுமாக மொத்தம் ரூபா 4,659,980 தொகை மோசடியாக செலுத்தப்பட்டிருந்தது.

## தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

2006 யூன் 30 ஆந் திகதியிலிருந்து 2011 சனவரி 24 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் தேயிலைக் கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 30,270,000 பெறுமதியான 22 உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்ததுடன் முற்பணங்களைச் செலுத்துவதற்கான பிணைமுறிகளின்றியும் வழங்கப்பட முடியுமான 20 சதவீத வேலை ஆரம்பித்தல் முற்பணத்தினை மிகைத்தும் 17 சந்தர்ப்பங்களில் ரூபா 22,638,000 கூட்டுத்தொகை வழங்குனர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி 22 உடபடிக்கைகளில் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிற்குரிய 06 உடன்படிக்கைகள் தொடர்பில் தேயிலைக் கன்றுகளை வழங்குவதற்காக ஒரு மாதம் முதல் பதின்மூன்று மாதங்கள் வரையான காலதாமதம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2008 திசெம்பர் 29 ஆந் திகதி மேலும் 10 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டு ரூபா 9,000,000 முற்பணமும் 2011 சனவரி 24 மற்றும் 2011 சனவரி 26 ஆந் திகதிகளில் மேலும் சில உடன்படிக்கைகள் தொடர்பில் ரூபா 3,600,000 வீதம் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 7,200,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 மே 27 ஆந் திகதி வரை 2 ½ முதல் 4 ½ ஆண்டுகளில் வெளித்தரப்பினரால் தீர்க்கப்படாதுள்ள தொகை ரூபா 18,034,507 ஆக காணப்பட்டதுடன், அத்தொகையின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 5,687,260 வட்டித் தொகையும் திணைக்களக் கட்டணமான ரூபா 5,930,442 தொகையும் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மக்கள் சீனக் குடியரசிடமிருந்து இயந்திரங்களைக் கொள்வனவு செய்யப்படல்.

பொருறாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 அம் ஆண்டில் அரசாங்க அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம், மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கமத்தொழில் சேவைகள் மற்றும் வன சீவராசிகள் அமைச்சு, மத்திய பொறியியல் மதியுரைச்சேவைப் பணியகம், இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு வழங்குவதற்காக 725 இயந்திரங்கள் மக்கள் சீனக் குடியரசின் கம்பனியொன்றிடமிருந்து கடன் அடிப்படையில் யூஎஸ்டொலர் 115,853,893 (ரூபா 14,504 மில்லியன்) பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

2011 யூன் 01 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கும் அக் கம்பனிக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்ததுடன், அமைச்சரவைத் தீர்மானத்தின் 3.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் சார்பில் பொதுத் திறைசேரியின் செயலாளரினால் அக்கம்பனியுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

கடன் அடிப்படையில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அந்த வெளிநாட்டுக் கம்பனிக்கு கடன் தொகையின் கடன் தவணைப்பணமாகவும் வட்டியாகவும் ரூபா 3,454 மில்லியன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன் தொகை அரசாங்கக் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## இலங்கைச் சுங்கம்

1869 இன் சுங்க கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 164 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் படி இலங்கைச் சுங்கத்தினால் விதிக்கப்பட்ட தண்டங்களை திருத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ ஆன அதிகாரம் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் கூட அவ்வறான முறையினைப் பின்பற்றாது இறக்குமதி செய்யப்பட்ட 7614.10 ஆம் வகைப்படுத்தல் இலக்கம் கொண்ட (Harmonized System Classification) பொருள் 8544.60 இலக்கம் கொண்டதாக பொய்யாக காண்பித்துள்ளதாக அறிவித்து முழுமையாகவே அரசாங்க நிறுவனமான இலங்கை மின்சார சபையிடமிருந்து ரூபா 208,283,881 தண்டப்பணம் அறவிடப்பட்டு அதில் 50 சதவீதம் அவதாவது ரூபா 104,141,940 தொகை சில உத்தியோகத்தர்களிற்கு வெகுமதி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தமையும், 20 சதவீதம் அல்லது ரூபா 41,656,776 உத்தியோகத்தர்களின் நலன்புரிக்காக ஒதுக்கப்பட்டிருந்தமையும் உரியவாறு சம்பளங்கள், ஊக்குவிப்புப் படிகள், மேலதிக நேரங்கள் மற்றும் ஏனைய படிகளைப் பெறுகின்ற சுங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு இவ்வாறு ரூபா 60,000,000 வெகுமதியாகச் செலுத்துதல் நாட்டிலுள்ள அரசாங்க சேவைகளின் சம்பளங்கள் தொடர்பில் காணப்படுகின்ற பாரிய முரண்பாடாகவும் ஏனைய அரசாங்கத்துறை நடவடிக்கைகளிற்கு வழங்கப்பட்டுள்ள நிலமை தொடர்பில் காணப்படுகின்ற பாரிய அநீதியாகவும் காணப்படுகின்றது. நவீன தேவைப்பாடுகளிற் கேற்ப திருத்தப்படாதுள்ள ஏற்பாடுகளுடன் கூடிய சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துவதற்கு பொறுப்பு வாய்ந்தவர்களின் கவனம் திரும்பியிருக்காத இன்னொரு துறை இதுவாகும்.

## மிகை அறவீடு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226(1) ஆம் உப பிரிவு, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 182(1) ஆம் உப பிரிவு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் உப பிரிவு என்பவற்றின் படி சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது தவறிழைப்புகள் மற்றும் கணக்குகளில் காட்டப்பட வேண்டிய போதிலும் காண்பிக்கப்பட்டிருக்காத விடயங்கள் சம்பந்தமாக மிகை அறவீட்டினை விதிக்கும் அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உள்ளது.

அதன் படி, 2008 சனவரி முதல் 2012 திசெம்பர் 31 வரையான காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் 392 உத்தியோகத்தர்களிற்கு எதிராக ரூபா 29,258,218 கூட்டுத் தொகைக்கான 48 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 2014 மே 31 ஆந் திகதி வரை ரூபா 1,006,303 மொத்தமான தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

2013 ஆம் ஆண்டினுள் ரூபா 3,738,830 கூட்டுத் தொகைக்கான 10 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் 104 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2014 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 245,205,168 கூட்டுத் தொகைக்கான 08 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் 96 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

# பகுதி – III

# நிதிக்கூற்றுக்கள்

# நிதிக்கூற்றுக்கள்

வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட சொத்துக்களை இச்செயன்முறையின் அறிமுகப்படுத்தலின் ஊடாக நிதிக்கூற்றுக்களில் கூட்டிணைத்தலின் மூலம் அவற்றின் கட்டப்பாடு, நாட்டின் சார்பாக அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களை கணிப்பிடுதல் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிகின்றது. அத்துடன் இம்முறைமையில் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்யப்படுவதனால் வருமானங்களை சேகரிப்பதற்கும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

## வருடாந்த ஒதுக்கீடுகள்

முன்னைய ஆண்டிற்கான 1,088 மில்லியன் ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் திணைக்களத்திற்கான 2013 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு ரூபா 1,024 மில்லியன் ஆகும். மொத்த ஏற்பாடுகளில், சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையால் நிதியிடப்பட்ட இயலளவை கட்டியெழுப்புதலுக்கான செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 263 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டிற்கான ரூபா 216 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவினம் ரூபா 153 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் என்பவற்றிலிருந்து கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 97 மில்லியன் சேகரிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 45 மில்லியனாக காணப்பட்ட போதிலும், அந்த மதிப்பீட்டினை ரூபா 52 மில்லியனால் மிகைத்து மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்தை சேகரிக்க முடிந்திருந்தது.

## வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

சொத்துக்களைக் கட்டுப்படுத்தல், செயற்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றை அளவிடுவதற்கான கருவியொன்றாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆரம்பப் படி 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காலணித்துவக் காலம் முதல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு வந்திருந்த நிறுவனம் என்ற விகையில் முதல் முறையாக திணைக்களத்தில் இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ சுற்றறிக்கையின் மூலம் இம்முறைமை சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் 2013 ஆம் அண்டிலிருந்து அறிமுகப்படத்தப்பட்டுள்ளது. இம்முறையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து திணைக்களத்தின் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுப் பின்பற்றல்கள் நூறு சதவீதம் அடையப்பட்டிராவிடினும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அரம்பப் படியாக திணைக்களம் அரசாங்கத் துறைக்கு முன்னுதாரணமொன்றை வழங்கியுள்ளது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்
## 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

| மதிப்பீடு 2013 | | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| *ரூபா.000* | | | *ரூபா.000* | *ரூபா.000* |
| | **வருமானம்** | | 104,185 | 90,589 |
| 45,000 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 1 | 134 | 215 |
| 200 | வாடகை | | 10,303 | 11,155 |
| 9,000 | வட்டி | | - | 187 |
| - | தண்டப்பணமும் கோரப்படாதவைகளும் | | 2,225 | 4,941 |
| 2,000 | ஏனையவை | | 571 | 739 |
| - | கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் மீதான இலாபம் | 2 | | |
| **56,200** | **மொத்த செயற்பாடு வருமானம்** | | **117,418** | **107,826** |
| 747,180 | மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம் | 3 | 736,482 | 744,980 |
| 803,380 | **மொத்த வருமானம்** | | **853,900** | **852,806** |
| | **செலவினம்** | | | |
| 638,080 | தனியாள் ஊதியங்கள் | 4 | 635,327 | 606,614 |
| 21,900 | பதவியணியினர் பயணங்கள் | 5 | 19,425 | 15,212 |
| 16,500 | வழங்கல்கள் | 6 | 15,498 | 13,048 |
| 14,200 | பேணுகைகள் | 7 | 9,746 | 6,366 |
| 48,519 | சேவைகள் | 8 | 42,268 | 44,587 |
| 10,114 | மாற்றீடுகள் | 9 | 10,054 | 9,073 |
| 1,000 | பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும் | | 316 | 174 |
| - | பெறுமானத்தேய்வு | 10 | 73,774 | 60,563 |
| 26,000 | அரசாங்கத் துறை இயலளவைக் கட்டியெழுப்புதல் செயற்திட்டத்தின் மீண்டெழும் செலவினம் | | 25,058 | 44,541 |
| 67 | அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு பதிவழித்தல் | | 67 | - |
| 27,000 | கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரய காலக்கழிவு | | 25,607 | 22,944 |
| **803,380** | **மொத்த செலவினம்** | | **857,140** | **823,122** |
| | **செலவினங்களுக்கு மேலான வருமான மிகை/(பற்றாக்குறை)** | | **(3,240)** | **29,684** |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

## 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2013 திசெம்பர் 31 | | 2012 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|
| | | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசு மீதி | | - | | 15 | |
| தீர்க்கப்படாத கட்டுநிதி முற்பணங்கள் | | | | - | |
| அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் | 12 | 251,605 | | 265,787 | |
| பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 13 | 189,456 | | 193,086 | |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | | 441,061 | | 458,888 |
| கணக்காய்வு முறைகளின் அபிவிருத்தி | 11 | | 207,522 | | 206,496 |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 10 | | 1,027,548 | | 1,010,046 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | | | 179,064 | | - |
| **மொத்த சொத்துக்கள்** | | | **1,855,195** | | **1,675,430** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | 14 | 162,892 | | 1,699 | |
| வாகனங்களிற்கான நாணயக்கடிதத்திற்காக செலுத்தவேண்டியவை | | - | | 15 | |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | | 8,456 | | 43,878 | |
| வைப்புகள் - செலுத்தவேண்டியவை | | | **171,348** | | **45,592** |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| **திரட்டிய நிதியம்** | | | | | |
| சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | | 191,387 | | 161,703 | |
| ஆண்டிற்கான மிகை/ | | (3,240) | | 29,684 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (பற்றாக்குறை) | | | | | |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | | **188,147** | | **191,387** |
| **பங்களிப்பு** | | | | | |
| திறைசேரி | 15 | 662,610 | | 653,160 | |
| அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம் | 16 | 834,090 | 1,496,700 | 785,291 | 1,438,451 |
| **வரி செலுத்துனர்களின் மொத்த உரிமைத்துவம்** | | | **1,856,195** | | **1,675,430** |

பக்கங்கள் 28 முதல் 30 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 31 முதல் 35 வரையான குறிப்புகள் என்பன இந் நிதிக்கூற்றுக்களின் பகுதியாகும். இந் நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொறுப்பாகும்.

**எச். ஏ. எஸ். சமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி**

**எஸ்.ஜீ. சேனாரத்ன**
**பிரதான கணக்காளர்**

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. அறிக்கையிடல் நிறுவகம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஸ்தாபிப்பு தொடர்பாக எவ்வித குறித்துரைக்கப்பட்ட சட்டமும் இல்லை. எவ்வாறெனினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(1) மற்றும் (3) ஆம் உறுப்புரைகளில் விதந்துரைக்கப்பட்டவாறு அரசாங்க நிறுவகங்களிற்கு கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதே கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதான பணியாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானதாகும்.

## 2. அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதி சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் தினக்குறிப்பேட்டு ஆண்டாகும்.

## 3. தயாரிப்பிற்கான அடிப்படை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சகல பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

## 4. வருமானம்

திணைக்கள வருமானத்தின் பிரதான மூலங்களாக திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் செலவினத்திற்கான மானியம், கணக்காய்வுக் கட்டணங்கள், கடன்களின் வட்டி, கட்டிடவாடகை, சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களைக் கருத முடிவதுடன் இவை அட்டுறு அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச் சட்ட நிதியங்களில் இருந்து கணக்காய்வுக் கட்டணங்கள் பெறப்படுகின்றன. கட்டணமானது அவை உரித்தான காலப்பகுதிக்குரிய வருமானமாக இனங்காணப்படுகின்றன. கணக்காய்வுக் கட்டணப் பெறுமதியானது கணக்காய்விற்காகச் செலவிடப்பட்ட காலத்தையும் குறித்த கணக்காய்விற்காக செலவிடப்பட்ட ஏனைய நேரடிக் கிரயத்தையும் சார்ந்து தீர்மானிக்கப்படுகின்றது.

கடன்கள் மீதான வட்டி, கட்டிட வாடகைகள், சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களிற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏனைய திணைக்களங்களின் தலைவர்களாக உள்ள போதிலும், திணைக்களத்துடன் தொடர்புபட்ட அந்த வருமானங்கள் சேகரிக்கின்ற உத்தியோகத்தர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதனாலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மொத்த வருமானத்தில் சிறிய சதவீதமொன்றாக காணப்படுவதனாலும் அந்த வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. காசு அடிப்படையில் திறைசேரியின் மீண்டெழும் செலவினத்திற்கான மானியங்கள் கணக்கீடு செய்யப்படுகின்ற போதிலும், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு பெறவேண்டிய மீண்டெழும் செலவினத்திற்கான மானியமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

**5. செலவினம்**

சகல மீண்டெழும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றன.

**6. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்**

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம் பெற்ற திகதியில் நிலவிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றப்படுகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவில் இருந்து விளையும் அந்நிய செலவாணி இலாபங்களும் நட்டங்களும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**7. காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும் கைகளில் உள்ள காசையும் உயர் திரவத் தன்மையுடைய வங்கியுடனான குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

**8. கடன்பட்டோரும் ஏனைய பெறவேண்டியவைகளும்**

கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலும் பொருத்தமான வகையிலும் கணிப்பிடப்படுகின்றது.

**9. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பதில் காணி, கட்டிடம், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கனணி உள்ளடங்கலான அலுவல உபகரணங்கள், மற்றும் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கியுள்ளன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. மீதிகள் முன் கொண்டுவரப்பட்டு முதற் தடவையாக 2009 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 01 அன்று நிலவிய காணிகளும் கட்டிடங்களும் அளவீட்டுத் திணைக்களத்தின் திட்டங்களின் படியும் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன. அரசாங்க மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல மோட்டார் வாகனங்களும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதுடன் தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஏனைய விடயங்கள் மதிப்பீட்டாளர்களின் சுதந்திரமான ஓர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன.

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடிய அல்லது எதிர்காலத்தில் சேவைகளை திணைக்களத்திற்கு உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் என நிச்சயிக்கப்படுவதோடு அவ்விடயங்களின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகின்றது.

அநேக சந்தர்ப்பங்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றன. கிரயம் இன்றி கையேற்கப்பட்ட அல்லது பெயரளவுக் கிரயத்தில் கையேற்கப்பட்ட சொத்தின் கிரயம் அச் சொத்து கையேற்பட்ட திகதியில் உள்ளவாறான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

### 9.1 கைதவிர்ப்புக்கள்

சொத்துக்களின் முன்கொண்டுசென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கைதவிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கைதவிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 9.2 பிந்திய நிகழ்வுக் கிரயம்

அலுவலகத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடியதாக அல்லது எதிர்காலத்தில் சேவைகளை உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பதுடன் அவ்விடயங்களின் கிரயத்தினை நம்பகரமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரமே ஆரம்பக் கொள்வனவை அடுத்து உறப்பட்ட கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன.

### 9.3 பெறுமானத்தேய்வு

சகல பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையின் அடிப்படையில் அவற்றின் கிரயத்திலிருந்து தேறத்தக்க பெறுமதியினைக் கழித்து வரும் தொகைக்கு பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. சொத்துக்களின் பிரதான வகுதிகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரக்கூடிய ஆயுட்காலமும் பெறுமானத் தேய்வு வீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | ஆயுட்காலம் | பெறுமானத்தேய்வு வீதம் |
|---|---|---|
| | ஆண்டுகள் | சதவீதம் |
| கட்டிடங்கள் | 50 | 2.0 |
| சிறிய அளவான அச்சகம் | 20 | 5.0 |
| மின்சாரத் தூக்கி | 20 | 5.0 |
| மோட்டார் வாகனங்கள் | 08 | 12.5 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 05 | 20.0 |
| கணனிகள் மற்றும் மென்பொருட்கள் | 04 | 25.0 |

### 10. செலுத்த வேண்டியவைகள்

ஐந்தொகைத் திகதியில் உள்ள பெறுமதியில் செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்குக் கொண்டுவரப்படுகின்றன. செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

### 11. வருடாந்த மதிப்பீடுகள்

வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பவையே பிரதான மதிப்பீட்டுத் தொகைகளாகும். குறைநிரப்பு மதிப்பீடுகள் அல்லது நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழான மாற்றங்களுக்கான

சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான தொகைகளே இறுதித் தொகைகளாக காட்டப்பட்டுள்ளன.

## 12. தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

கொள்கைகள் பிரயோகிக்கப்படுவதனையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினதும் வருமானங்கள் மற்றும் செலவினங்களினதும் தொகைகளை அறிக்கையிடுவதனையும் பாதிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் இந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுகின்றன. இந்த மதிப்பீடுகளும் ஒருங்கிணைந்த எதிர்வுகூறல்களும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நியாயமானவையாக நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

## நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

குறிப்பு இல.1 கணக்காய்வுக் கட்டணங்கள்

| மதிப்பீடு 2013 *ரூபா.000* | விபரம் | 2013 *ரூபா.000* | 2012 *ரூபா.000* |
|---|---|---|---|
| 45,000 | **பெறுவனவுகள்** | | |
| - | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 42,986 | 28,106 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 16,324 | 9,984 |
| - | கமத்தொழில் சேவை நிலையங்கள் | 489 | 374 |
| 45,000 | | 59,799 | 38,464 |
| | **பெறப்பட வேண்டியவை** | | |
| - | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 16,004 | 37,281 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 26,704 | 14,013 |
| - | கமத்தொழில் சேவை நிலையங்கள் | 1,678 | 831 |
| - | | 44,386 | 52,125 |
| **45,000** | **மொத்தம்** | **104,185** | **90,589** |

குறிப்பு இல. 02 சொத்துக்களின் கைதவிர்ப்பு

| **மதிப்பீடு 2013** | **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|---|
| *ரூபா.000* | **வாகனங்களின் கைதவிர்ப்பு** | *ரூபா.000* | *ரூபா.000* |
| - | வாகனங்களின் விற்பனைப் பெறுமதி | - | 700 |
| - | கிரயம் | - | (591) |
| - | வாகனங்களின் கைதவிர்ப்பு நட்டம் | - | 109 |
| | **அலுவலக தளபாடங்களின் கைதவிர்ப்பு** | | |
| - | அலுவலக தளபாடங்களின் விற்பனைப் பெறுமதி | 710 | 948 |
| - | கிரயம் | (139) | (318) |
| - | அலுவலக தளபாடங்களின் விற்பனை இலாபம் | 571 | 630 |
| - | **சொத்துக்களின் கைதவிர்ப்பு நட்டம்** | 571 | 739 |

குறிப்பு இல.03 மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்பு

| மதிப்பீடு 2013 | விபரம் | 2013 | 2012 திருத்தப்பட்ட |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 747,180 | | | |
| | திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி | 637,650 | 661,473 |
| - | பெறுமானத்தேய்விற்காக பெறவேண்டிய கட்டுநிதி | 73,731 | 60,563 |
| - | **கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரயம்** | 25,058 | 22,944 |
| 747,180 | மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்பு | 736,439 | 744,980 |

குறிப்பு இல. 04 **ஆளுக்குரிய வேதனங்கள்**

| மதிப்பீடு 2013 | விபரம் | 2013 | 2012 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 342,380 | சம்பளங்களும் கூலிகளும் | 340,820 | 348,564 |
| 3,000 | மேலதிக நேர மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவுகள் | 2,584 | 2,619 |
| 292,700 | ஏனைய படிகள் | 291,923 | 255,431 |
| 638,080 | மொத்தம் | 635,327 | 606,614 |

குறிப்பு இல. 05 **பிரயாணச் செலவினம்**

| மதிப்பீடு 2013 | விபரம் | 2013 | 2012 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 13,000 | உள்நாடு | 12,555 | 11,344 |
| 8,900 | வெளிநாடு | 6,870 | 3,868 |
| 21,900 | மொத்தம் | 19,425 | 15,212 |

குறிப்பு இல. 06 **வழங்கல்கள்**

| மதிப்பீடு 2013 | விபரம் | 2013 | 2012 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 9,000 | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 8,652 | 6,677 |

| | | | |
|---|---|---|---|
| 7,000 | எரிபொருள் | 6,398 | 6,204 |
| 500 | உணவுகள் மற்றும் சீருடைகள் | 448 | 167 |
| 16,500 | மொத்தம் | 15,498 | 13,048 |

குறிப்பு இல. 07 **பராமரிப்புச் செலவினம்**

| **மதிப்பீடு 2013** | **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 8,100 | மோட்டார் வாகனங்கள் | 5,406 | 4,821 |
| 2,100 | பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,016 | 1,329 |
| 4,000 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 3,324 | 216 |
| 14,200 | மொத்தம் | 9,746 | 6,366 |

குறிப்பு இல. 08 **சேவைகள்**

| **மதிப்பீடு 2013** | **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 5,000 | போக்குவரத்து | 4,110 | 4,004 |
| 10,000 | தபால் மற்றும் தொடர்பாடல் | 7,915 | 8,047 |
| 13,500 | மின்சாரம் மற்றும் நீர் | 11,212 | 11,437 |
| 700 | வாடகைகள் மற்றும் உள்ளூர் வரிகள் | 622 | 253 |
| 19,319 | ஏனையவை | 18,409 | 20,846 |
| 48,519 | மொத்தம் | 42,268 | 44,587 |

குறிப்பு இல. 09 **மாற்றல்கள்**

| **மதிப்பீடு 2013** | **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 500 | சந்தாக்கள் மற்றும் உதவு தொகைகள் | 440 | 276 |
| 9,614 | அரசாங்க உத்தியோகத்தர் கடன்களிற்கான வட்டி | 9,614 | 8,797 |
| 10,114 | மொத்தம் | 10,054 | 9,073 |

குறிப்பு இல. 10 **பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்**

| | காணி | கட்டிடம் | வாகனங்கள் | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் | தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | சிற்றளவு அச்சகம் | மின் தூக்கி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* |
| **கிரயம்** | | | | | | | | |
| 2013 ஜனவரி 01 இல் மீதி | 253,140 | 569,027 | 88,208 | 105,962 | 55,691 | 2,602 | 7,960 | 1,082,590 |
| சேர்த்தல்கள் | 3,007 | 12,486 | - | 25,095 | 27,540 | 23,421 | 867 | 92,416 |
| | **256,147** | **581,513** | **88,208** | **131,057** | **83,231** | **26,023** | **8,827** | **1,175,006** |
| கைதவிர்ப்புகள் | - | - | - | - | (174) | - | - | (174) |
| 2013 திசெம்பர் 31 இல் மீதி | **256,147** | **581,513** | **88,208** | **131,057** | **83,057** | **26,023** | **8,827** | **1,174,832** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | | | |
| 2013 ஜனவரி 01 இல் மீதி | - | 13,528 | 19,355 | 26,997 | 12,136 | 130 | 398 | 72,544 |
| கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் தேய்வு | - | - | - | - | (35) | - | - | (35) |
| சேர்ப்பனவுகள் | - | 11,630 | 11,026 | 32,764 | 16,612 | 1,301 | 441 | 73,774 |
| 2013 திசெம்பர் 31 இல் மீதி | **-** | **25,158** | **30,381** | **59,761** | **28,713** | **1,431** | **839** | **146,283** |
| **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்கொண்டு சென்ற தொகை** | **256,147** | **556,355** | **57,827** | **71,296** | **54,344** | **24,592** | **7,988** | **1,028,549** |

குறிப்பு இல. 11 **கணக்காய்வு முறையினை அபிவிருத்தி செய்தல் கிரயம்**

| **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 206,496 | - |
| ஆண்டிற்கான செலவினம் | 26,633 | 229,440 |
| காலக்கழிவு (வருடத்தின் மொத்தச் செலவினத்தில் 10சதவீதப் படி) | (25,607) | (22,944) |
| 2013 திசெம்பர் 31 இல் மீதி | **207,522** | **206,496** |

குறிப்பு இல. 12 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள்

| **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| திணைக்களத்தில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய | 248,265 | 263,572 |

| | | |
|---|---|---|
| மொத்தத் தொகை | | |
| திணைக்களத்திலிருந்து இடமாற்றத்தில் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை | 1,730 | 285 |
| மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து | 435 | 977 |
| பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து | 580 | 560 |
| பதவி முடிவிற்கு கொண்டு வரப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து | 595 | 514 |
| கடன் மன்ற மீதி | - | 6 |
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குத் தீர்க்கப்பட வேண்டிய மீதிகளின் மொத்தம் | - | (127) |
| மொத்தம் | **251,605** | **265,787** |

குறிப்பு இல. **13** **பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்**

| **விபரம்** | **2013** | **2012** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| அபிவிருத்தி மன்றங்கள் | 30 | 30 |
| மாநகர சபைகள் | 22,706 | 18,207 |
| நகர சபைகள் | 47,732 | 45,401 |
| பிரதேச சபைகள் | 24,443 | 25,247 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 86,153 | 97,182 |
| கமத்தொழில் சேவைகள் நிலையங்கள் | 8,392 | 7,019 |
| மொத்தம் | **189,456** | **193,086** |

குறிப்பு இல. **14 – செலுத்தவேண்டிய செலவினங்கள்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| **விபரம்** | *ரூபா.000* | *ரூபா.000* |
| புகையிரத ஆணைச்சீட்டு – விடுமுறை | 105 | - |
| புகையிரத ஆணைச்சீட்ட – பயணச் செலவினம் | 5 | - |
| எரிபொருள் செலவினம் | 33 | - |

| | | |
|---|---|---|
| தபால் கட்டணங்கள் | 16 | 5 |
| தொலைபேசிச் சிட்டைகள் | 163 | 410 |
| மின்சாரச் சிட்டைகள் | 945 | 1,140 |
| நீர்ச் சிட்டைகள் | 34 | 144 |
| வாகன பராமரிப்பு | 10 | - |
| இரத்தினபுரி கட்டிடம் - மதியுரைக் கட்டணம் | 3,736 | - |
| ஒலிபெருக்கி முறைமைக் கட்டணங்கள் | 441 | - |
| இரத்தினபுரி கட்டிடத்திற்கான தளபாடங்கள் | 14,210 | - |
| கணக்காய்வு முறைமை | 26,633 | _ |
| இரத்தினபுரி கட்டிட நிர்மாணம் | 116,562 | |
| **மொத்தம்** | **162,892** | **1,699** |

குறிப்பு இல. **15** **மூலதன செலவினம் மற்றும் பொது வைப்புக் கணக்கிற்கான அரசாங்க மானியம் விபரம்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| **அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்களிற்காக** | 251,605 | 265,787 |
| வைப்புக் கணக்கிற்காக | (8,456) | (43,878) |
| நிலையான சொத்துக்களிற்காக | 419,461 | 431,251 |
| மொத்தம் | 662,610 | 653,160 |

குறிப்பு இல. **16** **அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம் விபரம்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| நிலையான சொத்துக்களிற்காக | 653,201 | 578,794 |
| கணக்காய்வு முறைக்காக | 180,889 | 206,497 |
| மொத்தம் | 834,090 | 785,291 |

# பகுதி - IV


# அரசாங்க கணக்காய்வுத் துறைகளின் சுருக்கமான கணக்காய்வு மீளாய்வு

# பொது முயற்சிகள் முகாமைத்துவம்

புறம்பான சட்டத் தனித்துவத்துடன் முற்றாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவகமே ஒரு பொது முயற்சியாவதுடன் அதன் பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனைகளிலிருந்தான வருமான பெறுகைகள் புறம்பான கணக்குகளில் பேணப்படும். ஆனமையினால் அந்த நிறுவகமானது தனது சொத்துக்களில் வருவாயை உழைப்பதற்கு நிலையான சக்தியைக் கொண்டுள்ளது. ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் மற்றும் கல்விசார் பொது முயற்சிகள் இந்த வர்த்தக தலைப்புக்குள் கொண்டு வரப்படாததுடன் இலாப நோக்கற்ற தாபனங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றின் செயலாற்றலை இலாபத்தன்மை தவிர்ந்த வேறு வித்தியாசமான நியமத்தைப் பயன்படுத்தி பரீட்சிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. இலங்கையிலுள்ள பொது முயற்சிகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் பொதுவாக வகைப்படுத்தலாம்.

- குறித்துரைத்த வணிக முயற்சிகள்
- அரசாங்கத்திற்கு சொந்தமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
- ஒழுங்குபடுத்தும் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவனங்கள்
- ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

மின்சாரம், நீர் பெற்றொலிய உற்பத்திகள், தொலைத் தொடர்பு மற்றும் விமான சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் பொது முயற்சிகளால் தந்திரோபாய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த மூலதனம் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றுக்கு பாரிய முக்கியத்துவமளிப்பதே சகல பொது முயற்சிகளின் கூட்டு ஆளுகையாகும். கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கம்பனிகள் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 181 பொது முயற்சிகளின் மொத்த சொத்துக்களின் தொகுப்பு முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிட்டு வரைபடம் 1 இல் தரப்பட்டுள்ளது.




வரைபடம் 1 : 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது முயற்சிகளின் மொத்த சொத்துக்கள்

பொது முயற்சிகளிற்கான அரசாங்க மானியங்கள் மற்றும் உதவிப்பணங்கள் என்பன நேரொத்த முறையே ரூபா 42.2 பில்லியன் மற்றும் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 47.5 பில்லியனாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் மொத்த அரசாங்க மீண்டுவருஞ் செலவினத்தில் 3.8 சதவீதமாக இருந்தது. குறைந்த செயலாற்றலுள்ள பொது முயற்சி சார்ந்த தனியார் துறையிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் குறைந்தளவான கொடுப்பனவுகளால் தனியார் துறை அபிவிருத்திக்கு உள்ளன. பொது முயற்சிகளின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிற்கான முன்னேற்றங்களிற்காக பின்வருவன அழுத்தியுரைக்கப்படுகின்றன.

## செயலாற்றல் மதிப்பீடு

பொது முயற்சிகளின் கணக்காய்வு நிதிசார் மற்றும் இணங்கும் கணக்காய்வுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை செயற்படுத்தி நிறைவேற்றுவதற்குமான வினைத்திறன், பொருளாதாரம் மற்றும் பயனுறுதி என்பவற்றையும் கொண்டதாகும்.

பொது முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி மீதான கணக்காய்வு சில நியமங்கள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. செயலாற்றலின் பிரதானமான பிரமாணம் இலாபமல்ல பொது நிதிகளின் சிக்கனமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு மற்றும் குறிக்கோள்களை அடைதல் என்பவற்றின் முகாமைத்துவத்தின் செயலாற்றல் மிக முக்கியமானதாகும். குறிக்கோள்களில் பொது முயற்சிக்குப் பொது முயற்சி வேறுபடுகின்றன. எந்தக் குறிக்கோள்களிற்காக ஒருபொரு முயற்சி நிறுவப்பட்டதோ அதன் அளவுக்குக் கொண்டுவருவதற்காக பொது முயற்சியின் நிதி மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செயற்படுத்தப்படுகின்றன. கணக்காய்வின் முதற்தர கடமைகளில் ஒன்று, ஒரு முயற்சியின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணத்தை இனங்காணுவதாகும். உதாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற உற்பத்தி முயற்சியின் விடயத்தில குறிக்கோள் மற்றும் முதலீடு இயலளவு, கிரயங்கள் மற்றும் காலப்பட்டியல்கள், நுகர்ச்சியின் சாதாரண அளவுகள், விளைவு, உற்பத்தித்தன்மை, கிரமான வருவாயின் வீதம் போன்றவற்றின் அடிப்படையில் செயலாற்றலை அளவிடுவதற்கான அளவுகோலாக இவை விளங்குகின்றன. முயற்சிகள் தமது நீண்டகால மற்றும் குறுங்கால மூலதனத்தையும் செயற்பாட்டு திட்டங்களையும் கொண்டுள்ளதுடன் இவை செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான வேறு தொடர்புபட்ட புள்ளிகளைத் தருகின்றன.

ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய எல்லைகெதிராக பௌதீக செயலாற்றலை மதிப்பாய்வு செய்வது பொருத்தமான விடத்து குழுவின் தகுந்த இயலளவை வழங்குகின்றது. எவ்வாறிருந்த போதிலும், தரப்படுத்தப்பட்ட இயலளவைப் பயன்படுத்துவது, மூலப்பொருட்கள், மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், விளைவுகள் மற்றும் நிராகரித்தல் அதேபோல பேணுதல் என்பவற்றுக்கான பொருத்தமான பராமரிப்பு மற்றும் நுகர்ச்சியுடன் சேர்த்து மதிப்பிடப்படுகின்றது. செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு முக்கிய பயன்பாடு, நுகர்வுகள், உற்பத்தித் திறன், விளைவுகள் முதலியவற்றின் நியமான அளவின் அடைப்படையில் நியம அல்லது இலக்குக் கிரயம் தீர்மானிக்கப்படுகின்றது. கூட்டு நல்லாட்சி, பொது முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம் போன்றவை தொடர்பாக பொது முயற்சிகளால் வழங்குகின்றதுடன் இந்த வழிகாட்டல்கள் முயற்சியின் செயலாற்றல் மற்றும் முறைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு அடிப்படையை வழங்குகின்றது. உள்ளக மற்றும் புறநிலை நிபுணங்களால் நடாத்தப்படும் ஏனைய தொழில்நுட்பக் கற்கைகள் மற்றும் நியமற்கள் என்பன பிரமாணத்தின் இன்னொரு மூலமாகும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் செயலாற்றப்படும் வெளிவாரிக் கணக்காய்வு கணக்குப் பொறுப்பின் ஒரு கருவியாக உள்ளது. ஆனால் அரசாங்க முயற்சியின் முகாமைத்துவம் என்பவற்றுக்கு அவற்றின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை முன்னேற்றுவதற்கு உதவுவதே பொது முயற்சிக் கணக்காய்வின் சமமான முக்கியத்துவமுள்ள நோக்கமாகும். நிதி மற்றும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள் போதாத தன்மை அல்லது குறை வினைத்திறன், தாக்கமிக்க செயலாற்றல் குறைபாடுகள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை, என்பவற்றை வெளிப்படுத்துவதன் மூலமும் செயலாற்றலின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயங்களை அடையா முடியாமைக்குரிய காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் இது எய்தப்படுகின்றது. நிதிச் செயலாற்றல் பௌதீக செயலாற்றலுடன் இணைக்கப்படுவதுடன் விளைத்திறன் மற்றும் சிக்கன செயற்பாடுகள் மற்றும் வளங்களின் முகாமைத்துவம் என்பவற்றிலுள்ள விடயங்கள் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்படுகின்றன. முயற்சிகள் ஒருங்கான கூட்டங்களில் தேவைக்கட்ட முறைமைகள் மற்றும் செயற்பாட்டு முன்னேற்றங்கள் பற்றி கலந்துரையாடுகின்றன. ஆட்சிச் சபைகளால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பாதகமான

கண்டுபிடிப்புகளிற்கு பொதுமுயற்சியின் முகாமைத்துவம் பின்தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும். ஒரே மாதிரியான பாதகமான காண்புகள் ஆண்டுதோறும் திரும்ப திரும்ப காணப்படுவது மற்றும் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்களின் உயர் சந்தர்ப்பங்கள் என்பன இது எப்போதும் ஏற்படுவதில்லை என்பதைக் காட்டுகின்றது.

## நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்களையும் காசோட்டக்கூற்று மூலதனத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கித் தயாரிக்கின்றன. நிறுவனங்களின் நிலைவரம் பற்றி உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றனவா என்பது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாராளுமன்றத்துக்கு சுதந்திரமான உறுதிப்படுத்தலை வழங்குகின்றார். நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வடிவில் இந்த உறுதிமொழி வழங்கப்படுகின்றது. பொது முயற்சிகளின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றலினை நிதிக்கூற்றுக்கள் நியாயாபூர்வமாக பிரதிநிதித்துவப்படுகின்றதா அல்லது இல்லையா என்பது பற்றியும் தற்போது சம்பந்தமப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியாயங்களுடன் இணங்கியதாக இலங்கை அரசதுஜற கணக்கீட்டு நியமங்கள் அல்லது இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுடனா நிதி அறிக்கையிடும் நியமங்கள் இணங்கிய வகையில் அவை உள்ளனவா அல்லது இல்லையா என்பதைபற்றியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவை அபிப்பிராயம் சாதாரணமாக உரைக்கின்றது.

நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன, முனைப்பழியற்ற முனைப்பழியுள்ள, மறுப்பு மற்றும் பாதகமான அபிப்பிராயங்களாகும். இவை பொருட்படுத்தக்கூடிய நிச்சயமற்ற தன்மை வேலையில் முகாமைத்துவ இணக்கப்பாடின்மை அல்லது வரையறைகள் என்ற சந்தர்ப்பத்தில் தெரிவிக்கப்படும் அபிப்பிராயங்களாகும். நோக்கெல்லை வரையறைகளின் தன்மை. மறுப்பு அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு வழிவகுக்கும் அதே சமயத்தில் இணங்காதின்மையின் தன்மை பாதகமாக கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு வழிவகுகிக்கின்றது.

### முனைப்பழியற்ற அபிப்பிராயம்

ஒரு பொது முயற்சியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க மறுதவிப்புக்கள் அல்லது பிறழ் கூற்றுக்கள் இல்லை என கணக்காய்வாளர் தலைமை அதிபதிகான முடிநடதமையை முனப்பதியற்ற கணக்காய்வு அபிப்பிராயம் காட்டுகின்றது. இந்த அபிப்பிராயத்திற்காக இன்னொரு பதிலீட்டுப் பெயர் சுத்தமான அபிப்பிராயமே. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்றுடன் நிதி அறிக்கையிடல் நியாயங்கள் இணங்கியிதாக நிதித் தகவல்களைப் பதிவு செய்யும் பொது முயற்சிகளின் நிலமையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியமையாக இந்த அபிப்பிராயத்தில் தெரிவிக்கின்றார். ஒரு முயற்சி பெறக்கூடிய மிகச்சிறந்த அபிப்பிராயம் இதுவேயாகும்.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஒரு பொது முயற்சியின் நிதிசார் தகவல்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி குறைபாடுகள் கண்டுள்ளமையை முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் காட்டுகின்றது. பொது முயற்சிகளின் நடவடிக்கைகள் பற்றிஒரு சுத்தமான அபிப்பிராயத்தை வழங்குவதிலிருந்து. இந்த குறைபாடுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியைத் தடை செய்கின்றன. முனைப்பழிவுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழமையாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்த நிபந்தனைகளாக இந்த நிபந்தனைகள் அறிக்கையிடும் கணக்கீட்டு நியமங்களிலிருந்து விலகுதலை பிரதிநிதித்துவப்படுத்தும். இது முயற்சியானது நியமங்களை பொருத்தமற்றவிதத்தில் பிரயோகித்தமையைக் காட்டுவதுடன் நிதிக்கூற்றுக்கள் நியம கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இனங்கவில்லை. என்பதையும் காட்டுகின்றது. இன்னொரு நிபந்தனையாக நோக்கெல்லையின் வரையறையாகும். நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புபட்ட ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட பகுதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மீளாய்வு செய்ய முடியாதமையை இந்த நோக்கெல்லை வரையறை காட்டுகின்றது. இந்த நிபந்தனையானது ஆவணச்

சான்றுகள் கிடைக்கப்பெறாதமை காரணமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நிதித்தகவல்கள் மீளாய்வு செய்ய முடியாமையுடன் மட்டும் தொடர்புபட்டதாகும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை எப்போது தெரிவிக்கிறார்.

(அ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி போதிய பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றும் தனித்தனியாக அல்லது கூட்டுமொத்தமாக பிறள்கூற்றுகளை பொருட்படுத்தக்கூடியதாக ஆனால் நிதிக்கூற்றுகளிற்கு தடைகளாக இல்லை என தீர்மானிக்கும் போது, அல்லது.

(ஆ) ஒரு அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக போதிய பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதபோது ஆனால் நிதிக்கூற்றுக்களில் கண்டுபிடிக்கப்பட்டதாக பிறள்கூற்றுக்கள் பொருட்டுத்தக்கூடியளவிற்கு ஏதாவதிருந்தால் ஆனால் அவை தடைகளற்றவை இருக்குமென கண்ககாய்வாளர் தலைமை அதிபதி தீர்மானிக்கும்போது.

## மறுப்பு அபிப்பிராயம்

அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெறுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடியாத போதில் மறுப்பு அபிப்பிராயத்துடன் அவர் பொருட்படுத்தக்கூடிய மற்றும் தடைகள் என்ற இன்மையும் கண்டு பிடிக்கப்படாத பிறள் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களுடன் முடிவுக்குவருகிறார் என்பதாகும். பலவித நிச்சயமற்ற தன்மைகள் அரிதான சந்தர்ப்பங்களில் இருக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி மறுப்பு அபிப்பிராயத்துடன் ஒவ்வொரு தனித்தனியான நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பாக போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் எவை எவையேனும் பெறமுடியாத போது முடிவுக்கு வருகின்றார். காரணமாகவும் அவை நிதிக்கூற்றுக்களில் செலுத்தும் திரண்ட தாக்கங்களின் சாத்தியத்தாலும் நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை அமைப்பதற்கு முடியாததாகின்றது.

## பாதகமான அபிப்பிராயம்

பாதகமான அபிப்பிராயமானது இரண்டு குறிப்பிடத்தக்க எதிர்மறையான அறிக்கைகள் மற்றும் பொது முயற்சி பெறக்கூடிய மோசமான கணக்காய்வு அறிக்கையாகும். நிதியக் கூற்றுக்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க பொருட்படுத்தக்க பிறள் கூற்றுக்களைக் கணக்காய்வாளர் கண்டுபிடித்ததை பாதகமான அபிப்பிராயம் சுட்டிக்காட்டுகின்றது. நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணக்கப்பாடின்மை மற்றும் பிழையானதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின்மையால் இந்த பிறழ் கூற்றுக்களில் சாதரணமாகக் கருதப்படுகின்றது. பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்தைக் கொண்டுள்ள பொது முயற்சிகளை வங்கிகள் மற்றம் நிதி வர்த்தகர்கள் வழமையாக தவிர்க்கின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி குறிப்பிடத்தக்களவு பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றிருந்த தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ இரண்டு வித்திலும் பிறழ் கூற்றுக்கள் பொருட்படுத்தக்க அளவிலும் மறுதலிப்பாகவும் நிதிக்கூற்றுக்களினை முடிவு செய்யும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பாதகமான அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நிதிக்கூற்றுக்களில் பாதகமான அபிப்பிராயம் தெரிவிக்கப்படுவது அவர் பொது முயற்சிகளிற்கு பிறழ் கூற்றுக்களைத் திருத்துவதற்கும் புதிய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதால் மிகவும் அரிதாகும். இந்த அபிப்பிராயத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரது கணக்காய்வு அறிக்கையில் விபரிக்ககப்பட்ட விடயங்களில் குறிப்பிடக்கூடிய தொகை காரணமாக நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க ஆண்டிற்கான நிதிநிலைமை நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தரவில்லை என உரைக்கின்றார்.

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு 2013 ஆம் ஆண்டிற்கான 181 பொது முயற்சிகளின் கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் பின்வருமாறிருந்தன.

| கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| முணைப்பழியற்ற | 11 | 16 | 12 |
| முனைப்பழியுள்ள | 107 | 144 | 156 |
| மறுப்பு | - | 08 | 08 |
| பாதகமான | - | 04 | 03 |
| தீர்மானிக்கப்படாதவை | 43 | 02 | - |
| சமர்ப்பிக்கப்படாத நிதிக்கூற்றுக்கள் | 20 | 07 | 02 |

பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு வழிவகுக்கக் கூடிய பாரதூரமான பிறழ் கூற்றுக்கள் காரணமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டவாறு சில பொது முயற்சிகள் அவற்றின் நிதிக்கூற்றுக்களை மீளப்பெற்றிருந்தன. இந்த நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்களின் புதிய தொகுதியைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவரின் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கும்படி, ஆலோசனை வழங்கப்பட்டது. சில நிறுவனங்கள் இதுவரை நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்திருக்கவில்லை. அல்லது குறிப்பிடத்தக்களவு தாமதத்தின் பின்னர் செய்திருந்தன. இத்தகைய காரணங்களினால் கணக்காய்வு அபிப்பிராயம் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

மேற்படி தரவுகளில் பகுப்பாய்வு செய்வதன் மூலம் 2013 இல் முணைப்பழியுள்ள பாதகமான மற்றும் மறுப்பு அபிப்பிராயங்கள் வழங்குவது குறைந்துள்ளமையால் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கிய வகையில் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை தெளிவாக்குகின்றது.

### நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பேணுகை

நடைமுறையல்லாச் சொத்துக்களில் நிலையான சொத்துப்பதிவேடுகள் (எப்ஏஆர்) மற்றும் பட்டோலைகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்றவாறான முறையான பதிவேடுகளின் பேணுகை பொதுவாக நலிந்த நிலையில் இருப்பதுடன் சில விடயங்கள் மிக நலிந்த நிலையிலிருந்தன. ஆனமை பெறுமதி மற்றம் உபகரணங்கள் (பீபீஈ) என்றும் அறியப்படும். நடைமுறையல்லாச் சொத்துக்கள் என்ற பதம் சுலபமாக காசாக மாற்ற முடியாத சொத்துக்கள் மற்றும் ஆதனங்களிற்காக கணக்குகளில் பயன்படுத்தப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் கணணிகள், பொருந்திகள், மற்றும் இணைப்புக்கள் பொறித் தொகுதி மற்றம் இயந்திரங்கள் என்றாவாறான விடயங்களை சாதரணமாக நிலையான சொத்துக்களில் உள்ளடங்கப்படுகிறது. ஒரு பெரிய கூட்டுத்தாபனத்தில் குறித்த நிலையான சொத்தை இனம் காணுதல் மற்றும் அதன் இருப்பிடத்தை என்ற விடயங்களை விஞ்ஞான ரீதியில் முறையாக மறுத்து நானது வரையாக இலக்கிடப்பட்டுவிட்டதால் சிக்கலில் முடியலாம். நிலையான சொத்துப் பதிவேட்டின் முறையற்ற பேணுகையே அதிகமான முயற்சிகளில் ஒரு பொதுவான பிரச்சினையாகும். இதன் விளைவாக நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு ஒரு பயனற்ற முயற்சியாக ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. முயற்சிகளின் முகாமைத்துவங்கள் பொருத்தமான பதிவேடுகளில் பேணுவதற்கான பொறுப்பைப் கொண்டிருந்ததுடன் அவற்றுக்குச் சொந்தமான சொத்துக்காகவும் பாதுகாக்கவும் வேண்டும். அதிகமான விடயங்களில் ஆண்டுக் கணிப்புச் சபைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் விளைவாக சொத்துக்களின் உள்ள தன்மை மற்றும் நிலைவரம் உறுதிப்படுவதில்லை.

மேலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் பூர்த்தியாக்கற் சான்றிதழ் வழங்குவதில் தாமதங்கள் காரணமாக நடைபெறும் வேலையிலிருந்து நிலையான சொத்துக்களின் மூலதனமாக்கலில் குறிப்பிடதக்க தாமதங்கள் காரணமாக நடைபெறும் வேளைகளிலிருந்து நிலையான சொத்துக்களின் மூலதனமாக்கலிள் குறிப்பிடத்தக்க தாமதங்கள் தரப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்ச்செயற்திட்டங்கள் மற்றும் இலங்கை மின்சார சபையால் பூர்த்திசெய்யப்பட்ட மின்ஒளியூட்டும் செயற்திட்டங்களின் பிரதானமாக அவதானிக்கப்பட்டது.

இதேநிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரச சபையால் (ஆர்டிஏ) பூர்த்தியாக்கப்பட்ட தேசிய கடுகதிசாலைகள் மற்றும் ஏனைய வீதி செயற்திட்டங்கள் தொடர்பிலும் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை பின்னர் சீராக்கப்பட்டிருந்ததுடன் இந்த வீதிகளின் கிரயங்கள் கணக்காய்வில் அவை மூலதனமாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் காட்டப்பட்ட பின்னர் ஆர்டிஏ இன் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டு பிரதிபலிக்கப்பட்டிருந்தன. நிதிப் பிரமாணம் 842 உடன் இனங்கிய வகையில் சகல பொதுமுயற்சிகளாலும் நிலையான சொத்துப் பதிவேடுகள் வைத்திருக்கவேண்டும் என்பது அழுத்திவைக்கப்படுகின்றது. சொத்துக்களின் கட்டுப்பாட்டை நிச்சயப்படுவதுடன் மோசடிகளை தடுப்பதால் ஒவ்வொரு நிலையான சொத்தின் விபரங்கள் தொடர்பாதையில் வைத்திருக்கப்படுகின்றது அனுமதியற்ற பெறுமானத் தேய்வு மற்றும் வரி மற்றும் காப்புறுதி நோக்கங்களிற்கான கணிப்பீட்டிற்காக அனுமதித்திருக்கும் சொத்துக்களின் சரியான பெறுமதியும் கொண்டிருக்கின்றது. நிலையான சொத்துப் பதிவேடு முகாமைத்துவத்தின் தேவைகளுக்கு உகந்த வகையில் சரியான பூரணமான மற்றும் விளக்கமான அறிக்கைகளை உருவாக்குகின்றது.

அரச பெருந்தோட்டம் கூட்டுத்தாபனம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழு என்பவற்றுக்குச் சொந்தமான பதிவேடுகள் பூரணமற்று இருந்ததுடன் அவற்றின் உள்ள தன்மை மற்றும் உரித்துடைமையை உறுதிபடுத்துவதற்காக கணக்காய்விற்கு அவற்றின் அமைவிடம் மற்றும் பரப்பளவுடன் விபரமான பட்டோலையை உருவாக்க முடியாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

நிறுவனங்கள் தமது சொத்துக்களின் நியாயமான பெறுமதி அடிப்படையில் கொண்டு வருவதை கட்டாயமாக்கியது புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை கடைப்பிடிப்பதனால் பிரதம அரசாங்க விலை மதிப்பீட்டால் தமது சொத்துக்களை இணங்கண்டு பெறுமதி கணிப்பதற்கு தற்போது குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் முன்வந்து இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

## தொழில்சார் பதவியணியினரை சேர்த்தல் மற்றும் தக்க வைப்பதற்கான சுய அதிகாரமின்மை

திறன் தொழில் பதவியணியினைச் சேர்ப்பதற்கும் அவற்றைத் தக்க வைப்பதற்குமான வர்த்தக தீர்மானங்களை மேற்கொள்வதற்கான பணிப்பாளர்களின் திறமையில் பல்வகை அனுமதிகள் வேண்டப்படும் நெருக்கடிகள் ஒட்டுமொத்தமாகிறது. இந்த நெருக்கடி காரணமாக அதிகமான முயற்சிகள் உயர்ந்த சம்பளங்ளுடன் ஒப்பந்த அடிப்படையில் கணக்குப் பொறுப்பாளர்களைச் சேர்கின்றன என அவதானிக்கப்பட்டது. குறிப்பாக கணக்காய்வாளர், பொறியியலாளர்கள் விலைமதிப்பீட்டாளர்கள் முதலிய பதவிகளில் அதிகமான பொது முயற்சிகள் தனியார் துறையுடன் ஒப்பிடும் போது குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக தகைமை வாய்ந்த கணக்குப் பொறுப்பாளர்களை சேர்ப்பதற்கும் அவர்களைத் தக்க வைப்பதற்கும் போராடுகின்றன.

## வெற்றிகரமான உள்ளீர்த்தல் திட்டமொன்றின்மை

இ.மி.சபையால் (சீஈபீ) மற்றும் இ.பெ.கூ (சீபீசீ) என்றவாறான சில பெரிய நிறுவனங்கள் வெற்றிடங்களை பொருத்தமான அலுவலாகளைச் கொண்டு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது பல பிரதான முகாமைத்துவ பதவிகளை நீண்ட காலமாக வெற்றிடமாக வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் பிரதான பதவி நிலைகளைக் கவனிப்பதற்கு தொடர்ந்து பதவி ஏற்கும் திட்டமெதுவும் இல்லாத இந்த நிலைமைக்கான பிரதான காரணமாகும். இந்த நிலைமை இறுதியாக வேலைகளில் தாமதத்தை ஏற்படுத்தும் பதில் கடமை ஒழுங்குசெய்வதுடன் தொடர்வதற்கு அத்தகைய முயற்சிகளை அனுமதித்திருக்காது.

## நிறுவனங்களால் செலுத்தப்படும் உ.பொ.செ.வரி

உள்நாட்டிறைவரி அதிகாரச் சட்டத்தின் நியாயமான பின்னணிக்கு எதிராக 53 பொது முயற்சிகள் தமது அலுவலர்களின் சார்பில் தமது சொந்த நிதிகளிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பீஏவைஈ) செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் நிறுவனத்திற்கு நிறுவனம் வித்தியாசம் ஏற்படாமல் உ.பொ.செ.வரி தொடர்பாக திர்மானத்தை பொதுத் திறைசேரி எடுக்க வேண்டுமென அழுத்தி உரைக்கப்படுகின்றது 2013 ஆம் ஆண்டில் அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 1,541 மில்லியன் தொகையை

முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,485 மில்லியனுடன் ஒப்பிடலாம். அதன் பிரகாரம் உ.பொ.செ வரியின் நோக்கம் நிறைவுசெய்யப்படாததுடன் இன்னொரு விதத்தில் கால அரசாங்க உத்தியோகத்தர்களிருக்குமான கமநல அரசாங்க உத்தியோகத்தர்களிற்குமான நியாயபூர்வமான கவனிப்பு மறுத்தலிக்கப்படுகின்றது.

### ஆண்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டிற்காக 160 பொது முயற்சிகளின் நிதிக் கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 30 அளவில் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தன. எனினும் நிதி ஆண்டு முடிவடைந்ததும் 09 மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தமது நிதிக் கூற்றுக்களை 20 நிறுவனங்கள் சமர்ப்பதிருக்கவில்லை என் அவதானிக்கப்பட்டது. இந்த நிறுவனம் கீழே காட்டப்படுகின்றன. மேலும், 07 நிறுவனங்கள் 2014 செப்தெம்பர் 30 அளவில் 21 மாதங்கள் கடந்த பின்னரும் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன், 68 நிறுவனங்கள் பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தவிர்ப்பதற்காக அவற்றின் நிதிக்கூற்றுக்களில் பாராதூரமான பிறழ் கூற்றுக்களிலிருந்து என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் தமது நிதிக்கூற்றுக்களை மீளப்பெற்றுக்கொண்டன என்பதும் அழுத்தி உரைக்கப்படுகின்றது.

| நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| நிதிக் கற்கைகள் அகடாமி | நெற் சந்தைப்படுத்தும் சபை |
| இலங்கை மீண்பிடிக் கூட்டுத்தாபனம் | ரனவிரு சேவா அதிகாரசபை |
| இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | சௌம்ய மூர்த்தி தொண்டமான ஞாபகார்த்த மன்றம் |
| கூட்டுறவு மொத்த வியாபார நிலையம் | இலங்கை மட்பாண்டக் கூட்டத்தாபனம் |
| ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் |
| இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை | இலங்கை மாநாட்டு பணியகம் |
| இலங்கை மதிப்பீட்டு நிறுவனம் | இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் |
| லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகம் | இலங்கை போக்குவரத்துச் சபை |
| மஹிந்த ராஜபக்ஷ தேசிய தொலைசினிமா பூங்கா (ரன்மிதன்ன) | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| தேசிய நூலக ஆவணங்கள் சேவைகள் சபை | நகர அபிவிருத்தி அதிகாரசபை |

*அட்டவணை: 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்காத பொது முயற்சிகள்*

நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களிற்கிடையில் பொது முயற்சிகள் கணக்காய்விற்காக தமது ஆண்டு நிதிக் கூற்றுக்களையும் வரைவு ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவற்றின் கணக்காய்வு அறிக்கைகள் நிதிக் கூற்றுக்கள் கிடைத்த திகதியிலிருந்து 30 நாட்களிற்கிடையில் வழங்கப்பட்ட வேண்டுமென்றும் உரிய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குகிடையில் பாராளுமன்றித்தில் பொது முயறிசிகள் தமது ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல்

வேண்டுமமென்றும் 2002 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் திர்மானத்திற்கிணங்க அழுத்தியுரைக்கப்பட்டு திறைசேரிச் செயலாளர் தனது 2002 மே 24 ஆம் திகதிய பீஎவ்/பீஈ.21 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையினை வழங்கியிருந்தார்.

### முற்பங்களைத் தீர்த்தல்

பொருட்கள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டோ அல்லது சேவைகள் ஏற்கனவே வழங்கப்பட்டோ இருந்தும் கூட செலவுகளாகத் தாக்கல் செய்யப்படாது நீண்டகாலமாக முற்பணங்களாக குறிப்பிடத்தக்க பெருந்தொகைப் பணம் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் ஒரே அலுவலருக்கு அவருக்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமல் பல்வேறு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### துணைக் கம்பனிகளை கூட்டிணைத்தல்

சில நிறுவனங்கள் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சில நேரங்களில் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டினைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளை நிறுவி உள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை பிரதான நிறுவகத்தின் மற்றும் அதன் கம்பனியிலிருந்தும் செயற்பணிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிசோதனையின் கீழ் வராது தீர்த்துப்போக வைக்கப்படுகின்றன. இ.மி.சபை மற்றும் இ.பெ.கூ போன்ற சில தந்திரோபாய நிறுவனங்கள் எண்ணிலடங்கா உதவிக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகளை வைத்திருந்ததுடன் ஆட்சிச் சபைகளில் பிரதான பங்குதாராத பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. ஆனால் சம்பந்தப்பட்ட முயற்சிகளினால் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு அதிகாரம் நலிவாக இருப்பதாக மேலும் குறிக்கப்பட்டது.

### குறித்துரைத்த வர்த்தக முயற்சிகள் (எஸ்பீஈஎஸ்)

பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதன் மூலமும் தனியார் துறையுடன் சில விடயங்களில் உள்ளகப் போட்டியிலும் ஈடுபடுவதினால் இந்த முயற்சிகள் ஏனைய தளியார் கம்பனிகள் போல வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. தந்திரபோயா வர்த்தக முயற்சிகள் தனியார் துறையிடமிருந்து சிறியளவான போட்டியுள்ள அல்லது போட்டியில்லாத தனி உரிமைகளாக சாதாரண பொருளாதார பரப்பில் கருதப்பட்டு பொதுவாக காணப்படுகின்றது. அதாவது இந்த நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தந்திரோபாய வர்த்தக முயற்சியால் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் போட்டிக்கு தயார் நிலையில் ஈடுபாடில்லாமலும் தனியார் திறக்கப்படாமலும் இருக்கும் வளங்கள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் அடிப்படையிலான கைத்தொழில் விசாலமான (உ+ ம்) மின்சாரம், நீர், பெற்றோலிய உற்பத்திகள் போன்றன.

எனினும், சில தந்திரோபாய முயற்சிகள் (எஸ்பீஈஎஸ்) இலங்கை போக்குவரத்து சபை அரச வங்கிககள் போன்றவாறான தனியார் துறையுடன் திறந்த போட்டியில் உள்ளன. அதன் பிரகாரம், செயற்பாட்டிலுள்ள 39 முயற்சிகள் (கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டினைக்கப்பட்டவைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகார வரம்பிற்குள் வராதவற்றைத் தவிர்ந்த) தற்போது தந்திரோபாய வர்த்தக முயற்சிகளாக வகைப்படுத்த முடியுமென்பதுடன் 28 முயற்சிகள் மாத்திரம் 2014 செப்டெம்பர் 30 வரையிலும்கூட கணக்காய்வுக்காக 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்தன. சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் (ஐஎவ்ஆர்எஸ்) அடிப்படையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஎஸ்) ஒத்துக்கொள்ளலுடன் எஸ்பீஈஎஸ் ஒரே விதத்தில் பிரயோகிக்க கட்டுப்படுத்தப்பட்டன. எனினும் இந்த முயற்சிகளின் பெருமளவிற்கு இந்த புதிய நியமங்களை இணங்கிய வவகையில் தமது ஆண்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் வெற்றி கண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும் சில முயற்சிகள் தகைமைபெற்ற மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்பன இன்மை காரணமாக தமது நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு போராடியிருந்தன. பொருட்படுத்தக்கூடிய பிறள் குற்றுக்கள் மற்றும் இ.க.நி களுடன் இனங்காமை என்பவற்றை சுட்டிக்காட்டி அவற்றின் நிதிக்கூற்றுக்களைத் திருத்துவதற்கு இந்த நிறுவனங்களிற்கு நியாயாமான சந்தர்ப்பத்தை நான் கொடுத்துள்ளேன் என்பது இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது. இந்த நிறுவனங்களில் அதிகமானவை உடன்பாட்டு படியாக இந்தப் போக்கை எடுத்துக் கொண்டதுடன் பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிப்பதைத் தவிர்ப்பதற்கு வழிவகுக்கும் விதத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயாபூர்வமாக தமது

நிதிக்கூற்றுக்களை மீளச் சமர்ப்பித்திருந்தன. இந்த புதிய ஒழுங்குகள் காரணமாக ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் ஏற்பட்டன. தாமங்கள் ஏற்பட்ட போதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயபூர்வமான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கப்பட்டமை இறுதியாக பாரிய அளவில் கணக்களிதகைமையை விரிவுபடுத்தியது.

இந்த குறித்த வர்த்தக முயற்சிகளில் உள்ள பாரிய முதலீடுகளின் நோக்கில் தமது சொந்த பதிலீடுகள் விரிவாக்கங்கள் மற்றும் வளர்ச்சிக்காக அவை போதிய மிகைகளை உருவாக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. விரிவுபடுத்தலுக்கான சுய நிதியளிப்பு, கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளில் செயலாற்றும் பொது முயற்சிகளின் ஒரு குறித்த கடபாடாக மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய முயற்சிகள் தமது கிரயத்தை மேவ வேண்டுவதுடன் மட்டுமல்லாது ஆனால் அந்த உரித்தின் நிதி அபிவிருத்தித் திட்டங்களிற்காக மிகைகளை உருவாக்கவும் வேண்டும்.

கணக்காய்விற்காக தமது நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்த இத்தகைய 28 முயற்சிகளின் 2013 ஆம் ஆண்டினிறுதியிலுள்ளவாறான தேறிய சொத்துக்கள் ரூபா 404,917 மில்லியன் தொகையான இருந்ததை முன்னைய ஆண்டிற்கா ரூபா 362,192 மில்லியனான மொத்த சொத்துக்களுடன் ஒப்பிடலாம்.

## பாதகமான தேறிய சொத்து நிலைமை

இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனம் மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை என்பன ஆரம்பத்தில் இலாபங்களை பெற்றிருந்த போதிலும், அண்மைய காலங்களிலிருந்து இந்த முயற்சிகள் தொடர்ந்து நட்டங்களையே பெற்றிருந்தன. அவற்றின் கூட்டுமொத்த திரண்ட நட்டங்கள் 2013 திசெம்பர் 31 அளவில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து அவற்றின் தேறிய சொத்துக்களுக்குப் பாதகமாக தாக்கமளித்திருந்தது. 2013 திசெம்பர் 31 அளவில் இந்த நிலைமை, இந்த முயற்சிகளின் தேறிய சொத்து நிலைமையை பாரதூரமாக பாதித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 228,797 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் முடிவிலுள்ளவாறான ரூபா 236,826 மில்லியன் கூட்டுமொத்த எதிர்க்கணிய பெறுமதியை பதிவு செய்திருந்தது. மேலும் இந்த முயற்சிகளின் நடைமுறைப் பொறுப்புக்கள் அவற்றின் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 288,993 மில்லியனால் விஞ்சியிருந்தன என்று அவதானிக்கப்பட்டது. பொறுப்புக்களிற் கிடையிலான இந்த பாதகமான வித்தியாசம் நீண்டகாலமாக தொடர்ந்து வந்திருந்தது. நடைமுறைப் பொறுப்புக்களை நடைமுறைச் சொத்துக்களால் ஈடுசெய்ய முடியாத தன்மை, இந்த முயற்சிகள் பாரதுாரமான நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் தொங்கல் நிலையையும் அதேபோல பொதுத் திறைசேரியிலிருந்தான உதவியில்லாது அதன் தொடர்ந்து இயங்கு தன்மை சந்தேகத்திற்கிடமாக உள்ளதையும் காட்டுகின்றது.

## நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, அந்த 28 நிறுவனங்களின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்பாடுகள் விளைவித்த ரூபா 48,261 மில்லியன் கூட்டுமொத்த தொகையான தேறிய இலாபத்தினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 101,320 மில்லியன் கூட்டுமொத்த நேரொத்த தேறிய நட்டங்களுடன் ஒப்பிடுகையில் இலாபத்தில் ரூபா 149,581 மில்லியன் அதிகரிப்புக் காட்டுகின்றது. 2013 இல் இந்த நிறுவனங்களின் நிதி விளைவின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமீட்டலில் ஏற்பட்ட குறைவு மற்றும் இலங்கை மின்சார சபை ரூபா 18,593 மில்லியன் தேறிய இலாபத்தை ஈட்டியிருந்தமையே காரணமாகும். இந்த 28 நிறுவனங்களில் 03 நிறுவனங்கள் ரூபா 8,370 மில்லியன் கூட்டுமொத்த நட்டங்களை ஏற்படுத்தியிருந்ததுடன் 2013 இல் ஏனைய 25 நிறுவனங்கள் ரூபா 56,632 மில்லியன் கூட்டுமொத்த இலாபங்களை உழைத்திருந்தன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை எனும் பெயர் கொண்ட மூன்று நிறுவனங்கள் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த கடந்த நான்கு ஆண்டுகளிற்காக தொடர்ந்தும் நட்டங்களை அடைத்திருந்த அதே நேரம் இலங்கை மின்சார சபை மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை என்பன முன்னைய ஆண்டிற்கான ரூபா 61,489 மில்லியன் நட்டத்திற்கெதிராக ரூபா 18,712 மில்லியன் தொகையான இலாபத்தை உழைப்பதன் மூலம் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ஒரு முன்னேற்றத்தைக்காட்ட முடிந்திருக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நட்டத்தினை ரூபா 81,836 மில்லியனால் குறைத்து 2013 இல் முன்னேற்றத்தினைக் காட்டியது. 16 உரிமங்கள் மாத்திரம் முன்னைய

ஆண்டிற்கான நட்டங்களிற்கெதிராக தமது இலக்குகளை முன்னேற்றியோ அல்லது இலாபங்களை உழைத்தோ இருந்தன. பன்னிரண்டு நிறுவனங்களின் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 இல் ரூபா 17,226 மில்லியனால் பின்னடைவு கண்டிருந்தது.

நலிந்த செயலாற்றலுள்ள முயற்சிகளின் இலாபத்தன்மை மட்டங்களின் பகுப்பாய்வு மற்றும் 2008 தொடக்கம் 2013 வரையான அவற்றின் தொடர்புபட்ட செயலாற்றல் என்பன இந்தக் காலப்பகுதியான முன்னைய ஆண்டுகளில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட குறைந்து சொல்லும் போக்கின் கூட்டு விளைவாக இந்தக் காலப்பகுதியின் இறுதி ஆண்டின் நலிந்த செயலாற்றலைக் காட்டல் முயற்சிகளின் வழமையான போக்கு இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க வருடாந்த குறைவால் இனங்காணப்படுகின்றது.

வருவாயின் வீதத்தால் காட்டப்பட்டவாறு குறித்துரைத்த வர்த்தக முயற்சிகளிற்கிடையிலான செயலாற்றலில் குறிப்பிடத்தக்க முரண்கள் காணப்பட்டன. 2013 ஆம் ஆண்டிற்கான குறித்துரைத்த வர்த்தக முயற்சிகளிற்கிடையிலான மொத்தச் சொத்துக்களில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான வருவாய் (ஆர்ஓசீஈ) 2012 ஆம் ஆண்டின் -43.4 சதவீதம் தொடக்கம் 90.5 சதவீதம் வரையான வீச்செல்லையுடன் ஒப்பிடுகையில் -17.9 சதவீதத்திலிருந்து 83.4 சதவீதம் வரையான வீச்செல்லையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டின் -2.4 சதவீதமான மொத்தச் சொத்துக்களில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான வருவாய் வீதம் 2013 இல் 1.1 சதவீதமாகக் காணப்பட்டு 2013 இல் முன்னேற்றத்தை காண்பித்தது.

எவ்வாறெனினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற முயற்சிகளின் விடயத்தில் உள்ளவாறு பாரிய பற்றாக்குறைகளை ஏற்படும் போது, அரசாங்க வருமானத்திலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேண்டப்பட்ட மீதி மானிய உதவியாக அளிக்கப்படுவதுடன் அந்த நிறுவனங்கள் கணக்கொழிப்பதற்கு அனுமதிக்கப்படாது என முன்னைய ஆண்டு அறிக்கையில் அழுத்தி உரைக்கப்பட்டவாறு இரண்டு அரச வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் வசதிகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சக்தியை உருவாக்குவதற்கு சுத்திகரிப்பு எரிபொருட்களை வழங்குவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட கடன் வசதிகளிலும் போன்று பரஸ்பர உதவி பெற்றுள்ளார். பொது முயற்சிகள் மேலும் சீரழித்துள்ளன. இந்த நிலைமை இரண்டு அரச வர்த்தக வங்கிகளால் வேண்டப்பட்ட போதிய மூலதன விகிதத்தின் பேணுகையை பாதகமாகப் பாதித்துள்ளன.

ஆனால், இந்த பொது முயற்சிகளிலுள்ள பாரிய முதலீடுகளின் நோக்கில், அவற்றின் சொத்துப் பதில்கள், விரிவாக்கல் மற்றும் வளர்ச்சி அதுபோல் எதிர்கால அபிவிருத்திகளிற்கான நிதியளிப்புக்காக போதிய மிகைகளை அவை உருவாக்குவது கட்டாயமானதாகும். விரிவாக்கலிற்கான சுய நிதியளித்தல் கைத்தொழில் மற்றும் வர்த்தக துறைகளில் செயற்படும் பொது முயற்சிகளின் விசேட கடப்பாடாக மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய முயற்சிகள் அவற்றின் கிரயத்தை மேவுவதுடன் மாத்திரமல்லாது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காகவும் மிகைகளை உருவாக்க வேண்டும்.

தந்திரோபாய வர்த்தக முயற்சிகளின் நட்டங்கள் மற்றும் நலிந்த செயலாற்றலுக்கு பின்வருவன் உள்ளடங்கிய வித்தியாசமான காரணிகள் பங்களிப்பு செய்துள்ளன.

- திறைசேரிக் கண்காணிப்பு போதாமை
- அபரிமித பதவியணி, உயர்ந்த மேன்தலைகள் மற்றும் குறைந்த உற்பத்தித் திறன்
- தெளிவான கணக்குப் பொறுப்பு மற்றும் செயலாற்றல் மதிப்பீடுகளின்மை
- நலிந்த வர்த்த நடைமுறைகள்
- விலைகளில் அரசாங்க கட்டுப்பாடுகள்
- அரசாங்கத்தின் வேண்டுதலில் வர்த்தகம்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- பொருத்தமற்ற வசதிகள் நலிந்த தர பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
- பயிற்றப்பட்ட பதவியணி இன்மை, உயர் பதவி அணி புரள்வு மற்றும்
- தொடர்ந்து பதவி ஏற்கும் ஆட்களின்மை மற்றும் தவறுகை (அதாவது பதவியணியினரின் செய்கை) என்பனவாகும்.

**அரசாங்கத்திற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்**

நாட்டில் பொது வகையான முயற்சிகளின் மேலும் ஒரு தொகுதி இருக்கின்றது. அவையாவன அரசாங்கத்தினால் (பொதுத்திறைசேரி) பெரும்பான்மையான பங்குடைமை கொண்ட கம்பனிகளாகும். இந்தக் கம்பனிகள் கம்பனி அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதுடன் ஆதலால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிசோதனையின் கீழ் வரவில்லை. இந்தக் கம்பனிகள் சிலவேளை முற்றாக அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவோ அல்லது பொது தனியார் கூட்டுமுயற்சியாக செயற்படும் பங்குமூலதனத்தின் சில விதங்களையோ சொந்தமாகக் கொண்டவையாகும். சுத்தமாக அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளில் பலவற்றைத் தவரிப்பதற்கு உதவிசெய்யும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் செயற்பாட்டிற்கு வழக்கமாக தனியார் துறையின் ஈடுபாடு கொண்டுவரப்படுகின்றது. பொது முயற்சிக்களினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளிருப்பதுடன் உதவிமானியமாகவோ அல்லது இணைக் கம்பனிகளாகவோ பொதுத்திறைசேரிரியின் ஈடுபடுதலின்றி சம்பந்தப்பட்ட பொது முயற்சிகளினால் மூலதன உட்டுசெலுத்துகை மூலம் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லை மற்றும் உள்ளடங்களை அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையில் முக்கியத்துவப்படுத்தியவாறு பொது நிதியின் மீது முழுமையான கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கு பாராளுமன்றத்திற்கு அவர் உதவக்கூடியவாறு இயலுவதற்கு நீடிப்பது அவசியமாகிறது.

சில கம்பனிகள் பரிசீலனைக்காக அழைக்கப்பட்ட போது பொது முயற்சிகளின் குழு முன்னிலைகளில் தோன்றுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன. அரசாங்கத்தினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொதுவளங்கள் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்படுவதுடன் எழுத்து மூல அதிகாரச்சட்டத்தினாலோ அல்லது அதன் கீழோ நிறுவப்பட்ட எவையேனும் அல்லது அதிகார சபையை உள்ளடக்குவதற்கு வரைபு கணக்காய்வு மசோதாவில் திருத்தம் ஏற்கனவே பிரேரிக்கப்பட்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில் சிலசமயங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறாமலும்கூட பொது முயற்சிகளால் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கூட்டிணைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

100 சதவீத பங்குகள் அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு பொது முயற்சிக்கோ உடைமையாக உள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திடமும் இலாபத்தில் பங்கு பெறுவதற்கு தனியார் ஆள் எவருமில்லாத ஒன்றாக இருக்கவேண்டும். சாதாரண தனியார் துறை கம்பனிகளை அதனை மாற்றுவதில், போதியதாக இருக்கும் அரசாங்கத்தினால் பங்குகளை சாதாரண விற்பனை செய்யும் உண்மையிலிருந்து ஒரு பொதுக்கூட்டுத்தாபனமாக அது முக்கியத்துவமுடையதாக இருக்க வேண்டும். பங்குகளான 50 சதவீதத்திலும் குறைந்த விற்பனை கம்பனியின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் இன்னமும் அரசாங்கத்திடமே உள்ளது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகள் விற்பனை இருந்த போதிலும், கூட்டுக்கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் போதுமானளவு உள்ளாட்சி நிலைமையில் அரசாங்கத்திற்கு இடமளிக்கிறது. எனினும் பொதுக் கூட்டுத்தாபனங்களில் அதிகாளவை பணிப்பாளர் சபையின் பெரும்பான்மையான அதன் அங்கத்தவர்களால் உருவாக்கப்பட்ட போதிலும் உதவிமானியங்களிலுள்ள அவற்றின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அவதானிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட சிறிலங்கள் விமான சேவை மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின்லங்கா என்பவற்றால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர்ந்த நட்டங்கள் பாரியளவாகும். 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு இந்த இரண்டு விமான சேவைகளினாலும் ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 90,963 மில்லியன் ஆகும். இந்த நிலைமை அந்த நிலைமை அந்த இரண்டு கம்பனிகளினதும் தேறிய சொத்து நிலைமையை பாரதூரமாக பாதித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 35,833 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 52,912 மில்லியன் கூட்டுமொத்த எதிர்மறையான தேறிய பெறுமதியை பதிவுசெய்திருந்தது. நடைமுறைப் பொறுப்புக்கள் தமது நடைமுறைச் சொத்துக்களை ரூபா 22,364 மில்லியனால் விஞ்சியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்பிற்கிடையிலுளள்ள பாதாக மான வித்தியாசம் 2007/2008 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகின்றது. நடைமுறைப் பொறுப்புக்களை நடைமுறைச் சொத்துக்கள் மூலம் ஈடுசெய்யமுடியாத தன்மை இந்த இருவிமான சேவைகளும் பாரதூரமான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய தொங்கல் நிலையிலுள்ளமையும் அவற்றின் தொடர்ந்தியங்கும் தன்மையில் ஐயத்தையும் காட்டுகின்றது.

### ஏனைய இலாப நோக்கற்ற பொது முயற்சிகள்

ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள் பல்கலைக்கழங்கள் ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி மறறும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இந்த முயற்சிகள் உள்ளன. இந்த நிறுவனங்களின் பிரதான தோற்றமாக பிரதான வருமான மூலமாக வருடாந்த அரசாங்க மானியம் அல்லது சில பொருட்கள் மற்றும் சேவைகளில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரியாக இருப்பதாகும். இந்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களின் படி, 99 நிறுவனங்கள் 2013 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியால் இந்த நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 21,850 மில்லியன் தொகையான மீண்டுவரும் மானியங்களைக் கருத்திற்கு எடுத்த பின்னர் ரூபா 48,730 மில்லியன் கூட்டுமொத்த செலவினங்களை விஞ்சிய மிகைகளை உழைத்திருந்தன. எனினும், முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,256 மில்லியன் கூட்டுமொத்தமான 28 நிறுவனங்களின் தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது, 27 நிறுவனங்கள் ரூபா 772 மில்லியன் கூட்டுமொத்த தொகையான தேறிய பற்றாக்குறைகளை ஏற்படுத்தியிருந்தன. இது ரூபா 484 மில்லியனால் தேறிய பற்றாக்குறைகளில் மேலும் சீரழிவைக் காட்டுகின்றது.

# வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்

## வெளிநாட்டு நிதிகளின் பயன்படுத்தல்

இலங்கையில் தலா வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காரணமாக, வெளிநாட்டு நிதியிடலின் உள்ளடக்கத்தில் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. அதன்படி, வெளிநாட்டு நிதி உதவித் தொகை, அதன் மூலங்கள் மற்றும் உள்ளடக்கம் என்பன நடப்பாண்டில் மாற்றமடைந்திருந்தன. வெளிநாட்டு நேரடி மானியங்கள் மற்றும் சலுகை நிபந்தணைகளின் மீதான வெளிநாட்டுக் கடன்கள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்த வேளையில் இருபக்க மற்றும் பல்பக்க மூலங்களிலிருந்தான கடன் பெறுதல்களும், கலப்பு நிபந்தனைகளிலிருந்தான மற்றும் பணச் சந்தையிலிருந்தான கடன் பெறுதல்களும் அதிகரித்திருந்தன. 2013 ஆம் ஆண்டில் யூஎஸ்டொலா் 2,302 மில்லியன் தொகை வெளிநாட்டுக் கடன்களாகவும் யூஎஸ்டொலா் 205.6 மில்லியன் தொகை வெளிநாட்டு மானியங்களாகவும் இலங்கை பெற்றுக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக் கடன்களில் யூஎஸ்டொலா் 1,479.4 மில்லியன் தொகை இருபக்க மூலங்களிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் யூஎஸ்டொலா் 455 மில்லியன் வெளிநாட்டு மானியங்களாக பெறப்பட்டிருந்தன. வெளிநாட்டுக் கடன்களில் 17 சதவீதமானவை நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கும், மின்வலு மற்றும் சக்திவளத்திற்கும், போக்குவரத்துத் துறைக்கும் 12 சதவீதப்படி ஒதுக்கப்பட்டிருக்க 9 சதவீதமானவை போக்குவரத்துத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

நிதி, திட்டமிடல் அமைச்சின் புள்ளிவிபரத் தரவுகளின் படி, 2013 ஆம் ஆண்டிற்காக மீளளிக்கப்படுவதற்காக உள்ள வெளிநாட்டுக் கடன்தொகை யூஎஸ்டொலா் 18.9 பில்லியனாகும். இது அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களையும் சா்வதேச பவுண் முறிக் கடன்பெறுதல்களையும் உள்ளடக்கியிருந்தது. 2013 ஆம் ஆண்டில் யூஎஸ்டொலா் 70.5 மில்லியன் தொகை கடன் தவணைப்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் யூஎஸ்டொலா் 454 மில்லியன் வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. இலங்கையின் கடன்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அது 35 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் அது 220 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டுக் கடன் சேவை விகிதமானது 3.6 சதவீதமாகவும் ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டுக் கடன் சேவை விகிதம் 15.2 சதவீதத்தையும் பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

அண்மைக் காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(அ) வெளிநாட்டுக் கடன்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், பொது நிதி ஒன்றிணைந்த தந்துரோபாய திட்டத்தின் கீழ் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலதனச் சந்தையிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தினால் தூண்டப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதன் 64 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்கு நிதியளிப்பதற்காக இந்த ஏற்பாடுகளின் கீழ் உள்நாட்டு வங்கிகளிலிருந்து ரூபா 151 பில்லியன் கடன்களை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. உள்நாட்டு வங்கி முறைமையிலிருந்து ரூபா 51.82 பில்லியன் கடன் தொகையினை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை காணி தீா்ப்பனவு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், வணிக முகாமைத்துவ தேசிய பாடசாலை மற்றும் சோ் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என்பவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

(ஆ) முறையீடு செய்யப்படாத அபிவிருத்திப் பிரேரணைகளுக்காக உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெறப்பட்ட கடன்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்திருந்தது. அவ்வகையான கடன் பிரேரணைகளுக்கான முறையொன்று 2010 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய 444 ஆம் இலக்க மற்றும் 2011 மே 16 ஆந் திகதிய 444(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் கீழ் வரிசை அமைச்சுக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பிரேரணைகள் மீதான சாத்தியக் கற்கை அறிக்கைகள் நிலையியல் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் சபையால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. அதன் பின்னர் தொடர்புடைய பிரேரணைகளை தேசிய அபிவிருத்தித் திட்டப் பிரேணைகளாக கொண்டுவருதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிநாட்டு மூலவளத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இந்த பிரேரணைக்கு எந்தக் கடனைப் பெற்றுக்கொள்வது என்ற தேவைக்கான பகுப்பாய்வும் பொது முதலீட்டு உபாயங்களுடனான ஒப்பிடுதல்களும் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் கடன் மதிப்பாய்வுச் சபையால் மேற்கொள்ளப்படுகின்றது. முறையீடு செய்யப்படாத அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கேள்வி மனுக்களைக் கோரப்பட்டு ஒப்பந்தகாரரர்களைத் தெரிவு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படாதிருப்பதுடன் இது தொடர்பில் பொதுக் கணக்காய்வு முறையினை அமுல்படுத்துவதில் அது திணைக்களத்திற்கு சவாலாக உள்ளது. இது தொடர்பில் திறைசேரியினால் பின்பற்றப்பட வேண்டிய முறைகள் வெளிப்படையான தன்மையினையும் பொறுப்புக்களையும் உறுதிப்படுத்தும் விதத்தில் மிகவும் முறைசார்ந்த வடிவத்தில் காணப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் தகவல்களின் படி, 2013 இல் 62 புதிய வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 138 வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் 113 செயற்திட்டங்கள் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தன. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட அநேக குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) அதிகமான செயற்திட்டங்களிடம் நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் காணப்படாதிருந்ததுடன் அதன்காரணமாக செயற்திட்டக் குறிக்கோள்களை அடைவதற்கு வெளிநாட்டுக் கடன்களை பயன்படுத்த முடியாது போயிருந்தது.

(ஆ) அமுலாக்கல் நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பு இன்மையின் விளைவாக நிதிகளின் பயன்படுத்தலில் வினைத்திறனின்மை காணப்பட்டது.

(இ) செயற்திட்டக் குறிக்கோள்களை அடைவதற்கு மதியுரைஞர்களிடமிருந்து வினைத்திறனான பங்களிப்புக் கிடைக்காமை

(ஈ) முறையாக செயற்படக்கூடிய உள்ளகக் கணக்காய்வு இன்மையால் பொருத்தமான நிதிக் கட்டுப்பாடு காணப்படாமை

# மாகாண சபைகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமையின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விரிவான மாகாண சபை அறிக்கை உரிய மாகாண சபையில் முன்வைப்பதற்கு சபை அந்த மாகாண சபையின் ஆளுநருக்கு வழங்கப்படுகின்றது.

அனேக மாகாண சபைகளினால் நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் சொத்துக்களைக் கணக்கு வைப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய முறையான வழிகாட்டி 2014 செப்தெம்பர் 15 வரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அமைச்சு மற்றும் திணைக்களங்கள் 2013 ஆம் ஆண்டிற்குரித்தாகக் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நிலையான சொத்துக்களின் கொள்வனவுகள் காண்பிக்கப்பட்டிருந்தது.

மாகாண சபையினால் மாகாண சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் இன்றி செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற பணத்தின் குறைவான பயன்பாடு அல்லது மாகாண சபை வருமானம் உரியவாறு மதிப்பீடு செய்யப்படாமல் மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியேற்பாடுகள் பெறப்பட்டமையினால் கணிசமான பணத்தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

| | **2013 ஆம் ஆண்டு** | **2012 ஆம் ஆண்டு** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| மேல் மாகாண சபை | 7,000,000,000 | 9,000,000,000 |
| சப்ரகமுவை மாகாண சபை | 3,371,763,491 | 1,182,077,159 |
| தென் மாகாண சபை | 109,576,949 | 102,179,377 |
| வடமேல் மாகாண சபை | 748,452,671 | 1,152,378,365 |
| மத்திய மாகாண சபை | 940,220,288 | 855,099,433 |

## செயலாற்றல்

சப்ரகமுவை மாகாண சபையின் 2013 இன் மூலதனச் செலவினங்களுக்குரிய தேறிய நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களைக் கவனத்தில் கொண்டு 04 மாகாண அமைச்சுக்களுக்கு கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக ரூபா 691,477,416 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிலைமை மாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது. எனினும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் நிலையான வைப்பு மீதி ரூபா 3,371,763,491 ஆக இருந்ததுடன் சில வருடங்களாக காணப்படுகின்ற மேற்கூறப்பட்ட வைப்புக்களைப் பயன்படுத்தி கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் அமுல்படுத்த முடியாதிருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்குள்ள சந்தர்ப்பங்களை ஆராய்ந்துபார்த்து அமுல்படுத்துவதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மாகாண சபையின் கீழ் அமுல்படுத்தும் அதிகாரத்தின் (நியதிகளின் பிரகாரம் உருவாக்கப்பட்ட) கீழும் நிலையான வைப்புக்களில் நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நியதிச்சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட அதிகாரசபையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 362,714,688 தொகை முதலீடு செய்யப்பட்டு அத்திகதியில் உள்ளவாறு ரூபா 39,871,627 தொகையான வட்டி உழைக்கப்பட்டிருந்தது.

இந்த நியதிச்சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட அனேக நிறுவனங்களில் சம்பளம் செலுத்துவதற்காக மாகாண சபையிலிருந்து நிதி வழங்கப்பட்டிருந்தது. மாகாண சபையினால் நிதி வழங்கும் போது இது

தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற வரையறுக்கப்பட்ட நிதிகள் மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மாகாண சபைகளுக்கு நிதியேற்பாடு வழங்கும் போது நிதி ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினாலும் மாகாண சபைகளில் உள்ள முதலீடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நிதியேற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## பொது அவதானிப்புக்கள்

மாகாண சபை முறைமையில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் தொடர்பான பொழிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது. இந்த குறைபாடுகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளாறு உரிய பிரகாரம் அந்தந்த மகாண சபைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கின்ற பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும், கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினதும் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

- ❖ உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தின் கணிசமான அளவு மாகாண சபையினால் அனுப்பி வைக்கப்படாது கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- ❖ அதிபர் தரத்திலுள்ள அலுவலர்கள் இருக்கும் போது அதிபர் தரமற்றவர்களை பதிற் கடமையில் நியமித்தல்

- ❖ அறிக்கையிடப்பட்ட இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பாக முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை

- ❖ 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபைக்குச் சொந்தமான சில நிறுவனங்களுக்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்விற்குரிய அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ மாகாண சபையின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற வைத்தியசாலை மற்றும் மத்திய மருந்தகங்களில் மருந்துகள் காலாவதியாவதற்கு முன்னர் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது வேறு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ❖ கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக மாகாண சபைகள் கணக்குக் குழு பரீட்சித்து ஏற்பட்ட விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட கணக்குக் குழுவின் கட்டளைகள் அதிகாரத் தரப்பினரால் அமுல்படுத்தப்படும் போது மந்தநிலை காணப்பட்டது.

- ❖ மாகாண சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- ❖ மாகாண சபைகளின் பல்வேறு நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை முடிவுறுத்தும் போது சில விடயங்கள் திருப்திகரமாக நிறைவேற்றப்படாமை, மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்படாமை, சரியான கொள்வனவு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

# உள்ளூராட்சி அதிகாரசபைகள்

உள்ளூராட்சி அதிகாரசபைப் பிரதேசத்தில் இருக்கின்ற வரி செலுத்துகின்ற மக்கள் திருப்பதியடையக்கூடிய வகையில் அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார தேவைகளைக் கவனத்தில் கொண்டு புதிதாக ஏற்படுத்தப்பட வேண்டியதும் தற்போது பேணப்படுகின்ற பொதுப் பயன்பாடுகள் மற்றும் சேவைகளை இனங்கண்டு அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கையளிக்கப்பட்ட பிரதான செயற்பாடுகளாகும்.

உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது நலிவான நிதி முகாமைத்துவம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 23 மாநகர சபைகள், 41 நகரசபைகள் மற்றும் 271 பிரதேச சபைகளாக 335 உள்ளூராட்சி அதிகாரசபைகள் செயற்படுகின்றன. மீளாய்வாண்டிற்குரிய 310 உள்ளூராட்சி அதிகாரகளிலிருந்து 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 219, நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 181(1) மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றன. உரிய உள்ளூராட்சி நிறுவனங்களில் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றது.

- மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 254(1) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) மற்றும் பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 166 ஆவது பிரிவுகளில் காணப்படுகின்ற நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் தொடர்பாக உரிய அதிகாரத்தரப்பினரால் சட்டரீதியான படிமுறைகள் எடுக்கப்படாமையினால் அனேகமான உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் நிலுவை வருமானத்தில் அளவு ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்திருந்தது.

- இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஹோட்டல் மற்றும் தங்குமிடங்களிலிருந்து வருடாந்தப் பெறுவனவுகளிலிருந்து 1 சதவீதம் வரி அறவிடுவதற்கு உள்ளூராட்சி அதிகார சபை கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த பெறுவனவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய சட்டரீதியான ஏற்பாடுகள் தயாரிக்கப்படாமையின் காரணமாக அனேக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வருடாந்தம் கிடைக்க வேண்டிய பாரியளவிலான வரித்தொகை இழக்கப்பட்டிருந்தது.

- நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபை அதிகாரப் பிரதேச எல்லையில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற காணிகளிலிருந்து 10 சதவீத அளவான நிலப்பகுதி பொது வசதிகளுக்காக உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். விற்பனை வெய்யப்பட்ட காணிகளிலிருந்து குறிப்பிட்ட அளவான காணிப் பகுதி பொது வசதிகளுக்காக ஒதுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் ஒதுக்கப்பட்டிருந்த அனேகமான இடப் பகுதிகள் பொது வசதிகளுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது. நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விற்பனை விலையின் அடிப்படையில் 1 சதவீத வரித்தொகையும் சில உள்ளூராட்சி சபைகளினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல் பதாதை, காட்சிப் பெயர்ப்பதாதை தொடர்பாக முறையான மெய்மையாய்வு செய்யப்பட்டு உப விதி ஏற்பாடுகளின்

பிரகாரம் குறிப்பிட்ட வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

- மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 247(இ)(1அ), நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 165(1)(அ) மற்றும் பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 152(2) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரினால் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்ட அளவினை விஞ்சாத வியாபார வரியை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்காக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு அதிகாரம் கையளிக்கட்டுள்ளது. எவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் அமைச்சரினால் கட்டளை விதிக்கப்படாமையினால் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு தொழில் முயற்சிகள் தொடர்பாக வரி விதிக்கும் இயலுமை காணப்படவில்லை.

- நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சினால் 2009 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொலைபேசி / மின் சமிக்ஞை கோபுரங்களிலிருந்து குறிப்பிட்ட செயன்முறைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு அனேக உள்ளூராட்சி அதிகார சபைகளினால் முடியாதிருந்தது.

- உள்ளூராட்சி அதிகாரசபைகள் காலரீதியாகக் கிடைக்கின்ற வருமானத்தை ஆண்டின் போது பற்றுச்சீட்டிடுவதற்கே பழக்கப்பட்டுள்ளது. புதிய வருமான மூலங்களை இனங்கண்டு முறையான திட்டத்தின் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு அல்லது கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான உபாயங்களைப் பின்பற்றுதல் நலிவான நிலையில் காணப்பட்டது.

- மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை நிர்மாணிக்கும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட மாதிரிகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கும் இணங்காதிருந்த அனேக சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- உள்ளூராட்சி அதிகார சபைகளில் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஒட்டு மொத்தமாக நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட நியதிச்சட்ட செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுதல், பொதுமக்கள் பயன்பாட்டுச் சேவைகளை பேணுதல் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான வருமானங்களை போதியளவான பிரகாரம் தோற்றுவிக்க முடியாதிருந்தமை உள்ளூராட்சி அதிகார சபைகள் முகங்கொடுக்கின்ற பிரதானமான பிரச்சினையாகும். இந்த நிலைமையின் அடிப்படையில் அந்த நிறுவனம் அரசாங்கத்தின் மூலதன மானியத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டிய நிலைமை காணப்பட்டது.

பின்வரும் பகுதிகளில் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக உள்ளூராட்சி சபைகளுக்குச் செலுத்துதல் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

- உள்ளராட்சி அதிகார சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள நீதி மன்றங்களின் மூலம் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குரியதாக அறவிடப்படுகின்ற தண்டப் பணங்களை நேரடியாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வரைவு நியதிச் சட்டத்தைத் தயாரித்தல்.

- கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது காணியின் அண்ணளவான பெறுமதியின் அடிப்படையில் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அறவிடவேண்டிய 1 சதவீத வரியை முற்பணமாக அறவீடு செய்யும் பொறிமுறையைத் தயாரித்தல்.

- காலாவதியான உப விதிகளை காலத்தின் தேவைக்குப் பொருத்தக்கூடிய வகையில் திருத்தி நேர்மையாகத் திட்டமிடப்பட்ட வருமான முன்னேற்ற வழிமுறைகளை உள்ளூராட்சி அதிகார சபைகளில் அமுல்படுத்துவதற்காக நிறுவனக் கட்டமைப்பை வழங்குவதற்காக அதிகாரத் தரப்பினர்கள் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

# புலனாய்வுக் கணக்காய்வு மற்றும் பொது மக்கள் முறைப்பாட்டு கணக்காய்வுச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு 926 பொதுமக்களின் முறைபாடுகள் கிடைத்திருந்ததுடன் ஒவ்வொரு பகுதிகள் தொடர்பாகவும் கிடைத்தவைகளின் நிலைமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பகுதிகள் | முறைபாடுகளின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| கல்வி | 146 | 16 |
| உள்ளூராட்சி சபைகள் | 121 | 13 |
| விவசாயம் | 112 | 12 |
| சுகாதாரம் | 75 | 08 |
| உயர் கல்வி | 66 | 07 |
| வணிகம் | 47 | 05 |
| ஏனையவை | 359 | 39 |
| மொத்தம் | 926 | 100 |

விஷேட புலனாய்வுப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டின் போது விஷேடமாக இனங்காணப்பட்ட பகுதிகள் தொடர்பாக 19 பொதுமக்களின் முறைபாடுகள் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வெளிப்படுத்தப்பட்ட விஷேட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## கல்வி அமைச்சு – பாடசாலை முறைமையில் முறையற்ற நிதிக்கட்டுப்பாடு

05 தேசிய/ மாகாண பாடசாலைகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பொருத்தமற்ற நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் பெற்றோர் மற்றும் மாணவர்களின் மூலம் ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக ரூபா 14,258,750 தொகை சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணம் உரிய செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்டிருக்கவில்லை.

- அதிபர்கள் 17 சந்தர்ப்பத்தின் போது ரூபா 409,522 தொகை மோசடியாக வங்கிக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மேலும் 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,241,343 தொகை முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாமல் அதாவது அதிகாரம், அங்கீகாரம் மற்றும் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படாமல் 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,181,506 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## கல்வி அமைச்சு – பாடசாலை சீருடை வழங்கல்

2013 ஆம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகளுக்காக சீருடைத் துணிகளை இறக்குமதி செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 5,473,800 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சர்வதேச போட்டியாளர்களின் கேள்வி முறைமையில் மேற்கூறப்பட்ட கொள்வனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

- உரிய காரணம் காண்பிக்கப்படாமல் சீருடைத் துணிகளுக்காக ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த அரசாங்க நிறுவனத்திற்கு வழங்கல் கட்டளைகள் கையளிக்கப்பட்டிராதுதுடன் கட்டளைகள் வழங்கப்பட்ட நிறுவனம் சமர்ப்பித்த கூறுவிலைகள் மற்றும் இணக்கஞ் செய்யப்பட்ட அந்த அரசாங்க நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விலையினை விட ரூபா 68,419,000 தொகையான அதிகரித்த விலையாக இருந்தது

- 3 சீருடைத்துணி வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக தனியாக கூறுவிலை கோரப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்படாமையினால் ரூபா 83,340,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

சீருடைத்துணி இறக்குமதி செய்யப்பட்டு பாடசாலை முறைமைகளுக்கு பகிர்ந்தளிக்கும் போது உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியில் உள்ளவாறு வழங்காமை, முறையான நிலைமைப் பரிசோதனை செய்யப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் திறக்கப்பட்ட கடன் தவணை கடிதங்களுக்காக குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு பணத்தை வங்கிக்குச் செலுத்தாமையினால் ரூபா 30.42 மில்லியன் தொகையான மேலதிக வட்டியைச் செலுத்தவேண்டியிருந்தது. அவ்வாறு மொத்த துணி வழங்கலிலிருந்து 58 சதவீதம் வழங்கிய இரண்டு நிறுவனங்களும் ஒரு உரிமையாளருக்குரிய நிறுவனங்களாக இருந்தது.

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு – திவிநெகும நிகழ்ச்சித்திட்டம்

### விதைத் தொகுதிகளின் கொள்வனவு

திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடையே இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது விதைத் தொகுதிகள் ரூபா 232 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்து பகிர்ந்தளித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் விதைகளில் 98 சதவீதம் பௌதீகரீதியில் மிகச் சுத்தமாகவும் 75 சதவீதம் ஆகக் குறைந்த முளைதிறன் சக்தியையும் கொண்டிருந்தமை பரிசோதனை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்த முடியுமான போதிலும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விதைகள் தொடர்பாக அவ்வாறு பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த நிலைமையைக் கருத்திற் கொள்ளாது நிறுவனம் நாற்றுக்களைப் பொறுப்பேற்று பகிர்ந்தளித்திருந்தது.

- நாற்றுக்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஆகக் குறைந்த முளைக்குக்கும் சதவீதம் 11.9 இற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. ஆகக் குறைந்த முளைக்கும் சதவீதத்தைக் கொண்டுள்ள விதைகளின் பெறுமதி ரூபா 4.64 மில்லியனாக இருந்தது. விதைகள் முளைக்கும் 75 சதவீதமான மொத்த வழங்கலில் 7.2 சதவீதம் தொடக்கம் 15.6 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் முளைதிறன் சக்தி 1 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரை காணப்பட்டமை, விதைகளைக் கொள்வனவு செய்தலில் விளைதிறன் குறைவான நிலைமைக்கு கொண்டு வரப்பட்டமை அதற்கான காரணமாக இருந்தது.

- சில சந்தர்ாப்பங்களில் விதைத் தொகுதியில் வைக்கவேண்டிய விதைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டன.

- விதை அறிக்கை வழங்குவதற்காக நிறுவனத்தின் கணனி மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை நிலைபேறான சக்திவள அதிகாரசபை – பத்து காற்றாடிக் கோபுரங்களை நிர்மாணித்தல்

வளி தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் நோக்கத்தில் பத்து காற்றாடிக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்குரிய ரூபா 16,675,000 பெறுமதியான ஒப்பந்தம் மற்றும் வளியை அளவிடும் உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 7,095,000 தொகையான ஒப்பந்தத்திற்கு 2010 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் வெற்றிநிலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட கால எல்லையில் கோபுரங்கள் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் 5 கோபுரங்கள் 3 மாதங்கள் தொடக்கம் 2½ வருடங்கள் வரையான கால இடைவெளியுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒரு கோபுரம் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கோபுரங்கள் செயற்படு நிலையில் காணப்படவில்லை. தரவுகளைச் சேகரித்து கணனி முறைமைக்கு ஒன்று சேர்ப்பதற்கு அசாதாரண காலம் எடுத்திருந்தது.

## மூன்று மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்தல்

தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய பரிசோதனைச் செயற்திட்டமாக ரூபா 9 மில்லியன் தொகையில் 3 மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்வதற்காக 2007 செப்தெம்பர் 07 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்தச் செயற்திட்டத்தின் வெற்றி நிலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

செயற்திட்டத்தின் சாத் திய வள ஆய்வு உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு மேற்பார்வை நடவடிக்கைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2009 திசெம்பர் 14 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 7,887,600 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2013 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் மாதிரி மின்சார மோட்டார் உற்பத்தி செய்யப்பட்டு கைளிக்கப்பட்டிருக்கவில்லை.

# பகுதி - V

# அரசாங்க கணக்காய்வுக்குட்பட்ட துறைகள் மீதான விரிவான கணக்காய்வு மீளாய்வு

# அரசாங்க வருமான முகாமைத்துவம்

## வருமான சேகரிப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வருமானச் செலவு மதிப்பீட்டின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுதல்களைத் தவிர்த்து மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,283,500 மில்லியனாக இருந்தது. இது முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,129,899 மில்லியனுடன் ஒப்பிடுகையில் முன்னைய ரூபா 153,601 மில்லியன் அல்லது 13.59 சதவீத அதிகரிப்பினைச் சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், நிதி திட்டமிடல் அமைச்சின் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுதல்களைத் தவிர்த்து திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,192,226 மில்லியனாக இருந்ததுடன் அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்தப் பார்க்கிலும் ரூபா 91,274 மில்லியன் அல்லது 7.1 சதவீத குறைவினை பிரதிநிதித்துவப்படுத்தியது. மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 1,066,247 மில்லியன் தொகையான அல்லது 89 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தன. இது முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 996,817 மில்லியன் தொகையான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 69,430 மில்லியன் அல்லது 6.97 சதவீத முன்னேற்றத்தினைப் பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும், நிதி திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கையில் அரசாங்க நிதிச் செயற்பாடுகளின் பொழிப்பு மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட ரூபா 1,051,460 வருமானத்திற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,137,447 ஆனமையால் 8.2 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

அரசாங்க வருமானத்தில் 85 சதவீதமானவை அண்ணளவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், கலால் வரித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகிய பிரதான 04 அரசாங்க நிறுவனங்களால் பங்களிப்புச் செய்யப்படுகின்றன. அத்திணைக்களங்களின் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான செயலாற்றல் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | இலங்கை சுங்கம் | | கலால் வரித் திணைக்களம் | | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 ரூபா மில் | 2012 ரூபா மில | 2013 ரூபா மில | 2012 ரூபா மில | 2013 ரூபா மில | 2012 ரூபா மில | 2013 ரூபா மில | 2012 ரூபா மில |
| மதிப்பிடப்பட்ட வருமானம் | 575,606 | 511,960 | 405,622 | 361,742 | 68,138 | 65,225 | 8,279 | 6,482 |
| உள்ளபடியான வருமானம் | 467,162 | 418,424 | 362,782 | 341,999 | 66,041 | 60,081 | 7,726 | 7,952 |
| வருமான சேகரிப்பு செயலாற்றல் (சதவீதம்) | 81 | 82 | 89 | 94 | 97 | 92 | 93 | 123 |
| மொத்த பொது வருமானத்தின் சதவீதமாக | 43.81 | 39.24 | 34.02 | 32.01 | 6.19 | 5.63 | 0.72 | 0.74 |

மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு மேலான வருமானத்தைச் சேகரிப்பதற்கு மேற்குறித் திணைக்களங்கள் தவறியிருந்தன. எவ்வாறெனினும், அரச வருமானப் போக்கில் 2012 ஆம் ஆண்டின் போதான ஒப்பீட்டுப் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் மாத்திரமே மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் 2013 ஆம் ஆண்டின் போதான பெறுமதி சேர் வரி ரூபா 217,687 மில்லியன் தொகையானதுடன் அவ் வரி வருமானத்தில் இலங்கை சுங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது சேகரிக்கப்பட்ட ரூபா 104,517 மில்லியன் தொகையான வரித் தொகையும் உள்ளடங்கியிருந்தன.

இவ்வாறே அரசாங்க வருமானம், வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானமாக வகைப்படுத்தப்படுவதுடன் மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளின் போதும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட அரசாங்க வருமானம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விடயம் | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| வரி வருமானம் | 1,005,895 | 908,913 | 845,697 | 724,748 | 618,932 |
| வரி அல்லா வருமானம் | 131,552 | 142,547 | 122,165 | 92,532 | 80,712 |
| மொத்த வருமானம் | 1,137,447 | 1,051,460 | 967,862 | 817,280 | 699,644 |

மூலம் : நிதி, திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை - 2013


அரசாங்க வருமானமாக 2012 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 1,051,460 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட அரசாங்க வருமானம் ரூபா 1,137,447 மில்லியன் வரை ரூபா 85,987 மில்லியன் தொகையால் அதாவது 8.18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மொத்த வருமானத்தின் செயலாற்றலின் படி 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக வரி அல்லாத வருமானம் ரூபா 10,995 மில்லியன் தொகையால் அதாவது 7.71 சதவீதத்தால் குறைவடைந்திருக்கையில் வரி வருமானம் ரூபா 96,982 மில்லியன் தொகையால் அதாவது 10.67 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை மொத்த அரசாங்க வருமான அதிகரிப்பிற்குத் தாக்கமளித்திருந்தது.

மொத்த வரி வருமானத்தின் 10.67 சதவீத அதிகரிப்பிற்காக வருமான வரி, உள்நாட்டுப் பயன்பாட்டின் அடிப்படையிலான வரி மற்றும் இறக்குமதியில் அடிப்படையிலான வரிகளின் 19.2 சதவீத, 10.9 சதவீத 7.4 சதவீத அதிகரிப்பிற்குத் தாக்கமளித்திருந்தது.

வரியல்லா வருமானம், 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 10,995 மில்லியன் தொகையால் 7.71 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மத்திய வங்கி ஒப்படை இலாபம் மற்றும் பங்கிலாபங்களில் குறைவடைந்திருந்தமை இதற்குத் தாக்கமளித்திருந்தது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அரசாங்க வருமானமும்

மீளாய்வாண்டுக்கான அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.1 சதவீதமாக காணப்பட்டதுடன் இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் இது 13.9 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், இக் குறைவு மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 ஆண்டு காலத்தின் போது ஒவ்வொரு ஆண்டின் போதும் தொடர்ந்து நேர்ந்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் மூலம் இக் குறைவிற்காக பொருளாதார சேவைக் கட்டண வருமானம், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி வருமானம் மற்றும் பெற்றோலிய இறக்குமதியின் மூலம் உற்பத்தி வரி வருமானக் குறைவடைந்தமை காரணமாக அறிக்கையிடப்பட்டிருந்தன. இந் நிலை வரைபடம் 2 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.





வரைபடம் 2: மொ.உ.உ. இன் சதவீதமாக அரசாங்க வருமானம்
மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2013

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி வருமானத்தின் குறைவின் போக்கு கடந்த சில ஆண்டுகளின் போது தொடர்ந்து அவதானிக்கப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 12 சதவீதம் முதல் 2013 ஆம் ஆண்டின் போது 11.6 சதவீதமாக மேலும் குறைவடைந்திருந்தது.

வரி அல்லாத வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது இது 1.9 சதவீதமாகியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது இது 1.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

**அரசாங்க வருமானமும் பாதீட்டு பற்றாக்குறையும்**

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டிற்கான அரசாங்க மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,253,509 மில்லியனானதுடன் பொது முதலீட்டுச் செலவுகள் ரூபா 455,578 மில்லியனாகக் காணப்பட்டது. எனினும், அரசாங்கத்தால் உழைத்த ரூபா 1,066,247 மில்லியன் தொகையான ஒட்டுமொத்த வருமானம் காரணமாக இது 2013 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளையும் தீர்த்துவைப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. இதன் படி ஒட்டு மொத்த அரசாங்க வருமானத்தினை மிகைத்து ஏற்பட்ட மீண்டுவரும் செலவுகள் ரூபா 187,262 மில்லியன்களாக இருந்தன. இதன் காரணமாக ரூபா 455,578 மில்லியன் தொகையான முதலீட்டுச் செலவுகளை உள்ளடக்கி ரூபா 642,840 மில்லியன் தொகையான ஒட்டுமொத்த பாதீட்டு பற்றாக்குறையினை ஈடுசெய்தற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலங்களாக நிதி மூலவளங்கள் மேலும் வேண்டப்பட்டன. இந் நிலை வரைபடம் 3 இன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 3: மொ.உ.உ. இன் சதவீதமாக அரசாங்க வருமானம், செலவு, பாதீட்டுப்பற்றாக்குறை என்பன
மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கை – 2013

அரசாங்க வருமான முகாமைத்துவம் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரிக்கையிலும் வருமானம் உழைக்கும் நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்கையிலும் பின்வரும் விடயங்களிலிருந்து அரசாங்க வருமானத்திற்கு ஏற்படும் தாக்கங்களை தவிர்க்க முடியாதிருந்தது.

- காலத்துக்கு காலம் வரிகளைத் திருத்துதல்
- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவில் அதிகரிப்பு
- வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்களில் தளம்பல்
- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைத் தளம்பல்கள்

## பாதீட்டுப் பற்றாக்குறை நிதியீட்டம்

2013 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு மானியம் அடங்கலான, மொத்த வெளிநாட்டு நிதியீட்டம் ரூபா 104,280 மில்லியன் வரை 54.44 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் தேறிய உள்நாட்டுக் கடன் பெறுவனவு ரூபா 482,073 மில்லியன் வரை 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 74.69 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டின் போது 74.38 சதவீதமான மத்திய மற்றும் நீண்ட காலக் கடன் அளவு 2013 ஆம் ஆண்டின் போது 76.3 சதவீதமானதுடன் இதில் 83.8 சதவீதம் திறைசேரிப் பிணையாகக் காணப்பட்டது. இந் நிலை பின்வரும் வரைபின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க வருமான முகாமைத்துவம் மீதான விசேட புலனாய்வுகளும் அரசாங்க வருமானத்தில் அவற்றின் தாக்கமும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் காலத்துக்கு காலம் பொறுப்பேற்கப்பட்ட அரசாங்க வருமானம் மீதான விசேட புலனாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட அரசாங்க வருமான முகாமைத்துவம் தொடர்பாக மோசடிகள், ஊழல்கள், தவறுகள், பலவீனங்கள் மற்றும் விளைவற்ற, செயற்திறனற்ற, சிக்கனமற்ற போக்குகள் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. இது தொடர்பாக கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளினூடாக இவைகள் மீதான அவதானிப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் அக்குறைபாடுகளைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் குறைந்த செயன்முன்னேற்றம் அரசாங்க வருமான முகாமைத்துவத்தை கூடுதலாகப் பாதித்துள்ளது என்பதனை மேலும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக அரசாங்க வருமானத்தைச் சேகரிக்கும் நான்கு பிரதான அரசாங்க நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், கலால்வரித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பவற்றின் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட தொடக்க உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பல பலவீனங்கள் தொடர்பான சுருக்கிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

- வருமானம் தொடர்பான முறைமைகளில் கணக்காய்வு இடருள்ள துறைகளை கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து மோசடிகளையும் வழுக்களையும் தடுப்படுதற்காக விசேடமான முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு உடனடியாக செயற்படாமை.

- அரச நிறுவனங்களின் தகவல்களைப் பேணுதல், அறிக்கையிடுதல் முறையில் நிலவும் நலிவுகளை தவிர்ப்பதற்கு செயற்படாமை.

- கணக்களிப்பொறுப்பு செயன்முறை முறைப்படி செயற்படுத்தப்படாமை.

- வருமானம் சேகரிக்கும் அதிகாரமுள்ள நிறுவனங்களுக்கு மத்தியில் உள்ளகரீதியாக இணைக்கப்பட்ட மற்றும் நாளது வரையாக்கப்பட்ட தகவல் வலைப்பின்னல் முறைமை இல்லாமை மற்றும் குறித்த துறைகளில் நிலவும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிலான நலிவுகளைச் சீராக்குவதற்காக ஒத்துழைப்புடன் செயற்படாமை.
- வருமான மோசடிகளைத் தடுக்கும் முறைகளுக்கு உரித்தான முறை அவ்வப்போது வலுப்படுத்தப்படாமை.

- எதிர்கால நிச்சயமற்ற தன்மைகளை இனங்காண்பதன் மூலம் தவறான வருமானத்தை மதிப்பிடுவதற்காக சரியான தரவு அடிப்படையினைப் பேணாமை.

மேற்குறித்த உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகளைக் குறைப்பதற்காக

- நிலவும் வருமான மார்க்கம் பாதுகாக்கப்படுதல்

- புதிய வருமான மார்க்கங்களை இனங்காணல்

  தொடர்பாக மேலும் விசேட கவனத் செலுத்தப்படுதல் வேண்டும்.

மீளாய்வாண்டின் போது அரசாங்க வருமானத்தில் 34 சதவீதத்திற்கு மேல் பங்களிப்புச் செய்கின்ற இலங்கை சுங்கத்தினால் 15 பிரதான வருமான குறியீடுகளின் கீழ் சேகரிப்பு செயற்பாட்டின் போது அவதானிக்கப்பட்ட நலிவுகளில் ஓர் பகுதி பின்வருமாறாகும்.

- கொள்கலன்கள் விடுவிக்கும் நடவடிக்கைக்கு உரித்தான சுங்க பதிவுகளில் 84 சதவீதத்திற்கு அண்மித்த அளவு, எளிதான சுங்க ஆய்வுகள் (Amber Channel) இன் கீழ் விடுவிக்கப்பட்டதாகவும் அம் முறைகளின் கீழ் சுங்க இடர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக இறக்குமதிகள் விடுவிக்கப்படுவதற்கு உள்ள விரிவான சந்தர்ப்பமும் இதன் மூலம் அரசாங்க வருமானம் அறவிடப்படாமைக்கான சந்தர்ப்பங்கள் நிலவுதல்.

- சுங்கப் புலனாய்வு முறைகளைத் தீர்மானிப்பதற்கு உரிய தகவல்கள் முறை ஸ்தாபிக்கப்பட்டிராமை, தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்படும் புலனாய்வு முறைமை உத்தியோகத்தர்களின் விருப்பின் பேரில் மாற்றப்படும் காரணத்தால் ஸ்கிரீன் பகுதியின் உத்தியோகத்தர்களின் விருப்பைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய நலிவுகளின் மூலம் வருமானம் கிடைக்கப்பெறாது போகலாம்.

- அமெரிக்க டொலர்கள் 15,600,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 04 ஸ்கான் இயந்திரங்கள் சேவையிடுவதற்காக மாத்திரம் காலாண்டிற்கு ரூபா 3,876,000 தொகையும் மிகப்பாரிய பராமரிப்பு மற்றும் சம்பளங்கள் போன்றவற்றிற்காக பாரிய கிரயமும் ஏற்கப்பட்டிருக்கையில் மொத்த சுங்க குறிப்புகளில் 9.57 சதவீதத்திற்கு அண்மித்த சில கொள்கலன்கள் மாத்திரம் ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாக சுங்கம் தவறான முடிவிற்கு வருவதற்கான இடம் மட்டுப்படுத்தப்படல்.

- இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் செயற்பாட்டிற்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டிய பங்களிப்பைச் செலுத்தும் முதலீட்டுச் சபையிடம் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுடன் ஏற்றுமதிகளுக்கு உரித்தான கொள்கலன் தொடர்பான நேர் கண்காணிப்பு இலங்கை சுங்கத்திடம் இல்லாத காரணத்தால் ஏற்படக் கூடும் என சுங்கம் தவறான முடிவிற்கு வராமை.

- இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்காக வரி அறவிடப்படும் தற்போதைய கொள்கையால் ஜப்பான் வாகனங்களின் ஏலவிற்பனையின் போது கூடிய விலைகளைச் செலுத்திக் கொள்வனவு செய்துள்ள வாகனங்கள் வரி நடவடிக்கைகளுக்காக மிகவும் குறைவான பெறுமதியைக் கருத்திற்கொள்வது பெருவாரியாக மேற்கொள்ளப்படுவதன் காரணமாக ஏற்படும் வரி கிடைக்கப்பெறாது போனமை.

- சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனப் பதிவிற்காக வேறு வாகனங்களுக்கு உரிய சுங்கக் குறிப்புகள் போலியாகப் பயன்படுத்தப்பட முடியாத வகையில் இறக்குமதி செய்யப்படும் சகல தரவுகளும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிராமையும் உரிய தரவுகள் இலங்கை சுங்கத்தால் மீளப் பெறப்பட்டு ஒப்பிடப்பட்டிராத காரணத்தால் உருவாகும் வருமானம் கிடைக்கப்பெறாமை.

- அம்பியூலன்ஸ் வண்டி மற்றும் அமங்கல வாகனம் போன்ற குறைந்த வரிப் பெறுமதியுடனான சுங்கத் திருத்த இலக்கத்தின் கீழ் போலியாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் வேறு சொகுசு ரக வாகனங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டமையால் நேர்ந்த வரி மோசடியைத் தடுப்பதற்காக ஏற்ற நடைமுறைகள் இலங்கை சுங்கத்திடம் இல்லாமை.

- உற்பத்தி வரி அறவிடப்படுகையில் காலாண்டறிக்கை சமர்ப்பித்தலிலான தாமதம், அவற்றின் சரியான தன்மையை பரீட்சிக்காமை, கண்காணிக்கப்படும் ஒவ்வொரு நாளும் உற்பத்தி நடவடிக்கைகள் நிகழாமை, வரிக் கண்காணிப்பிற்காக ஒரே உத்தியோகத்தர் தொகுதியை ஈடுபடுத்தல், அவதானிப்பு அறிக்கையை எழுத்து மூலம் பேணாமை போன்ற நடைமுறைகளின் மூலம் வரி வருமானம் கிடைக்கப்பெறாமை.

- இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்படாத ஆடை உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கு சலுகை வழங்குவதற்காக செயற்படும் INFAC தீர்மானத் திட்டத்தின் கீழ் செயற்படும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்காக முறையான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அற்றுப் போனமையால் வழங்கப்பட்ட சலுகை அடிப்படையிலான சந்தர்ப்பங்கள் நிலவியமை.

- பாதுகாப்பு அறைகளுக்கு உரிய முறையான களஞ்சிய அறை பின்பற்றப்பட்டிராமை, இடமாற்றங்களின் போது களஞ்சியம் முறையாகக் கையளிக்கப்பட்டிராமை, பாதுகாப்பு அறை பதிவேடு சரியாகவும்

நாளதுவரையாகவும் பேணப்படாமை, பொருட்கள்/ விடயங்கள் கண்டெடுக்கப்படுவதற்கு சிரமப்படல், களஞ்சியத்தில் சில பொருட்கள் சேதமடைந்திருத்தல், மத்திய கைதவிர்ப்புப் பிரிவால் விற்பனைக்கு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது பொருட்களின் பகுதி அங்கீகாரமின்றி அகற்றப்பட்டிருந்தமையால் அரசிறைக்குப் பெறவேண்டிய பங்களிப்பு கிடைக்கப்பெறாது போனமை.

- தபால் சுங்க காரியாலய சுங்க விடுவிப்பின் போது 15 சதவீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவிலான பார்சல்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சுங்கப் புலனாய்வு தொடர்பாக போதிய கண்காணிப்பு மேற்கொள்ளப்படாது, மதிப்பீட்டிற்காக பயன்படுத்தப்படும் குறித்த முறைமை தபால் காரியாலயத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட்டிராமை போன்ற நலிவுகள் தொடர்பாக அரசிறை கிடைக்கத் தவறுவதற்கான இடம் நிலவியது.

மீளாய்வாண்டின் போது அரசாங்க வருமானத்தில் 43.81 சதவீதப் பங்களிப்புச் செய்கின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான சேகரிப்பு செயன்முறையில் பின்வரும் குறைபாடுகளின் ஒரு பகுதி பின்வருமாறாகும்.

- பெறுமதி சேர் வரி 1/3 பிடித்து வைக்கப்பட்டு அத் தொகை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டமையால் வரிகளில் 1/3 தாமதமின்றி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்குக் காரணமாகியிருந்ததுடன் வரி அறவீடுகளைப் பரீட்சிக்கப்படுவதற்கு இயலுமாக இருந்தது. எனினும், 2011 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் காரணமாக வரிப் பொறுப்புகள் தாமதமாவதுடன் அறவீடுகள் தொடர்பான கட்டுப்பாட்டு முறையும் நலிவாகக் காணப்பட்டது.

- திணைக்களத்தின் வரி நிர்வாகத்திற்காகப் பேணப்பட்ட கணனி முறைமைகளிலுள்ள பாதிப்பக்களின் காரணமாக வரிகளை அறிவித்தல், வரிகளை மீளளித்தல் மற்றும் ஏனைய தகவல்கள் தொடர்பான பதிவேடுகள் ஏற்றுக்கொள்ள முடியாத மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளை தரவுகளை கணனிமயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பொருட்படுத்தாது நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- திணைக்களத்தால் விதிக்கப்பட்டிருந்த வரிக்கான அதிகாரச்சட்டங்களும் சட்டங்கள், விதிகள் சிக்கலாகக் காணப்பட்டமையால் வரி செலுத்துனர்களுக்கு நிலவும் வரி முறை தொடர்பாக விளங்கிக் கொள்வதற்கு முடியாதிருந்த காரணத்தால் வரி செலுத்துனர்களுக்கு சுய உற்சாகத்துடன் வரி செலுத்துவதற்கு உந்துதல் ஏற்படுவதில்லை.

- வரி நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய வேளையில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வங்கிகளுக்குச் செலுத்தப்படும் வரிகளுக்கு உரித்தான அனுப்பும் பத்திரம் வங்கிகளிடமிருந்து தருவிக்கப்பட்டிராமை.

- வரி செலுத்துபவரால் உரிய வரி வங்கிக்குச் செலுத்தப்படுகையில் அவ் வரித் தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் செயற்பாட்டில் காலதாமதம் நிலவியமை மற்றும் அவ்வறிக்கைகளுக்கு இடையே வேறுபாடுகளும் நிலவின.

வருமானக் குறியீடு 2 இன் கீழ் வருமானம் சேகரிக்கப்படும் கலால் வரித் திணைக்களத்தால் அரசாங்க வருமானத்தின் 6.19 சதவீதமான பங்களிப்பு வழங்கப்படுவதுடன் அவ் வருமானச் சேகரிப்பு செயற்திறனின் போது அவதானிக்கப்பட்ட பல பலவீனங்களில் சில கீழே தரப்படுகின்றன.

- கலால் வரியின் நிலுவை வருமானத்தை அறவிடும் முன்னேற்றம் திருப்தியற்றதாகவும் நிலுவை வரியை அறவிட்டுக்கொள்வதற்கு உரிய காலத்திலும் அர்த்தமுள்ளதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள பழைய கோவைகள் காணாமற் போனமை மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை.

- மதுபானத் தொழிற்சாலைகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வருமானச் சேகரிப்புப் பணி திணைக்களத்தால் தொடர்ந்து தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்டிராமை.

- எளிதாகவும் சரியாகவும் கலால் வரி வருமானம் சேகரிக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு ஏற்ற கணனி வலையமைப்பு முறை ஒன்று செயற்படுத்தப்படாமை.

**மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வருமானத்தை சேகரிப்பதில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள்**

பிரதான 3 வருமான குறியீடுகளின் கீழ் வருமானத்தைச் சேகரிக்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் சேகரிக்கப்படும் வருமானம் மொத்த அரசாங்க வருமானத்தின் 1 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைந்த பங்களிப்பைச் செய்கின்ற போதிலும் இலங்கைச் சுங்கத்தால் சேகரிக்கப்பட்ட மொத்த வரி வருமானத்தின் 30 சதவீதத்திற்குக் கூடிய சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மோட்டார் போக்குவரத்து இறக்குமதியின் போது சேகரிக்கப்பட்ட வரி வருமானத்திற்கு மிகவும் பாதகமான வகையில் தாக்கமளிக்கும் காரணியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நிலவும் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் மற்றும் அதன் நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கும். அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் ஜி, எச் மற்றும் ஜே என்ற ஆங்கில எழுத்துத் தொகுதியின் முதல் எழுத்தாக உள்ள இலக்கத் தொகுதியின் கீழ் பதிவு செய்யப்படுவதை தவிர்த்திருந்த இலக்கங்களுக்காக இந்நாட்டிற்கு சுங்க வரி செலுத்தப்படாது சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட வாகனங்களின் தகவல்கள் போலியாக கணனி முறைமைக்கு உள்ளடக்கப்பட்டு மோசடியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

- ஜி, எச் மற்றும் ஜே என்ற ஆங்கில எழுத்துத் தொகுதியில் ஆரம்பிக்கும் பழைய இலக்கத் தொகுதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய குறைந்த பெறுமதியிலான வாகனங்களின் கணனி தரவுகளை சூட்சுமமாக மாற்றியமைத்து சட்ட விரோதமாக இந் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட நவீன வாகனங்களின் விபரம் கணனிக்கு உட்புகுத்தப்பட்டு மோசடியாக வாகனங்களைப் பதிவுசெய்திருந்தமை.

- முப்படையினரால் ஏலவிற்பனை செய்யப்படும் வாகனமாக போலியாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மோசடியாக வாகனங்களைப் பதிவு செய்திருத்தல்.

- மோசடியாக தயாரிக்கப்பட்ட கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த வகையில் சுங்கக் கட்டணங்கள் செலுத்தப்படாது இந்நாட்டிற்கு சட்ட விரோதமாகக் கொண்டுவரப்படும் நவீன மோட்டார் வாகனங்களை மோசடியாக பதிவுசெய்திருத்தல்.

- சுங்க ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்யப்படும் வாகனமாக போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, சுங்க வரி செலுத்தப்படாது சட்ட ரீதியாக அல்லாது இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

- போலியாக இறக்குமதிச் சுங்கப் பதிவு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டு மோசடியாக வாகனங்களைப் பதிவு செய்தல்.

- கப் வண்டியாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன மோட்டார் காராக பதிவு செய்யப்படுவதற்கு செயற்பட்டிருந்தமை.

- மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வேறு பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் சுங்கக் குறிப்பு இல. மற்றும் ஏனைய ஆவணங்களைப் பயன்படுத்தி சொகுசு மோட்டார் வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தமை.

- கையுளவு இயந்திரமாக சுங்க வரி செலுத்தப்பட்டு போலி ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டு சொகுசு மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

- பரிசுத்திட்டத்தின் கீழ் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தில் சமய ஸ்தலங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வான்களின் நிபந்தனை மோசடியாக அகற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் அவ் வாகனங்கள் பலவற்றின் உள்ளபடியான உற்பத்தி ஆண்டு தவறாக மாற்றப்பட்டமை உள்ளடங்கலாக வேறு முறைகேடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் பாரிய சுங்க வரி முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டமை.

- சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்படும் அல்லது பாகங்கள் சேகரிக்கப்பட்டு தயாரிக்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் மறறும் கையுளவு இயந்திரங்கள் மோசடியான முறையில் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

- கப் வண்டியாக சுங்க வரி செலுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட வாகனக் கதவுகள் ஐந்து கதவு சொகுசு வாகனமாகவும் சிங்கல் கப் வாகனமாகவும் சுங்க வரி செலுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் டபிள் கப் வாகனமாக மாற்றியமைக்கப்படுவதன் மூலம் பாரிய சுங்க வரி முறைகேடுகள் மேற்கொள்ளப்படல்.

- மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் சுங்கக் குறிப்புகளின் மூலம் மோட்டார் வாகனங்கள் மோசடியான முறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

- சுங்க ஹாமனைஸ்ட் நொமென்கிலோசர் 8705 இன் கீழ் பொருட்கள் அல்லது பயணிகளைக் கொண்டு செல்லும் நோக்கிற்கு மாறான விசேட நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனம் இரட்டை நோக்க வாகனம் மற்றும் மோட்டார் லொறியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

- ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு தற்காலிகமாக வரும் வெளிநாட்டவர்கள் அல்லது நிறுவகத்தால் இந்நாட்டில் பயன்படுத்தப்படுவதற்காகக் கொண்டுவரப்படும் வாகனங்களுக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் (Carnet Permits) காலம் கடந்ததை அடுத்து வரி செலுத்தப்படாது முறையற்ற விதத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

- விபத்திற்கு உட்பட்ட அல்லது வேறு வகையில் ஓட்டத்திலிருந்து விலக்கப்பட்ட வாகனங்களின் அடையாள இலக்கத்தின் கீழ் சட்ட விரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்படும் நவீன வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

- ஏற்கனவே திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய வாகன இலக்கங்களின் கீழான வாகனங்களின் இயந்திர (செசி) இலக்கத்தைக் குறித்து நவீன வாகனத்தைப் பழைய இலக்கத்தின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 16 ஆவது பிரிவின் மூலம் ஆணையாளர் நாயகத்தின் முன் எழுத்து மூல அங்கீகாரத்துடன் அன்றி எந்த ஒரு நபராலும் இலங்கை மோட்டார் வாகனத்தைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒருங்கிணைத்தல், புதிதாகத் தயாரித்தல், மாற்றியமைத்தல் என்பன மேற்கொள்ளப்படுதல் கூடாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இவ் ஏற்பாடுகளுக்கு மாறாக பழைய உற்பத்தி வடிவத்தை முற்றாக மாற்றியுள்ளமை மேற்குறித்த கணக்காய்வு அவதானிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும், அத்தகைய வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு சட்ட ரீதியான ஏற்பாடுகளின் படி செயற்படுவதற்குப் பதிலாக அந் நிலை சட்ட ரீதியாக திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருந்தனர்.

- அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக சொகுசு வரி அறவிடப்பட வேண்டிய வாகன வகைப்படுத்தல் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சொகுசு வரி அறவிடப்பட வேண்டிய வாகனங்களில் அரைச் சொகுசு வரி அறவிடப்பட்டிருந்தமை.

- இரட்டை நோக்க மோட்டார் வாகனங்களாகவும் லொறிகளாகவும் பதிவுசெய்யப்பட்டதன் காரணமாக பாரிய சொகுசு வரித் தொகை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

- நிலுவை வருமானம் இனங்காணப்படக்கூடிய வகையில் முறையான பதிவேடுகளும் அறிக்கைகளும் பேணப்பட்டிராததுடன் நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சொகுசு வரிக்கு உட்பட்ட சில வாகனங்களில் அவ் வரி அறவிடப்பட்டிராது சொகுசு வரித் தொகை நாளதுவரையாக அறவிடப்பட்டிராத காரணத்தால் வருடாந்தம் பாரிய நட்டம் அரசாங்கத்திற்கு நேர்ந்திருந்தது.

# அரசாங்க செலவின முகாமைத்துவம்

நிதிப்பிரமணம் 124 இன் பிரகாரம் வருமானத்தினை அதிகரிப்பதற்கும் ஏனைய அரசாங்க பணத்தைச் சேகரிப்பதற்கும் அத்துடன் அரசாங்கத்தின் அனைத்து நிதிச் செயற்பாடுகளையும் பொதுவாக மேற்பார்வை செய்வதற்கும் நிதி அமைச்சர் பொறுப்பாக உள்ளார். சகல வகையிலும் திணைக்கள ரீதியான பணக் கொடுக்கல் வாங்கல்கள் எந்த எல்லைக்குள் பொதுவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து அமைச்சர் அல்லது அவர் சார்பாக திறைசேரியால் நிர்ணயிக்கப்படுகின்றது. அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு கணக்கு கூறுவது நிதி அமைச்சரின் கடமையாவதுடன் இதற்காக பொது மக்களின் நிதியத்தைச் சேகரித்தல் மற்றும் செலவிடுவதற்காக அமைச்சரால் ஒவ்வொரு அமைச்சின் செயலாளரை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமித்து திறைசேரியின் பணிப்புரைகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகளைவ மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அமைச்சின் செயலாளர்களுக்கு மேலதிகமாக அரசியலமைப்பின் 52(7) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களால் மேற்பார்வை செய்யப்படாத ஏனைய திணைக்களங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அத் திணைக்களங்களின் பணக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மேற்பார்வை செய்யப்படும் அரசியலமைப்பு ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக உள்ளனர்.

அரசாங்க நிதி மீதான கட்டுப்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் XVII ஆம் அத்தியாயத்தின் 148 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது நிதி மீதான முழுமையாக கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்கு பொறுப்பளிக்கப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டிற்கான பொதுச் செலவுகளுக்காக வேண்டப்பட்ட ஏற்பாடுகள் 2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கிணங்க செலவினத் தலைப்பு 202 இற்காக ரூபா 827 பில்லியன் தொகை மீண்டுவரும் செலவுகளுக்காகவும், ரூபா 560 பில்லியன்கள் மூலதனச் செலவுகளுக்காகவும் ரூபா 1,387 பில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிலவும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள திரட்டு நிதியத்திற்குச் சாட்டப்பட வேண்டுமென தற்போதுள்ள சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட ீண்டுவரும் செலவுகளான ரூபா 462 பில்லியன் தொகையும் ரூபா 718 பில்லியன் மூலதனச் செலவுகளுமான ரூபா 1,180 பில்லியன் தொகையான செலவுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. இதன் பிரகாரம் ரூபா 2,567 பில்லியன் தொகையான நிதி ஏற்பாடுகள் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக விசேட சட்ட சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 36 பில்லியன் தொகையான மேலதிக ஏற்பாடுகளுடன் சேர்த்து 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதி ஏற்பாடு ரூபா 2,603 பில்லியன்களாக இருந்தது. பாராளுமன்றத்தால் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீட்டுத் தலைப்பு 240, தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் இல. 2 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 37 பில்லியனையும் மூலதனச் செலவுகளுக்கான ரூபா 37 பில்லியனையும் உள்ளடக்கி ரூபா 74 பில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது.

### நிதிகளின் பயன்பாடு

2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,603 பில்லியன் தொகையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 2,412 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் ரூபா 191 பில்லியன் தொகையான சேமிப்பினை விளைவித்துள்ளது. முன்னைய ஆண்டிற்கான ரூபா 101 பில்லியன் சேமிப்புடன் ஒப்பிடுகையில் சேமிப்பில் ரூபா 90 பில்லியன் தொகையால் சேமிப்பில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டவாறு ரூபா 2,603 பில்லியன் தொகையான ஏற்பாடு செலவுத் தலைப்புக்களிற்கு மாற்றப்பட்டு உரிய வகையில் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 38 செலவின விடயங்களுக்கு ரூபா 13 பில்லியன் தொகையான தேறிய ஏற்பாட்டில் எத்தொகையும் செலவு செய்யப்படாது மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. இது மொத்த சேமிப்பின் 6.8 சதவீதமாகக் காணப்பட்டது. தேறிய ஏற்பாட்டில் 76

சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 16 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது.இது மொத்த ஏற்பாட்டில் 8.4 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வாறே தேறிய ஏற்பாட்டில் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 25 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது மொத்த சேமிப்பின் 13.1 சதவீதமாகக் காணப்பட்டது. ரூபா 191 பில்லியன் மொத்த சேமிப்பில் 70.2 சதவீதமான அதாவது ரூபா 134 பில்லியன் மீண்டெழும் ஏற்பாட்டில் சேமிப்பு காணப்பட்டதுடன் இது மொத்த ஏற்பாட்டில் 29.8 சதவீதமான அதாவது ரூபா 57 பில்லியன் மூலதன ஏற்பாட்டில் சேமிப்பு காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தான கடன் கொடுப்பனவு தவிர்ந்த மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபா 545 பில்லியன்களாக இருந்ததுடன் அத்தொகையில் 83.7 சதவீதம் அதாவது 456 பில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதன ஏற்பாடான ரூபா 471 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 15 பில்லியனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளிலும் பயன்படுத்திய மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடு பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றது.

| ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| மீண்டுவரும் | 1,956 | 1,721 | 1,562 | 1,404 | 1,381 |
| மூலதனம் | 456 | 471 | 399 | 347 | 366 |
| மொத்தம் | **2,412** | **2,192** | **1,961** | **1,751** | **1,747** |

*மூலம் - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அறிக்கை - 2013*

2013 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 2,567 பில்லியன் தொகையான செலவானது ரூபா 2,344 பில்லியன் தொகையான உள்ளூர் நிதிகளிலிருந்தும் ரூபா 223 பில்லியன் தொகையான வெளிநாட்டு நிதிகளிலிருந்தும் நிதியளிக்கப்படுவற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வெளிநாட்டுக் கடன் மானியங்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 199 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இதன் படி, எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தல்களுக்காக தேவையான வெளிநாட்டு நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் வெளிநாட்டு நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு நூற்றுக்கு நூறு வீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அச் செலவினம் ரூபா 201 பில்லியன் ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஏற்பாட்டைப் பார்க்கிலும் ரூபா 2 பில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | தேறிய ஏற்பாடு<br>ரூபா பில்லியன் | உள்ளபடியான பெறுவனவு<br>ரூபா பில்லியன் | பயன்பாடு<br>ரூபா பில்லியன் | தேறிய ஏற்பாட்டிற்காக பெறப்பட்டிருந்த வெளிநாட்டு நிதியத்திற்கு மேலாக ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டவை<br>ரூபா பில்லியன் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு கடன்கள் | 208 | 183 | 186 | (3) |
| வெளிநாட்டு மானியங்கள் | 15 | 16 | 15 | 1 |
| மொத்தம் | **223** | **199** | **201** | **(2)** |

வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களாக ரூபா 223 பில்லியன் தொகையை 2013 ஆம் ஆண்டிற்காக சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், நிதிப் பாய்ச்சலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணம் ரூபா 24 பில்லியன் தொகை குறைவாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு மானியங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட

ரூபா 15 பில்லியன் தொகையான இலக்கிடப்பட்ட தொகையில் ரூபா 16 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி வெளிநாட்டு மானியங்களிலிருந்து ரூபா 1 பில்லியன் அதிகமாகப் பெறப்பட்டிருந்தது. ஒட்டு மொத்தமாக நோக்குகையில் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்துவதற்கு தேவையான நிதியீட்டம் எதிர்பார்க்கப்பட்ட தொகையும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு திறைசேரிக்கு முடியாதிருந்தது.

மீண்டுவருபவை, மூலதனம்மற்றும் கடன்களை மீளச்செலுத்துதல் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த செலவுகளின் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பொதுப்படு கடனின் மீள்கொடுப்பனவு முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 58 பில்லியன் ஆல் குறைவடைந்த போதிலும் உள்நாட்டுக் கடன் கொடுப்பனவு முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 158 ஆல் அதிகரித்தமை மற்றும் மீண்டுவரும் செலவு முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 135 பில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை 2013 ஒட்டுமொத்த செலவின் அதிகரிப்பிற்கு தாக்கமளித்திருந்தது. அந் நிலை பின்வரும் அட்டவணையில் காணிப்பகிகப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| மீண்டுவருபவை | 1,235.5 | 1,118.3 | 1,020.2 | 951.5 | 881.9 | 736.5 |
| பொது முதலீடு | 455.6 | 471.1 | 398.5 | 347.0 | 365.7 | 297.2 |
| கடன் மீளச் செலுத்தல் | 702.5 | 602.8 | 542.3 | 452.6 | 499.4 | 379.2 |
| மொத்தச் செலவினம் | 2,411.6 | 2,192.2 | 1,961.0 | 1,751.1 | 1,747.0 | 1,412.9 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 8,674.0 | 7,582.0 | 6,543.0 | 5,602.0 | 4,825.0 | 4,411.0 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொதத்ச் செலவினம் | 27.8 | 28.9 | 30.0 | 31.3 | 36.2 | 32.0 |

மூலம் - :- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக் கூற்றுக்கள் 2013

மொத்த அரசாங்க செலவினம் மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டின் போதான அரசாங்க செலவினம் மொத்த தேசிய உற்பத்தியில் 27.8 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இது முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 1.1 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவு ரூபா 1,253.5 பில்லியன்களாக இருந்ததுடன் இது மொத்த அரசாங்க செலவின் 51.9 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இது மொத்த தேசிய உற்பத்தியின் 14.5 சதவீத்தையும் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டின் 15.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஒரு குறைவு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டின் போது வட்டிக் கொடுப்பனவிற்காக ரூபா 464.5 பில்லியன் அதாவது மொத்த மீண்டுவரும் செலவின் 37 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் செலவினமான 408.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 55.6 பில்லியன் தொகையால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டுவரும் செலவுகளில் உதவு தொகைகள், மானியங்கள் மற்றும் மாற்றங்களுக்காக ரூபா 24.8 பில்லியனால் செலவினம் அதிகரிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 351.4 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறே முன்னைய ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டின் போதும் தனியார் சம்பளங்களுக்காக மொத்த மீண்டெழும் செலவினத்தில் 24.5 சதவீதமான அதாவது ரூபா 306.9 பில்லியன்

தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டிற்கான செலவை விட ரூபா 34.3 பில்லியன் தொகையால் அதிகரிப்பைக் காண்பித்தது. மொத்த மீண்டுவரும் செலவில் வட்டி, உதவு தொகைகள், மானியங்கள் மாற்றங்கள் மற்றும் ஆளணி ஊதியங்களுக்கான மொத்தச் செலவு ரூபா 1,123 பில்லியன் செலவிட நேர்ந்தது. மொத்த மீண்டுவரும் செலவில் மேற்குறித்த செலவினம் உயர் சதவீதத்தினைக் கொண்டிருந்ததுடன் மொத்த மீண்டுவரும் செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கு சேகரிக்கப்பட்ட வருமானம் போதியதாக இருக்கவில்லை. மீண்டுவரும் செலவின் ஒரு பகுதியும் அரச முதலீடுகளும் கடன்தவணைப் பணங்களும் செலுத்தப்படுவதற்கு உள்ளூர் கடன்களும் வெளிநாட்டுக் கடன்களும் மானியங்களும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

ஏனைய மீண்டுவரும் செலவுகளையும் அரச முதலீடுகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தது. இதற்காக வருடாந்தம் வட்டி மற்றும் கடன் தவணை செலுத்தப்படுவதற்கு பாரிய தொகை செலவிடப்படுவதற்கு நேர்ந்திருந்ததுடன் இது வருடாந்தம் அதிகரிக்கும் கிரயமாக அவதானிக்கப்பட்டது.

மீண்டுவரும் செலவினங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட வருமானம் போதாதிருந்த போதிலும் அரசாங்க முதலீட்டிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 455.6 பஜல’லஜயன’ தொகை செலவிடப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் செலவினமான ரூபா 47.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 15.5 பில்லியன் தொகையான குறைவைக் காண்பித்தது. அரசாங்க முதலீடு மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடப்படுகையில் 2013 ஆம் ஆண்டின் போது 5.2 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒதுக்கீட்டுத் தலைப்பு 240 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 74 பில்லியன் தொகையான நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்தது.

## பொது முயற்சிகளில் முதலீடுகள்

அரசாங்க வணிகக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள், பெருந்தோட்டக் கம்பனிகள், மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் பங்கு உரித்து மற்றும் மூலதனப் பங்களிப்பிற்காக 125 நிறுவனங்களில் ரூபா 176.6 பில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 11 நிறுவனங்களில் ரூபா 38 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது 16 நிறுவனங்களில் பங்கு மூலதனம் குறைவடைந்தமையால் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 1.67 பில்லியன் தொகையால் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 212.9 பில்லியன் தொகையாகியிருந்தது.

62 அரசாங்க நிறுவனங்கள், 24 பெருந்தோட்டக் கம்பனிகள், 02 அபிவிருத்தி வங்கிகள் மற்றும் யு.எஸ் டொலர்களில் விலை கூறப்பட்ட 03 கம்பனிகள் உள்ளடக்கிய 91 நிறுவனங்களில் ரூபா 82.9 பில்லியன் தொகையான பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இதில் ரூபா 33.75 பில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்ட 38 நிறுவனங்களில் ரூபா 4.8 பில்லியன் தொகை பங்கிலாபமாக அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த வருமானம் மொத்த முதலீட்டுப் பெறுமதியில் 5.8 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இதன் படி, ரூபா 49.15 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த 67 நிறுவனங்களிடமிருந்து எவ்வித பங்கிலாபமும் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இவ்வாறே, ரூபா 212.9 பில்லியன் தொகையான மூலதனப் பங்களிப்புச் செய்யப்பட்ட 125 நிறுவனங்களில் பங்கிலாபம் வழங்கப்படாத 34 அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் முதலீட்டுப் பெறுமதி ரூபா 130.1 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

## பொது வைப்புகள்

குடியரசின் நிதிக் கூற்றுக்களில் திறைசேரியால் பொது வைப்பாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 77,111.9 மில்லியன் தொகையில் திறைசேரிக்குப் பெறவேண்டியிருந்த ரூபா 2.6 மில்லியனை எதிரீடு செய்ததன் பின்னர்

திறைசேரியில் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 77,109.3 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. 2009 ஒக்டோபர் 29 ஆந் திகதிய 200/2009 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2009 நவம்பர் 01 இன் பின்னர் எவ்வித வைப்புக்களும் திறைசேரிப் பொது வைப்புக் கணக்கில் (பழைய) செலவு வைக்கப்படாதிருந்ததுடன் அவ் வைப்பு இலக்கத்தின் கீழான வைப்பு மீதி தீர்க்கப்பட்டதை அடுத்து அவ் வைப்புக் கணக்கு இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**பாதீட்டுப் பற்றாக்குறை**

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கு ரூபா 650 பில்லியனாக இருந்த மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறை மீளாய்வாண்டில் ரூபா 664 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறைக்கு மேலாக ரூபா 14 பில்லியன் அல்லது 2.1 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச் சட்டத்தின் 3 (அ) பிரிவின் பிரகாரம் பாதிட்டு இடைவெளியானது மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 5 சதவீதத்தினை மிகைக்கலாகாது. 2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி ரூபா 8,674 பில்லியனுடன் அம் மதிப்பீட்டு பாதீட்டு இடைவெளி ஒப்பிடுகையில் 7.6 சதவீதமாகக் காணப்பட்டது.

# பொதுப்படுகடன் முகாமைத்துவம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொதுக்கடன் உள்ளடங்களாக பொது நிதி மீதான முழுக் கட்டுப்பாடும் பாரளுமன்றத்திடமே உள்ளது. இதன் பிரகாரம் 2012 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1 (ஆ) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கத்தின் பொருட்டும் இலங்கைக்கும் உள்ளேயும் வெளியேயும் ரூபா 1,303 பில்லியன் வரையறைக்குட்பட்ட கடன்களைப் பெறுவதற்கான பாரளுமன்ற அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

குடியரசின் நிதிக்கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 183 பில்லியனுக்கான வெளிநாட்டுக் கடனும் ரூபா 1,090 பில்லியனுக்கான வங்கியல்லாத உள்ளூர்க் கடன்களுமாக ரூபா 1,273 பில்லியனுக்கான கடன்கள் பெறப்பட்டுள்ளன. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 1,092 பில்லியன் கடனுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 181 பில்லியன் அல்லது 16.6 சதவீத அதிகரிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது. எனினும், 2013 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் இன்மையால் கணக்கிடப்படாத 45 கடன் கணக்குகளுக்குரிய ரூபா 61 பில்லியன் அடங்கலாக 2008 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த எனினும் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத ரூபா 0.16 பில்லியன் தொகையும் அக் கடன்களுக்கு உரிய செலாவணி சீராக்க வேறுபாடான ரூபா 0.94 பில்லியனுடன் மொத்த கூட்டுத்தொகை ரூபா 62.1 பில்லியன், மீளாய்வாண்டில் கணக்கிடப்பட்ட கடன் தொகை ரூபா 1,273 பில்லியன் தொகையுடன் சேர்க்கப்படுகையில் மொத்தகட கடன் தொகை ரூபா 1,335.1 பில்லியன் தொகையானமையால் பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்ட கடன் எல்லை ரூபா 32.1 பில்லியன் தொகையான மிகைத்திருந்தது.

இம்முறையும் உள்நாட்டுக் கடன் தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த உள்நாட்டுக் கடன் தொகை ரூபா 1,090 பில்லியன் தொகையானதுடன் இது முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 726 பில்லியன் தொகையான உள்நாட்டுக் கடன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 364 தொகையான அதாவது 50 சதவீத அதிகரிப்பாகும்.

மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக முறையே ரூபா 608 பில்லியன் தொகையும் ரூபா 401 பில்லியன் தொகையுமாக ரூபா 1,009 பில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட உள்நாட்டுக் கடன் தொகையில் 92.6 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இதன் படி, உள்நாட்டுக் கடன்களில் குடியரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 7.4 சதவீதமான மிகக் குறைந்தளவு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் கடந்த 04 ஆண்டுகளின் போதும் உள்நாட்டுக் கடன்கள் பெறல் மற்றும் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவு என்னபன பின்வருமாறாகக் காணப்பட்டன.

| ஆண்டு | 2013<br>ரூபா<br>பில்லியன | 2012<br>ரூபா<br>பில்லியன் | 2011<br>ரூபா<br>பில்லியன் | 2010<br>ரூபா<br>பில்லியன் | 2009<br>ரூபா<br>பில்லியன் | மொத்தம்<br>ரூபா<br>பில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் | 1,090 | 726 | 695 | 639 | 786 | 3,936 |
| கடன் தவணைப் பணக் கொடுப்பனவு | 608 | 450 | 470 | 383 | 387 | 2,298 |
| கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவு | 401 | 351 | 312 | 319 | 277 | 1,660 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட கடன் தொகை | 81 | (75) | (87) | (63) | 122 | (22) |
| பயன்படுத்தப்பட்ட பணத்தொகை சதவீதமாக | 7.4 | -- | -- | -- | 15.5 | 23 |

மூலம்: இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் - 2013

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக முறையே ரூபா 95 பில்லியன் தொகையும் ரூபா 63 பில்லியன் தொகையுமாக ரூபா 158 பில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அத் தொகை மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையில் 86.3 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இதன் படி, குடியரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 25 பில்லியன் தொகையான அதாவது 13.7 சதவீதமான மிகக் குறைந்தளவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போதும் கடந்த 04 ஆண்டுகளின் போதும் வெளிநாட்டுக் கடன்களில் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி சீராக்கப்பட்டதை அடுத்து குடியரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அக் கடன் தொகையில் 45 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் | 183 | 365 | 287 | 261 | 207 | 1,303 |
| கடன் தவணை மீள் கொடுப்பனவு | 95 | 153 | 72 | 69 | 112 | 501 |
| வட்டிக் கொடுப்பனவு | 63 | 58 | 40 | 28 | 26 | 215 |
| அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட தொகை | 25 | 154 | 175 | 164 | 69 | 587 |
| பயன்படுத்தப்பட்ட பணத்தொகை சதவீதமாக | 13.7 | 42.2 | 60.4 | 62.8 | 33.3 | 45.0 |

மூலம்: இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் - 2013

இதன் படி, உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் கடன்களில் கூடிய அளவு அக் கடன் தவணைப்பணமும் வட்டிக் கொடுப்பனவிற்காகவும் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டில் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 5,996 பில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,409 பில்லியன் தொகையான கடன் மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 587 பில்லியன் தொகையால் அதாவது 10.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும், நிதி திட்டமிடல் அமைச்சின் பொருளாதார வகைப்படுத்தலின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதி ரூபா 6,793.3 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டின் கடன் மீதியான ரூபா 6,000.1 ஐப் பார்க்கிலும் ரூபா 793.2 பில்லியன் தொகையால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போதும் கடந்த 04 ஆண்டுகளின் போதுமான விபரம் பின்வரும் அட்டவணையில் காணப்பிக்கப்பட்டுள்ளது.

| **அரசாங்கக் கடன் தொகுப்பு** | **2013** | **2012** | **2011** | **2010** | **2009** |
|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| மொத்த உள்ளூர்க் கடன் | 3,833 | 3,233 | 2,804 | 2,566 | 2,401 |
| ரூபாக் கடன் | 56 | 59 | 62 | 88 | 112 |
| திறைசேரி உண்டியல் | 700 | 629 | 591 | 514 | 441 |
| திறைசேரிப் பிணை முறி | 2,452 | 2,095 | 1,819 | 1,644 | 1,514 |
| இலங்கை அபிவிருத்திப் பிணைமுறி | 369 | 223 | 184 | 174 | 168 |
| இலங்கை மத்திய வங்கியிடமிருந்து முற்பணம் | 109 | 111 | 95 | 78 | 74 |
| ஏனையவை | 147 | 116 | 53 | 68 | 92 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | 2,960 | 2,767 | 2,329 | 2,025 | 1,761 |
| செயற்திட்டக் கடன்கள் | 1,939 | 1,356 | 1,640 | 1,462 | 1,363 |
| செயற்திட்டம் அல்லாத கடன்கள் | 1,021 | 1,411 | 689 | 563 | 398 |
| தீர்த்து வைக்கப்படாத மொத்த பொதுக் கடன் | 6,793 | 6,000 | 5,133 | 4,591 | 4,162 |
| மொத்த உள்ளூர் உற்பத்தி | 8,674 | 7,582 | 6,543 | 5,602 | 4,825 |
| தீர்த்து வைக்கப்படாத பொதுக் கடன், மொத்த உள்ளூர் உற்பத்தியின் சதவீதமாக | 78.3 | 79.1 | 78.4 | 81.9 | 86.2 |

மூலம் - நிதி திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கை - 2013

மீளாய்வாண்டின் மொத்த தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி மொத்த தேசிய உற்பத்தியில் 78.3 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் 0.8 சதவீதக் குறைவாகும்.

அரசாங்க மொத்தக் கடன் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்கான மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 6,345 பில்லியனாகும். மொத்த உள்ளுர் உற்பத்தியின் சதவீதமாக அரசாங்க மொத்தக் கடன் அளவை கருத்திற்கொள்கையில் 73.1 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் 75.3 சதவீதத்தைப் பார்க்கிலும் 2.2 சதவீதக் குறைவைக் காண்பித்தது. எனினும், 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டத்தின் 3 (ஊ) பிரிவின் பிரகாரம் 2013 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகும் ஆண்டு முதல் மொத்தப் பொறுப்புகளின் பெறுமதி உரிய நிதி ஆண்டின் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60 சதவீதத்தை மிகைத்தலாகாதெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் அவ் எல்லை 13.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2013 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலவிய மொத்தக் கடன், ஆண்டின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் ஒரு நபரின் கடன் அளவான ரூபா 296,106 ஐப் பார்க்கிலும் ரூபா 35,549 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

# வங்கியியல்

இலங்கையில் வங்கியியல் துறையானது வங்கி அதிகாரச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கண்காணிக்கின்றது.

வங்கியில் துறையானது போதிய திரவத்தன்மை நலன்களுடன் சேர்த்து ஆரோக்கியமான மட்டத்தில் பேணப்படுகின்ற மூலதனத்துடன் வலுவாக உள்ளன. எவ்வாறாயினும், ஆண்டின் முற்பகுதியின் போது வியாபாரம் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் தாக்குகின்ற மட்டுப்படுத்திய வெளிவாரித் தேவைகள் மற்றும் 2012 ஒக்தோபர் நடுப்பகுதியிலிருந்து உலக சந்தையில் தங்க விலையின் ஆதார விலகுதல்களை வழங்கியிருந்த வங்கியின் அடகு முற்பணங்களின் சுருக்கம் என்பன தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் ஆண்டின் போது மிகைப்படுத்திய சொத்து வளர்ச்சி 2012 பேணப்பட்ட தளராத நாணயக் கொள்கை நிலையின் பின்னடைவு பாதிப்புக்களின் விளைவுகளால் 2013 இல் மெதுவான வேகத்தில் விரிவடைந்தது.

வங்கியின் கிளை வலையமைப்பு முன்னேறுகின்ற நிதி அணுகு முறை 2013 இல் மேலும் விரிவடைந்தது. 89 வங்கியியல் நிறுவனங்களின் திறத்தலுடன் மொத்த வங்கியியல் வலையமைப்பு விரிவடைந்திருந்ததுடன் (மாணவர் சேமிப்பு பிரிவுகள் உள்ளடங்கலாக) 2013 ஆம் ஆண்டின் போது 123 தானியங்கி அறிவித்தல் பொறிமுறை (ஏரீஎம்) பொருத்தப்பட்டிருந்தது. 71 வங்கியியல் நிறுவனங்கள் மற்றும் 95 ஏரீஎம் மேல் மாகாணத்திற்கு வெளியே தாபிக்கப்பட்டிருந்தது. இதன்படி, 2013 இறுதியளவில், வங்கியியல் முறைமை 6,487 வங்கியில் நிறுவனங்கள் மற்றும் 2,538 ஏரீஎம்கள் திறக்கப்பட்டிருந்தது.

## வங்கியியல் துறை கட்டமைப்பு

வங்கியியல் துறை உள்ளடக்குவதாவது:

- **அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் (எல்சீபீ கள்)**:

  24 அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் உள்ளன. இரண்டு பெரிய வங்கிகள் (இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி) அரச உடமையாக உள்ளன, 12 தனியார்துறை உடைமையானது மற்றும் 12 வெளிநாட்டு வங்கிக் கிளைகள்.

- **அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகள் (எல்எஸ்பீ கள்)**:

  நீண்ட கால கடனளிக்கும் நிறுவனங்கள், அபிவிருத்தி வங்கிகள், சேமிப்பு வங்கிகள், பிராந்தி அபிவிஜத்தி வங்கிகள் போன்றவற்றைக் கொண்டுள்ள 9 விசேட வங்கிகள் உள்ளன. அனுமதியளிக்கப்பட்ட வீசேட வங்கிகளின் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு அரச உடமையாக உள்ளது. தனியொரு அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கியாக அரசுடமையாக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியாக உள்ளது.

## ஓட்டுமொத்த வளர்ச்சி

### சொத்துக்கள்

வங்கியியல் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2012 இல் 19.9 சதவீதத்தால் வங்கியியல் துறை சொத்துக்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது ரூபா 509 மில்லியனிற்கு ஆஓ்டுக்கு ஆண்டு 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் 21.1 சதவீத்திலிருந்து 2013 ஆம் ஆண்டில் 8.8 சதவீதத்திற்கு 2012 ஆம் ஆண்டில் 61.8 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டின் போது 57.7 சதவீதத்திற்கு மொத்தச் சொத்துக்களில் கடன் வளர்ச்சியில் சீராக்குதல் கடன் பங்குகள் மற்றும் முற்பணங்களில் பற்றாக்குறைவு விளைந்திருந்தது. அதன்பின்னர், 2013 ஆன் ஆண்டில் 28.5 சதவீதத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது 23.9 சதவீதத்திலிருந்து மொத்த சொத்துக்கள் அதிகரிப்பில் முதலீடுகளின் பங்கில் விளைந்த முதலீட்டு

நடவடிக்கைகள் தொழில் ஆரம்பிப்பு நிதிகள் பயன்படுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் போது மொத்த முதலீடுகள் அதிகரிப்பதற்காக பெருமளவு அரசாங்க பிணைகள் கணக்கிடப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் போது கடன் வழங்கலில் அதிகரிப்பு பொருளாதார நடவடிக்கை, நிர்மாணம் (26 சதவீதம்), வியாபாரம் (21 சதவீதம்), உட்கட்டமைப்பு (20 சதவீதம்), உற்பத்தியிடல் (17 சதவீதம்) மற்றும் கடன் வழங்கல் அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களித்த போக்குவரத்து (கடன் வழங்கல் அதிகரிப்புக்கு அவர்களுடைய உரிய பங்களிப்பு அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டது), போன்ற பிரதான ஐந்து பகுதிகளிற்கு கடன் வழங்கல் கணக்கு பெருமளவாக இருந்தது. குறிப்பாக, இழப்பீடு தொடர்புபட்ட நோக்கத்திற்காக கடன்வழங்ல் 2013 ஆம் ஆண்டில் கடன் வளர்ச்சிக்கு எதிர்மறையாக பங்களித்திருந்தது.

**பொறுப்புக்கள்**

வங்கியியல் துறையில் நிதியளிப்பின் பிரதான மூலமாக வைப்புக்கள் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த பொறுப்புக்களின் 70.2 சதவீதத்திற்கான கணக்கீடு தொடர்ந்துள்ளது. வங்கியியல் முறைமையின் மொத்த சொத்துக்களின் 72 சதவீதமாக கணக்கிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு 15.8 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு 17.1 சதவீதத்திற்கு அதிகரித்விளைவு நிதியளிப்பு இடைவெளி பெருமளவு அடைந்திருந்தது. திருந்த கடன்பெறல் மற்றும் நிதியளிப்பு மூலத்தில் கடன்பெறலின் பங்கு என்பவற்றின் ஊடாக விளைவு நிதியளிப்பு இடைவெளி பெருமளவு விரிவடைந்திருந்தது. இருந்த போதிலும், வைப்புக்கள் மற்றும் கடன்பெறலின் ஆண்டிற்கு ஆண்டிற்கான வளர்ச்சி 2012 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு முறையேமுறையே 15 சதவீதம் மற்றும் 26.6 சதவீதத்திற்கு மெதுவாக இருந்தது. குறிப்பாக ஐ.அ.டொலர் 1,618 மில்லியனால் வெளிநாட்டு வளங்களிலிருந்து கடன்பெறலில் அதிகரிப்பு காரணமாக 2012 ஆம் ஆண்டில் 54.8 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டில் 64.6 சதவீதத்திற்கு மொத்த கடன்பெறலில் வெளிநாட்டு நாணய கடனின் பங்கு அதிகரித்திருந்தது.

**இலாபத் தன்மை**

வங்கியியல் துறையின் இலாபத்தன்மை 2013 ஆம் ஆண்டிற்காக வரிக்கு பின்னரான இலாபம் 2012 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்யப்பட்ட ரூபா 82.7 பில்லியன் வரிக்கு பிந்திய இலாபத்துடன் ஒப்பிடும் பொது ரூபா 74.6 பில்லியன் ஆகும். மொத்த வைப்புக்களில் உயர்ந்த கிரய கால வைப்புக்களின் பங்கில் அதிகரிப்பு, கடன் வளர்ச்சி மேம்பாடு மற்றும் குறைந்த விளைச்சல் சொத்துக்களின் அதிகரிப்பு என்பன காரணமாக 2012 ஆம் ஆண்டில் இறுதியில் உள்ளவாறு 4.1 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டில் 3.5 சதவீதத்திற்கு தேறிய வட்டி எல்லை வெளிப்படுத்தப்பட்டது. அதேநேரம், 2013 ஆம் ஆண்டில் வங்கியியல் துறையின் பிரதான வியாபார செயற்பாடுகளின் வீழ்ச்சியைக் காட்டுகின்ற வெளிப்படுத்துகின்ற ஒரு பகுதி படிப்படியாக தேய்வடைந்த தேறிய வட்டி எல்லை, காரணமாக 2012 ஆம் ஆண்டில் இறுதியில் உள்ளவாறு 6.3 பில்லியனிலிருந்து 2013 ஆம் ஆண்டில் 18.4 பில்லியனிற்கு நட்ட மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடுகள் மற்றும் பதிவழிக்கப்பட்ட கடன்கள் என்பன அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், செயற்பாட்டுச் செலவினங்களின் அதிகரிப்பு குறிப்பிடத்தளவாக இருக்கவில்லை. அந்த அபிவிருத்திகளின் விளைவு, வங்கியியல் துறையிலுள்ள சகல இலபத்தன்மை குறிகாட்டிகளும், அதாவது தேறிய வட்டி எல்லை (என்ஐஎம்), சொத்துக்கள் மீதான பெறுகைகள் (ஆர்ஓஏ) மற்றும் உரிமை மூலதன பெறுகைகள் (ஆர்ஓஈ) 2013 ஆம் ஆண்டின் போது வீழ்ந்திருந்தது.

**வங்கியியல் துறையின் ஆபத்து மற்றும் வளங்கள்**

பிரதான நம்பிக்கைக்குரிய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளின் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றன.

**கடன் ஆபத்து**

செயற்பாடற்ற கடன்களின் மொத்தத் தொகை 2012 இல் ரூபா 23 பில்லியனிலிருந்து 2013 இல் ரூபா 37 பில்லியனிற்கு அதிகரித்திருந்தது. மொத்த கடன் நிலுவைகள் தொடர்பில் செயற்பாடற்ற கடன்களிற்கான வெளிப்படுத்தல் 2012 ஆம் ஆண்டு இறுதியிலுள்ள 5 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு 6.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. செயற்பாடற்ற கடன்களின் பிரதான பங்களிப்பாளர்களாக இருக்கின்ற கம்பனிகளுடன் செயற்பாடற்ற கடன்களின் 92 சதவீதத்திற்காக எல்எவ்சீ துறைக் கணக்குகள் மீளமைக்கப்பட்டது. கடன் நட்டங்களிற்கு ஏற்பாடு செய்தல் தொடர்பில் தேறிய செயற்பாடற்ற கடன் விகிதம் 2013 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு 2.5 சதவீதமாக இருந்தது. செயற்பாடற்ற கடன்களிற்காக மொத்த ஏற்பாட்டு மேவுகை முன்னைய ஆண்டுகளில் 55.6 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டில் 56.1 சதவீதத்திற்கு எல்லைரீதியாக அதிகரித்தது.

**அரச வங்கிகளின் செயலாற்றல்**

2013 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு மொத்த வங்கியியல் துறையின் சொத்துக்களின் 49 சதவீதத்திற்காக இலங்கையிலுள்ள எட்டு அரச வங்கிகள் கணக்கிடப்பட்டது. அவற்றுள், இலங்கை வங்கி (பீஓசீ) மற்றும் மக்கள் வங்கி (பிபீ) முறையே ரூபா 1,193.6 பில்லியன் மற்றும் ரூபா 926.6 பில்லியன் சொத்து அடிப்படைகளுடன் இரண்டு பெரிய அனுமதியளிக்கப்ட்ட வர்த்தக வங்கிகளாக உள்ளன. தேசிய சேமிப்பு வங்கி (என்எஸ்பீ) ரூபா 655 பில்லியன் சொத்து அடிப்படையுடன் விசேட அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாக உள்ள அதேநேரம் அரச ஈட்டு முதலீட்டு வங்கி (எஸ்எம்ஐபீ), பிரதேச அபிவிருத்தி வங்கி (ஆர்டிபீ), லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி (எல்டிபீ) இலங்கை சேமிப்பு வங்கி (எஸ்எல்எஸ்பீ) மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ) என்ற பெயர்களுடை வேறு ஐந்து விசேட அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் சொத்துக்களில் ரூபா 149.2 பில்லியன் கூட்டுமொத்தத் தொகையாகவிருந்தன. அரச வங்கிகளின் சொத்து அடிப்படை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 14.3 சதவீதத்தால் வளர்ந்திருந்தது.

அரச வங்கிகளின் வைப்புக்கள் அடிப்படை ரூபா 2 பில்லியன் மொத்தமாகும். வங்கிகளின் வரிக்கு பின்னரான இலாபம் செயற்பாடற்ற தங்க அடவுக் கடன்கள், சர்வதேச தங்க விலையிலுள்ள வீழ்ச்சியை சரிப்படுத்தவிற்கான விளைவு என்பனவற்றால் பங்களிப்பு செய்திருந்த பெருமளரு 71 சதவீதத்தல் அதிகரித்திருந்த செயற்பாடற்ற முற்பணங்களால் 2013 ஆம் ஆண்டில் 25 சதவீதத்தால் வீழ்ந்தது.

ஒட்டுமொத்த வங்கியியல் துறையுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டிற்காக அரச உடமையாக்கப்பட்ட வங்கிகளின் சில முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் பின்வரும் அட்டவணை 2 தருகிறது.


| | **வங்கியியல் துறை** | **அரச வங்கிகள்** |
|---|---|---|
| | 2013 | 2013 |
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| சொத்துக்கள் | 5,942.00 | 2,924.40 |
| கடன் மற்றும் முற்பணங்கள் | 3,427.00 | 1,718.50 |
| செயற்பாடற்ற முற்பணஙகள் | 191.9 | 94.3 |
| வைப்புக்கள் | 4,170.00 | 2,209.70 |
| மொத்த கடன்பெறல் | 1,015.00 | 387.2 |
| தேறிய வட்டி வருமானம் | 196.7 | 92.6 |

| | | |
|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | 104.7 | 32.1 |
| வரிக் பின்னரான இலாபம் | 74.6 | 23.6 |
| சொத்துக்கள் மீதான பெறுகைகள் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 1.26 | 0.8 |
| உரிமை மூலதனம் மீதான பெறுகைகள் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 15.2 | 17.8 |
| செயற்பாடற்ற முற்பணங்கள் மீதான (சதவீதம்) | 5.6 | 5.5 |

*அட்டவணை 2- அரச வங்கிகளின் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள்*
*மூலம்: பொது முயற்சிகள் திணைக்களம், அரச வங்கிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு

2013 ஆம் ஆண்டின் போது அரச வங்கிகளால் தொகுதிக்கடன்கள், வரி அல்லது பங்கிலாபங்களாக திரட்டு நிதியத்திற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூபா 54.751 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 43.606 பில்லியனாகும், குறைவான இலாபத்தன்மை காரணமாக பிரதானமாக 20 சதவீத வீழ்ச்சியை காட்டுகிறது. ஆறு அடச உடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமான பங்களிப்பு கீழே படம் 4 இல் விபரிக்கப்படுகிறது.




*வரைபடம் 4: 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அரச வங்கிகளால் திரட்டுநிதியத்திற்கான பங்களிப்பு*

### இலங்கை வங்கியியல் துறை செயலாற்றல்

இலங்கை வங்கியியல் துறை ஒருமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை பீஜசீ வர்த்தக வங்கி, ஹட்டன் நசனல் வங்கி பிஜசீ, சம்பத் வங்கி மற்றும் சேலான் வங்கி பிஜசீ போன் முக்கியத்துவமான முறைப்படியானதாக இருக்கின்றதாக ஆறு பெரிய உள்ளூர் எல்சீபீ கள் இனங்காணப்பட்டது.

வர்த்தக வங்கிகள் 2013 ஆம் ஆண்டில் ரூபா 175.9 பில்லியன் தொகையான தனியார் துறைக்கு கடன்கள் வழங்கியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.5 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துப்படுத்தியது. எவ்வாறாயினும், கடனாக ஆண்டின் போது மேம்படுத்தப்பட்ட சொத்து வளர்ச்சி 2012 ஆம் ஆண்டில் பேணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையின் பின்விளைவுகளின் தாக்கங்களின் விளைவாக 2013 ஆம் ஆண்டில் ஒரு மந்தமான வேகத்தில், வியாபாரம் தொடர்புபட்ட நடவடிக்கையில் வெளிவார் கேள்வி பாதிப்புகள் உள்ளடங்களாக, குறிப்பாக முன்னைய ஆண்டின் ஒரு பகுதியின் போது மற்றும் 2012 ஒக்தோபரிலிருந்து உலக சந்தையில் தங்க விலையில் பெருமளவான வீழ்ச்சி காரணமாக வங்கியினுடைய அடவு முற்பணங்களின் சுருக்கம் விரிவாக்கப்பட்டது.

## பிரதான கணக்காய்வு சுட்டிக்காட்டல்கள்

### இலங்கை வங்கி

உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காரணமாக 2013 ஆம் ஆண்டில் பின்வரும் நிதி மோசடிகள் இடம்பெற்றிருந்தன.

- **தலைநகரக் கிளை- மோசடியான நிதி மாற்றம் ரூபா 5.8 மில்லியன்**

  வங்கியானது மோசடியாளரால் செய்யப்பட்ட மோசடியான வேண்டுகையில் உள்நாட்டு தனியார் வங்கியொன்றில் சேமிப்பு கணக்கிற்கு தலைநகர் கிளையின் இறந்துபோன வாடிக்கையாளர் ஒருவரின் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து 2013 ஒக்தோபர் 23 இல் ரூபா 5.8 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது.

  ஆரம்ப புலனாய்வு கண்டுபிடிப்புக்களின் பிரகாரம், முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் மொத்தமாக புறக்கணிக்கின்ற வழியில் அவர்களுடைய கடமைகளை தவறவிட்டிருந்தனர் அதேநேரம் “கையெழுத்து வித்தியாசம்“ மற்றும் கிளையின் சிரேஸ்ர முகாமையாளரிற்கு குறிப்பிடலாக வாசிப்பதற்கான வேண்டுகையில் செய்யப்பட்ட குறிப்புக்கு எதிர்மாறாக மேற்குறிப்பிட்ட நிதிகளை மாற்றுதல் செய்யப்பட்டது.

  மேலும் புலனாய்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் விடயம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

- **தனிநபர் கிளை- மோசடியான நிதி மாற்றம் ரூபா 11.1 மில்லியன்**

  ஆய்வு செய்யமுடியாத வழியில் மேசாடியாளர் ஒருவரால் செய்யப்பட்ட மோசடியான வேண்டுகையில் சைபர் வங்கியின் கணக்கிற்கு தனிநபர் கிளையின் டிஎவ்சீ கணக்கிலிருந்து இலங்கை ரூபா 11.1 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 86,384 தொகையான நிதிகள் மாற்றப்பட்டிரந்தது.

- **போகந்தலாவ கிளை - ரூபா 8 மில்லியன் பெறுமதியான தங்க நகைகளின் மோசடியான மீட்டல்.**

  வாடிக்கையாளர் ஒருவரால் அடவு வைக்கப்பட்ட தங்க நகைகளின் மோசடியான மீட்டல் போகந்தலாவ கிளையின் முகாமையாளராக வேலைசெய்த உத்தியோகத்தரால் மீள ஈடுவைக்கப்பட்டது. நகையை மீட்பதற்காக வங்கியால் செலுத்தப்பட்ட மொத்த முற்பணம் அண்ணளவாக ரூபா 8 மில்லியனாகும். முகாமையாளர் வங்கியிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார் ஆனால்,

அவருடைய ஓய்வூதிய நலன்கள் வங்கியால் பிடித்துவைக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் புலனாய்வுகள் செயற்பாட்டில் உள்ளன.

- **போபிட்டிய கிளை - ரூபா 18 மில்லியன் அடவு முற்பணங்களின் மோசடியான உருவாக்கம்**

  வங்கியின் கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் மோசடி வெளிப்பட்ட நேரத்தில் முறைமையில் மோசடியான அடவு முற்பணங்களை உருவாக்கலால் ரூபா 18 மில்லியன் தொகை மீளமோசடிசெய்யப்பட்டது. மோசடியில் ஈடுபட்ட உத்தியோகத்தர் நாட்டிற்கு திரும்பியவுடன் அவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். மொத்தமாக முரணான வழியில் கடமைகளை பெறுப்பேற்றிருந்த முகாமையாளர் ஒழுக்காற்று நடைமுறைகளின் நிலுவையாகவுள்ள இறுதியாக்கல் வங்கியிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

- **மாகந்துர விரிவாக்கல் அலுவலம் - ரூபா 3 மில்லியன் பெறுமதியான தங்க நகைகளின் இடத்தில் போலியான நகைகள் மோசடியாக பதிலீடு செய்தல்**

  மாகந்துர கிளையின் முகாமையாளராக வேலைசெய்த வங்கியின் இந்த தொகுதி உத்தியோகத்தர் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட தங்க நகைகளின் இடத்தில் மோசடியாக போலித் தங்கநகைகள் பதிலீடு செய்யப்பட்டது. மீட்கப்பட்ட தங்க நகைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 3 மில்லியனானதுடன் உத்தியோகத்தர் வங்கியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். மேலும் புலனாய்வுகள் தொடருகின்றன.

- **தலைநகர் கிளை- ஐ.அ.டொலர் 750,000 தொகையான அனுமதியளிக்கப்படாத நிதி மாற்றம்.**

  வாடிக்கையாளரின் நிலையான வைப்புக்களிலிருந்து வங்கியால் விளைந்த ஐ.அ.டொலர் 784,562 (வட்டியுடன்) தொகையான அனுமதியளிக்கப்படாத நிதி மாற்றம் தொடர்பில் அவரால் குறிப்புரைகள் செய்யப்பட்டிருந்தது. தொடர்புபட்ட வேண்டுகைகள் மற்றும் ஏனைய கடிதத் தொடர்புகள் ஈ மெயில் ஊடாக பரிமாறப்பட்டது. யூஏஈ இல் வங்கியின் உரிய உத்தியோகத்தர் மற்றும் தலைநகர் கிளை வங்கி முகாமையாளர் தொலைபேசி மூலம் வாடிக்கையாளரை திரும்ப உறுதிப்படுத்த தவறியிருந்தார்.

  எவ்வாறாயினும், வங்கி முகாமையாளர் உயர் அதிகாரியிடமிருந்து மேலும் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளாமல் நிதி மாற்றம் செய்யப்பட்டது. வங்கியானது வாடிக்கையாளரை முறைப்படி இனங்காணாமல் புறக்கணிப்பு வழியில் சொல்லப்பட்ட கொடுக்கல் வாங்கலை செய்திருந்தார்.

- **தனிநபர் கிளை – விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கிலிருந்து நிதிகள் மாற்றம் (எஸ்எவ்ஐடிஏ)**

  வங்கியானது பல்வேறு ஈ மெயில்களை பயன்படுத்தி வாடிக்கையாளர் ஒருவரால் செய்யப்பட்ட மோசடியான வேண்டுகைகளில் சீன மக்கள் குடியரவு மற்றும் ஐக்கிய அரபு குடியரசிலி உள்ள வங்கி கணக்கிற்கு தனிநபர் நிளையின் வாடிக்கையாளரின் விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கிலிருந்து ஐ.அ.டொலர் 70,000 மற்றும் ஜீபீபி 200,000 தொகையான நிதிகள் மாற்றியிருந்தது. இந்த விடயம் மீதான புலனாய்வுகள் தொடர்கின்றன.

## மக்கள் வங்கி

- முதிர்வடைந்த நிதிச் சொத்துக்களின் பெறுமதி எல்கேஏஎஸ் 39 நிதி அறிவுறுத்தல்கள்: அளவீடு மற்றும் பதிவு ஐ மீறி மூல பயனுள்ள வட்டி வீதத்தை (ஈஐஅர்) பயன்படுத்தி அதே கடனை தீர்ப்பதற்குப் பதிலாக சாதாரண வட்டி முறை அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது. இந்த தவறின் திருத்தம் ரூபா 36,960,694 ஆல் முதிர்வடைந்த சொத்துக்களின் பெறுமதியில் அதிகரித்துக் காட்டலில் விளைந்தது.

- வங்கியின் சம்பள திணைக்களம் சரியான சம்பளப் பட்டடியல் இணக்கம் செய்வதற்கு வசதியளிக்கும் நோக்கில் ஊழியர்கள் தொடர்பில் முறையான மற்றும் முறைப்படியான பதிவேடுகளை பேணியிருக்கவில்லை இதிலிருந்து சம்பள பட்டியலுக்கு நிதிக் கூற்றுக்களிற்கும் இடையில் ரூபா 56,015,643 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.
- ஒன்றிணைந்த வங்கிப் பிரிவு வாடிக்கையாளர் ஒருவருக்கு வியபார நிதி மற்றும் கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் அந்த செயற்பாடற்ற கடன்களின் மொத்த நிலுவையாகவிருக்கின்ற மீதி 2014 சனவி 22 இல் உள்ளவாறு ரூபா 792,352,875 ஆல் ரூபா 220,000,000 ஆன போலியான விற்பனை பெறுமதியை (எவ்எஸ்வீ) விஞ்சியிருந்தது.

- ரூபா 17,020,362 தொகையான குறகியகால கடன் வசதிகள் மற்றும் 2014 சனவரி 28 இல் உள்ளவாறு செயற்பாடற்று இருக்கின்றவை நிலையான ஆதனங்களால் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர் கடன் மீதிகள் உள்ளடங்கலாக ரூபா 260,050,066 தொகையான கடன் மீதிகள் செயற்பாடற்றிருந்த போதிலும் முகாமைத்துவம் செயற்பாடற்ற மீதிகளின் அறவீட்டிற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதவியினர் கடன் மீதிகளின் அவ்வாறான வகைப்படுத்தல் மற்றும் முறையான அறவீடுகளை உறுதிப்படுத்துவதற்காக காத்திரமான கட்டுப்பாடுகள் காணப்படவில்லை.

## தேசிய சேமிப்பு வங்கி

### கோரப்படாத வைப்புக்களிற்காக திறைசேரியிடமிருந்து அறவிட வேண்டிய தொகை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோரப்படாத வைப்புக்களிற்காக திறைசேரியிடமிருந்து அறவிடவேண்டிய தொகை ரூபா 659,014,723 ஆகும். அதில் அறவிட வேண்டிய தொகை 24 சதவீதம் அல்லரூ ரூபா 160,986,618 தொகை 9 ஆண்டுகள் பழமைவாய்திருந்தது. ஒரு ஆண்டினை விட பழமைவாய்ந்த தொகையின் சதவீதம் 94 சதவீதமாக இருந்தது

2013 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கின் பிரகாரம், வாடிக்கையாளருக்கு செலுத்தப்பட்ட வட்டி உள்ளடங்கலாக திறைசேரியிடமிருந்து அறவிட வேண்டிய கோரப்படாத வைப்புக்கள் ரூபா 957,891,777 தொகையாகும். எவ்வாறாயினும், இத்தொகை திறைசேரிக்கு வேண்டுகைக்கான கோரிக்கைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### விலைகூறப்பட்ட கம்பனிகளில் பங்கு முதலீடுகள் மீதான பெறுகைகள்

- 2013 ஆம் ஆண்டில் வியாபார முதலீடுகளில் பங்குகளின் விற்பனையிலிருந்தான முலதன இலாபம் ரூபா 189,164,668 ஆகும். 2013 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வியாபார முதலீடுகள் மீதாக முலதன இலாபத்தின் சதவீதம் 3.68 சதவீதமாக இருந்தது.

- 2013 ஆம் ஆண்டில் 3 விலைகூறப்பட்ட கம்பனிகளில் நீண்டகால முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் ரூபா 150,223,421 ஆனதுடன் 5.34 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

- 10 கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 1,193,572,481 ஆன முதலீடுகளிற்காக எவ்விம பங்கிலாபங்களும் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த முதலீடுகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைகூறப்ட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 7,950,328,654 ஆன மொத்த முதலீடுகளின் 15.01 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

**பங்கிலாபம் இல்லாத முதலீடுகளின் பெறுமதியின் குறைவு**

- சொத்து முகாமைத்துவப் பிரிவால் 7 விலைகூறப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 744,681,081 கிரயத்தில் முதலீடுகளிற்காக 2013 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு எவ்வித பங்கிலாபங்களையும் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த முதலீடு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைகூறப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 7,950,328,654 ஆன மொத்த முதலீட்டு கிரயத்தின் 9.37 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

- மேற்குறிப்பிட்ட 7 கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 744,681,081 தொகையான முதலீடுகளின் சந்தைப் பெறுமதி ரூபா 403,333,135 ஆல் குறைந்திருந்தது.

- விலைகூறப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 276,650,081 கிரயமான முதலீடுகளின் சந்தைப் பெறுமதி ரூபா 157,440,880 ஆல் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் குறைந்திருந்தது.

**போதிய பெறுகைகள் இல்லாமல் உரிமை மூலதன பிணையங்களில் முதலீடு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,267,575,023 தொகையான 4 உரிமை மூலதன சான்றிதழ்கள் உள்ளன. எவ்வாறாயினும், ரூபா 6,090,000 ஆன பங்கிலாபம் மாத்திரம் ரூபா 57,363,543 இற்கான ஒரு உரிமை மூலதன சான்றிதழில் பெறப்பட்டிருந்தது. இதன்படி, 2013 ஆம் ஆண்டில் உரிமை மூலதன பிணையங்களில் நம்பிக்கை பொறுப்பு அலகு மீதான பெறுகைகள் 0.48 சதவீதமான மிகவும் குறைவக இருந்தது.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் ககணக்குகள் தொடர்பில் பேரேட்டு மீதிக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 31,217,166 ஆன வித்தியாசங்கள் இருந்தது.

- 2013 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு அனுமதியளிக்கப்படாத கணக்குகள் தொடர்பில் ரூபா 150,378,908 கூட்டு மொத்தத் தொயையான பேரேட்டு மீதிக்கும் ரூபா 160,602,178 கூட்டுமொத்தத் தொகையான கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையால் உருவாக்கப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 10,212,122 ஆன வித்தியாசங்கள் இருந்தது.

- கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு தொடர்பில் பேரேட்டு மீதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டு மீதிக்கும் இடையில் முறையே ரூபா 6,369,435 மற்றும் ரூபா 7,384,579 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

- நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 55.53 மில்லியன் நேரொத்த வரிக்குப் பின்னரான இலாபத்தடன் ஒப்பிடும் போது ரூபா 158.01 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தில் விளைந்திருந்தமையால், ரூபா 102.48 மில்லியன் அல்லது 182 சதவீதம் விரிக்குப் பின்னரான இலாபத்தில் அதிகரிப்பை குறிக்கின்றது. முதலீட்டு ஆதனங்களில் ரூபா 95 மில்லியன் மீள் மதிப்பீட்டு இலாபத்தின் அதிகரிப்பு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் இந்த அதிகரிப்பிற்காக பிரதான பங்களித்தது.
- 2013 செப்தெம்பர் 26 மற்றும் 2013 ஒக்தோபர் 31 இல் நடைபெற்ற கூட்டத்தில் வங்கியின் பணிப்பாளர் சபை 2012 சனவரி 01 இலிருந்து ஒவ்வொரு நிலுவையாகவிருக்கின் கடன்கள் மீது நிர்வாகக்

கட்டணம் சாட்டுதல் செய்வதன் மூலம் புதிய வருமான மூலத்தை உருவாக்கத்தை அனுமதித்தது. இதன்படி, ரூபா 88,382,116 மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாற்றப்படாத கடன் நிர்வாகக் கட்டணம் ரூபா 736,213 ஆகும் என அவதானிக்கப்பட்டது.

- மேலும், 2003 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்ட 1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை மேற்குறிப்பிட்ட தீர்மானம் திருத்தப்பட வேண்டுமெனவும் சங்கத்தின் பிரிவின் பொருளாதார ரீதியான பின்தங்கிதற்காக நீடமைப்பு ஏற்பாட்டிற்காக முக்கியமான திட்டங்கள் விசேடமாக வங்கி வடிவமைக்க வேண்டுமெனவும் அவதானிக்கப்பட்டது.

- வங்கியானது வாடிக்கையாளருக்கு தீர்மானங்களை எழுத்து மூல அறிவித்தல்களை வழங்காமல் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள மீதிகளிற்கு எதிராக வழங்கப்பட்ட “சிரம உதான கடன்கள்“ இற்காக ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கடன் நிர்வாகக் கட்டணமாக ரூபா 46,541,725 தொகை கோரியிருந்தது.

## பிராந்திய அபிவிருத்தி வங்கி

- தேறிய இலாப விகிதம் 2012 ஆம் அண்டில் 11.21 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 3.61 சதவீமாக வீழ்ச்சியடைந்தது. இலாபத்தன்மையில் குறைவு செயற்பாடற்ற கடன்களின் வளர்ச்சி காரணமாக நிலையான வைப்புக்கள் மற்றும் கடப்பாட்டில் அதிகரிப்பு மீதான உயர் நம்பிக்கை காரணமாக வட்டிச் செலவினத்தில் அதிகரிப்பு மூலம் பிரதானமாக அடைந்தது. 2013 ஆம் ஆண்டில் வங்கியின் மொதடத கடன் மீதியின் 7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தம் செயற்பாடற்ற கடன்கள் 2012 ஆம் ஆண்டின் 4 சதவீதத்துடன் ஒப்பிடப்பட்டது. ரூபா 348,787,046 தொகையான அடவு முற்பணத்தில் முதல் நட்டம் மீது செய்யப்பட்ட விசேட ஏற்பாடு இலாபத்தன்மையில் வீழ்ச்சியை பாதித்தது.

- வங்கியானது 37 சதவீத சராசரி எல்எஸ்பீ விகிதத்துடன் ஒப்பிடும் போது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5.92 சதவீம் உயர் வட்டி எல்லையை அறிக்கையிட்டது.

- வங்கியின் மொத்த வருமானத்திற்கு வட்டியல்லா வருமானத்தின் பங்களிப்பு 9.78 சதவீத சராசரி எல்எஸ்பீ விகிதத்திற்கு குறிப்பிடத்தக்களவு குறைவாக 5.04 சதவீதமாக மாத்திரம் உள்ளது. ஆகவே, வங்கியானது வட்டி வருமானத்தில் உயர்வை கவனத்திற்கொள்ளவதுடன் வட்டி வீதத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும்.

- 2013 ஆம் ஆண்டில் வங்கி கைத்தொழில் பகுப்பாய்வின் பிரகாரம், வங்கியானது 9.78 சதவீத சராசரி எல்எஸ்பீ விகிதத்துடன் ஒப்பிடும் போது 72 சதவீதமாக இருந்த வட்டிச் செலவினம், கட்டணம் மற்றும் தரவுக் செலவினம் தவிர்த்து மொத்தச் செலவினத்தில் தனிநபர் கிரயத்தின் உயர்ந்த விகிதம் பதிவுசெய்திருந்தது.

- வங்கியினுடைய வைப்புக் கட்டமைப்பு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தமொத்த வைப்புக்களின் 51 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய உயர்ந்த கிரய நிலையான வைப்புக்களில் அதிகளவு கவனம் செலுத்தப்பட்டது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வட்டிச் செலவினத்தில் நிலையான வைப்புக்களின் வட்டிச் செலவினம் 83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. பாரிய கிரய நிலையான வைப்புக்கள் மீதான உயர் பாதுகாப்பு நிதிகளின் கிரயத்தை பாதகமாக பாதிக்கக் கூடும்.
- 2013 திசெம்பர் 31 இல் வங்கியின் மொத்த கடன் மீதியில் வங்கியின் அடவு முற்பண மீதி அண்ணளவாக 38 சதவீதமாகும்.

## 2013 இல் வங்கியியல் துறை அபிவிருத்திகள்

2013 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி 5 ஆண்டுகள் முதிர்வுடன் 8.76 சதவீத வட்டியில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் தொகையினை பெறுவதில் வெற்றி கண்டிருந்தது. அதேநேரம் இலங்கை வங்கி 6.8 தடவைகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த 5.325 சதவீதத்தில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் தொகையான 5 ஆண்டுகள் அதன் இரண்டாவது சர்வதேச டொலர் பிணை மூலம் தற்போது இன்னொரு மைல்கலலை எட்டியிருந்தது.

## வங்கியியல் துறையின் சவால்கள்

இலங்கையினுடைய வங்கியியல் துறையானது முகாமைசெய்கின்ற சொத்துத் தரத்தினை பேணல் விரைந்த விரிவாக்கலின் முகம்கொடுக்கும் குறைந்த கிரய முலதனத்தை மதிப்பிடல், குறைந்த ஆபத்து முகாமைத்து நடைமுறைகள் மற்றும் நடப்பிலிருந்த குறைந்த வட்டி வீதத்தில் குறகிய எல்லையாக இலாபத் தனைமையை பேணல் மற்றும் கடன் அறவீடுகளின் நலிவுகள் போன்ற குறிப்பிடத்தக்க சவால்களிற்கு முகம் கொடுத்தது.

# தேசிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி

இலங்கையின் சுதந்திரம் மற்றும் எல்லைப்பரப்பினை பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றும் நாட்டுக்குள் சட்டத்தையும் ஒழுங்கமையும் பேணுதல் சம்பந்தமாக தேவையான வழிகாட்டிகளைத் தயாரித்தலும்

அமுல்படுத்துதலும் இந்த அமைச்சின் பிரதான செயற்பணியாகும். இக்குறிகோள்களை அடைவதற்காக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை பொலிஸ், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், கரையோரம் பேணல் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை, ரணவிரு சேவா அதிகாரசபை, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவியினர் கல்லூரி என்பன செயற்படுகின்றன.

இத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிலும் முன்னைய ஆண்டிலும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் செலவினம் | 241,034 | 220,743 |
| மூலதனச் செலவினம் | 33,070 | 17,830 |
| மொத்தம் | 274,104 | 238,573 |

வடக்கின் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முப்படைகளின் வசமுள்ள ஊழியப் படையினை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கும் முப்படைகளினால் சுதந்திரமாக அமுல்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் பெரியளவிலான வேறுபட்ட செயற்திட்டங்களுக்கும் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டதுடன் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக திணைக்களத்தின் ஊழியப் பங்களிப்பை பயன்படுத்திக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. மேற்படி தரவுகளை பகுப்பாய்வு செய்ததில் முப்படைகள் அடங்கலாக அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் செலவினம் அதிகரித்திருந்தது. கொழும்பிலுள்ள பழைய கட்டிடங்களை புதுப்பொழிவுடன் திருத்தியமைக்கும் 47 செயற்திட்டங்கள், விளையாட்டு அரங்குகளைத் திருத்தியமைக்கும் 2 செயற்திட்டங்கள், வீதிகளை அபிவிருத்தி செய்யும் 5 செயற்திட்டங்கள், நீர்த் தாங்கிகள் மற்றும் அணைக்கட்டுக்களை புனரமைக்கும் 8 செயற்திட்டங்கள் அவ்வாறே 25 பிரதான ஏனைய செயற்திட்டங்கள் போன்ற நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்ட பாரியளவு செயற்திட்டங்களிற்கு இலங்கை தரைப்படை 2013 இல் ஊழியப் பங்களிப்பை செய்திருந்தது. அத்துடன், 116 இயற்கை அனர்த்த சந்தர்ப்பங்களில் பொது மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அமைதி காக்கும் படையில் ஆட்களையும் உபகரணங்களையும் ஈடுபடுத்தி யூஎஸ்டொலர் 25,042,462 அந்நியச் செலாவணி வருமானம் உழைக்கப்பட்டது.

2013 இல் சோமாலியக கடற்கொள்ளைக் காரர்களிடமிருந்து இலங்கை கடல் எல்லையினை இலங்கை கடற்படை வெற்றிகரமாக பாதுகாத்திருந்தது. சட்டவிரோதமாக குடியகழ்வு மற்றும் குடிவரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 1,019 நபர்களை கடற்படை கைது செய்திருந்ததுடன் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களின் பேரில் சந்தேகிக்கப்பட்ட 07 நபர்களை கடற்படையின் உளவுப் பிரிவு கைது செய்திருந்தது. யுத்த ஆயுதங்கள் கடற்படை பாதுகாத்தல் களஞ்சியப்படுத்தல் செயற்திட்டம், கடற் காவளர்களுக்கு பயிற்சியளித்தல் செயற்திட்டம், யுத்த ஆயுதங்களை சுத்தப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் கடற் பாதுகாவளர்களிற்கு சுடுதல் பயிற்சிச் செயற்திட்டம் என்பவற்றின் ஊடாக ரூபா 969,222,940 தொகையான அந்நியச் செலாவணி வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. அத்துடன் காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் செயற்பாடுகளுக்கு முறையே ரூபா 110,996,000 மற்றும் ரூபா 48,617,000 ஊழியப் பங்களிப்பு உதிவி வழங்கப்பட்டது. அரசாங்கக் கட்டிடங்களைத் திருத்துதல், வைத்தியசாலை வார்ட்கள் மற்றும் அரசாங்கக் கட்டிடங்களை நிர்மாணித்தல், வீதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மத வழிபாட்டுத் தளங்களை அபிவிருத்தி செய்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ரூபா 321,031,452 பெறுமதியான ஊழியப் பங்களிப்பு வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் போது இலங்கை விமானப்படை 10,283 மணித்தியாலங்கள் பறந்திருந்ததுடன் அதில் 2,681 பறக்கும் மணித்தியாலங்கள் ஆகாயச் செயற்பாடுகளாக இருந்தது. விமானிகள் இல்லாத விமானங்களினால் 14.45 மணித்தியால அவதானிப்பு பறப்புக்களின் மூலம் காற்படை மற்றும் கடற்படைச் செயற்பாடுகளுக்கு உதவியளித்தல், முப்படைகளின் 27,990 நபர்களுக்கு ஆகாயப் போக்குவரத்து வசதிகள் வழங்குதல், 83,673 கிலோகிறாம் பாரமான பயணப் பொதிகளை எடுத்துச் செல்லல், சிறிலங்கள் விமானக் கம்பனிக்கு 06 ஆகாய விமான தொழில்நுட்ப வல்லுனர்களின் சேவைகளை வழங்குதல், விமானப்படையின் பொறியியலாளர்களையும் தொழில்நுட்ப நபர்களையும் ஈடுபடுத்தி கட்டுநாயக்காவிலும் இரத்மலானையிலும் ஆகாய விமான பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் மூலும் ஆகாய விமானங்களில் பலவகையான பழுதுபார்த்தல்களைச் செய்தல் போன்ற குறிப்பிடத்தக்க சேவைகள் நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்டங்கள் அவ்வாறே ஏனைய 12 செயற்திட்டங்களிற்கு ஊழியப் பங்களிப்பினை வழங்கி நாட்டின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு சேவைகள் வழங்கப்பட்டிருந்தன.

19 படைத் தலைமையகங்கள் மற்றும் 11 உப படைத் தலைமையகங்களை கொண்டு இயங்கும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் விஹாரமஹா தேவி பூங்காவின் அபிவிருத்தி வேலைகள், எல்பின்ஸ்டன் கலையரங்கின் புனரமைப்பு மற்றும் யானைகள் பாதுகாப்பு வேலியை நிர்மாணித்துப் பேணிவருதல் போன்ற செயற்திட்டங்களுக்கு பங்களித்திருந்தது. அத்துடன், நாடு முழுவதிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஊழியப் பங்களிப்பினை வழங்கியிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- தனிப்பட்டோர்கள், தனியார் நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்களிடமிருந்து 2011 யூலை 18 முதல் 2014 யூலை 30 வரையான காலத்தில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்குக் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 127,647,083 தொகையை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 170(2) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா

107,308,091 தொகை செலவிடப்பட்டு எஞ்சிய ரூபா 20,338,992 தொகை 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

- முப்படைகள், பண்ணை உற்பத்திகளை வெளித்தரப்பினர்களுக்கு விற்பனை செய்தமையால் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களங்களால் உழைக்கப்பட்ட சகல வருமானங்கள், இசையமைப்புக் குழுக்களின் வாடகைகள், விருந்தினர் விடுதிகளிலிருந்து கிடைத்த வருமானங்கள், நலன்புரி வர்த்தக நிலையங்கள், முடிதிருத்துனர் மற்றும் தையல் சேவைகள், முகாம் வளவு உற்பத்திகளின் விற்பனைகள், நாய்களை காட்சிப்படுத்தல், ஆகாயவிமான மற்றும் கப்பற் செயற்பாடுகள், ஆகாய விமானங்களையும் கப்பல்களையும் திருத்தியமையால் பெறப்பட்ட வருமானங்கள் மற்றும் அரசாங்க ஆதனங்களை ஈடுபடுத்தியமையால் பெறப்பட்ட ஏனைய சகல வருமானங்களும் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட மொத்தத் தொகை அபிவெனுவென் அபி நிதியத்திற்கு நன்கொடையொன்றாக வழங்கப்படுதல் வேண்டும். 2009 சனவரி 23 ஆந் திகதிய MOD/FD/IA/5/3/(2) ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, மேற்குறிப்பிட்ட வெளிவாரிச் சேவைகளை வழங்கியதிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியை பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் உத்தியோகத்தரின் நலனோம்பலுக்காக பேணப்படுகின்ற நிதியத்திற்கு அவ்வாறன வருமானங்கள் செலவு வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு திரட்டப்பட்ட வுரமானங்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அத் தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை.

- ஹொட்டேல் துறை அபிவிருத்திக்காக விடுவிக்கப்பட்ட காணியொன்று தொடர்பில் கிடைத்திருந்த ரூபா 19,817,306,000 மற்றும் 2014 யூலை 31 வரை காசிலிருந்து உழைக்கப்பட்ட ரூபா 4,853,809,345 தொகை அடங்கலான ரூபா 24,671,115,345 தொகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் மாதந்தோறும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 அளவில் அதில் ரூபா 7,120,497,622 செலுத்தப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17,343,327,730 தொகை மீதியாகக் காணப்பட்டது.

- 2013 பல்கலைக்கழக மாணவர்கள் தலைமைத்துவப் பயிற்சியளித்தல் தொடர்பில் இலங்கைத் தரைப்படைக்கு உயர் கல்வி அமைச்சின் பணத்திலிருந்து கிடைக்கக் கூடியதாகவுள்ள ரூபா

39,682,343 நிலுவைத் தொகை நிதிப்பிரமாணம் 807 இன் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.


இலங்கை தரைப்படை 2011 ஆம் ஆண்டில் நிழற்பட பிரதியெடுத்தல் தாள் 31,500 பக்கட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகளைக் கோரியிருந்ததுடன் வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் முறைப்படி மதிப்பீடு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் பொய்யான பெறுமதிசேர் வரி பதிவிலக்கத்தினை சமர்ப்பித்திருந்தார். இணங்கப்பட்ட ரூபா 375 வீதம் 2011 திசெம்பர் 03 முதல் 27 ஆந் திகதி வரையான காலத்தில் 20,000 பக்கட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், வழங்கப்பட்ட தாள்களின் தரம் இணங்கப்பட்ட தரத்தில் காணப்படாதிருந்ததுடன் களஞ்சியத்தால் வழங்கப்பட்டிருந்த 11,750 பக்கட்டுக்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்த முடியவில்லை.

# மின்வலு மற்றும் சக்திவளம்


## இலங்கை மின்சார சபை (சீஈபீ)

இலங்கை மின்சார சபை (சீஈபீ) இலங்கை முழுவதற்குமாக மின்சாரத்தை விநியோகிப்பதற்கு வினைத்திறனான ஒருங்கிணைந்த மற்றும் சிக்கனமான முறைமையொன்றை உருவாக்கி பராமரித்துச் செல்வதற்கு நியதிச்சட்ட ரீதியில் கடமையுள்ள நிறுவனமாக உள்ளது. இது 1969 இன் 17 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டு தற்போது 04 துணைக் கம்பனிகளையும் 12 உப துணைக்கம்பனிகளையும் ஒரு கூட்டு முயற்சியினையும் கொண்டுள்ளது. மின்வலு மற்றும் சக்தி வளத் துறையின் ஒழுங்கமைப்பாளரான இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் ஓர் மின் உற்பத்தி உத்தரவுப்பத்திரம், ஓர் பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் மற்றும் நான்கு விநியோக அனுமதிப்பத்திரங்கள் சீஈபீ இற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், சீஈபீ இன் துணைக் கம்பனிகளில் ஒன்றான இலங்கை மின்சாரக் கம்பனி (லெகோ) மின்சாரத்தை விநியோகிப்பதற்கு அனுமதிபெற்றுள்ளதுடன் பல சுதந்திர மின்சார உற்பத்தியாளர்களும் காணப்படுகின்றனர். அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரமும் சீஈபீ ஆல் கொள்வனவு செய்யப்படுகின்றது. இலங்கையின் மின்சார முறைமை ஏறத்தாழ 2970 மெகாவொட்ஸ் மொத்த பொருத்தப்பட்ட இயலளவைக் கொண்டதாகும். 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய கேள்வி முறையே 3312 மற்றும் 3362 மெகாவொட்ஸ் ஆகும்.

2013 ஆம் ஆண்டின் இறுதியளவில், மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 94 சதவீதமானோர் தேசிய மின் உற்பத்தியிலிருந்து பயன்பெற்றிருந்தனர். 2009 முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு துறையினாலும் நுகரப்பட்ட மின்சாரத்தின் அளவு (அதாவது ஒவ்வொரு வரி வகையினதும் படி) வரைபு 6 இல் காட்டப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் அண்டில் துறைவாரியான மின்சார நுகர்வுப் பங்கு வரைபு 5 இல் காட்டப்பட்டுள்ளது.




*வரைபு 5 :* 2013 இல் துறைவாரியான மின்சார நுகர்வு




*வரைபு 6 : 2009 -* 2013 வலரை துறைவாரியான மின்சார நுகர்வு *வளர்ச்சி*

உற்பத்திக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த விலையில் சீஈபீ மின்சாரத்தை வழங்குகின்றது. பொது மக்களுக்கு நியாயமான விலையிலும் உயர் பாவனை மட்டத்திலுள்ள நுகர்வோர்களுக்கு வசதியான விலையிலும் மின்சாரத்தை வழங்குவதே இதற்கான காரணங்களாகும். நீர் மின்சார உற்பத்தி போதியளவில் காணப்பட்ட போதிலும், மின்சார கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிலையான கிரயத்தை சீஈபீ பொறுப்பேற்க வேண்டியுள்ளதால் அலகுக் கிரயத்தைக் குறைப்பதற்கு அது சாதகமான தாக்கத்தை செலுத்துவதில்லை. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டில் சராசரி அலகுக் கிரயம் ரூபா 23.66 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 15.56 இற்கு விற்ப்பட்டிருந்தது. அதேவேளை 2013 இல் கிரயம் ரூபா 17.70 ஆக குறைவடைந்து ரூபா 17.93 இற்கு அலகொன்று விற்பனை செய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக அதிகளவு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டமையே இதற்கான காரணமாகும். 2012 இன் ரூபா 61 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 12 பில்லியன் இலாபத்தை சபை சம்பாதித்திருந்தது. அது பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது.

| **வகை** | **இலாபம் / (நட்டம்) ரூபா மில்லியன்** |
|---|---|
| உள்நாடு | (7,268) |
| மத ரீதியான | (587) |
| பொது நோக்கம் | 21,913 |
| அரசாங்கம் | 204 |
| கைத்தொழில் | (3,313) |
| ஹொட்டேல் | 392 |
| வீதி விளக்குகள் | (1,848) |
| லெகோ விற்பனை | 3,357 |
| **மொத்தம்** | **12,850** |

*அட்டவணை 3: இலாபப் பகுப்பாய்வு*

சபையின் நிதிசார் முக்கிய விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஒப்பீட்டுத் தகவல்களுடன் கீழே அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டவாறு இலாபம் ஏற்படுவதற்குக் காரணம் விற்பனை அதிகரிப்பும் நீர் மின்சார உற்பத்தியின் அதிகரிப்புக் காரணமாக நேர்க் கிரயம் குறைவடைந்தமையுமாகும். அத்துடன் மின் உற்பத்தி, பரிமாற்றல் மற்றும் விநியோகத் துறையிலன் கீழ் வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படமையின் விளைவாக பல்வேறு புத்தாக்க முறைமைகள் காரணமாக 2001 இல் காணப்பட்ட முறைமை நட்டங்கள் 20 சதவீதத்திலிருந்து 2013 இல் 11.5 சதவீதத்திற்குக் குறைவடைந்திருந்தது.

| | **2013** ரூபா மில்லியன் | **2012** ரூபா மில்லியன் | **2011** ரூபா மில்லியன் | **2010** ரூபா மில்லியன் | **2009** ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| விற்பனை | 194,147 | 163,513 | 132,460 | 121,862 | 110,518 |
| நேர்க் கிரயம் | (166,926) | (222,419) | (151,448) | (116,168) | (118,186) |
| மொத்த இலாபம் (நட்டம்) | 27,221 | (58,906) | (18,988) | 5,694 | (7,668) |
| நிர்வாக செலவினம் | (2,598) | (2997) | (1,636) | (1,851) | (2,870) |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | 24,623 | (61,903) | (20,624) | 3,843 | (10,538) |
| ஏனைய வருமானம் | 5,106 | 4,225 | 3,810 | 3,063 | 3,412 |
| நிதிக் கிரயம் (தேறியது) | (11,136) | (3,769) | (3,371) | (2,047) | (2,213) |
| வரிக்கு முன்னர் இலாபம் (நட்டம்) ஐந்தொகை | 18,593 | (61,447) | (20,185) | 4,859 | (9,339) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 785,717 | 738,171 | 606,333 | 605,423 | 516,022 |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | 212,769 | 193,230 | 257,464 | 287,032 | 275,208 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 482,806 | 407,585 | 281,835 | 229,128 | 141,883 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 92,872 | 137,356 | 122,034 | 89,263 | 98,931 |
| காசு மீதி | (1,431) | (17,813) | (1,178) | (3,102) | (4,039) |
| விற்பனைகள் (ஜீடபிள்யூ எச்) | 10,621 | 10,424 | 10,023 | 9,268 | 8,441 |
| உற்பத்தி ((ஜீடபிள்யூ எச்) | 11,962 | 11,802 | 11,528 | 10,714 | 9,882 |
| முறைமை நட்டம் | 1,341 | 1,378 | 1,505 | 1,446 | 1,441 |

*அட்டவணை 4: 2009 முதல் 2013 வரை சீசுபீ இன் முக்கிய நிதி விடயங்கள்*

எவ்வாறிருப்பினும், சபையின் நிதி மூலங்களை கருத்திற் கொள்கையில் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு மேலதிகமாக ரூபா 50 பில்லியன் வர்த்தகக் கடன்களை அது பெற்றிருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான வட்டிக் கிரயம் ரூபா 12,813 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 66 சதவீதம் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்கான கடன் வட்டியினை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான பொறுப்புக்கள் நிலுவைகள் தீர்க்கப்பட்டமை காரணமாக ரூபா 20 பில்லியனிலிருந்து 2013 இல் ரூபா 6 பில்லியனுக்கு குறைவடைந்திருந்தது. இருந்த போதிலும் கடன் மூலதன நிதியளிப்பில் அதிகரிப்புப் போக்கொன்று காணப்படுகின்றது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் நிலைமை கீழே அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளது.

| **நீண்ட காலக் கடன்கள்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
|---|---|---|
| திறைசேரிக் கடன்கள் | 334,684 | |
| வங்கிக் கடன்கள் | 44,404 | |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | 252 | |
| தொடர்புடைய தரப்பினர் கடன்கள் | 3,695 | |
| வங்கி மேலதிகப்பற்று | 3,474 | 386,509 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 6,358 | |
| சுதந்திர மின் வழங்குனர்கள் | 14,921 | |
| புதுப்பிக்கத்தக்க சக்திவள வழங்குனர்கள் | 1,122 | 22,401 |
| | | **408,909** |

*அட்டவணை 5: 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் நிலமை*

- மூலப்பொருள் கொள்வனவுகள் மற்றும் இருப்பில் உள்ளடங்கியுள்ள பொருட்களுடன் தொடர்புடைய ரூபா 1,898 மில்லியன் மொத்தத் தேறிய விலை முரண், நேர் ஊழியம் மற்றும் மேந்தலை அறவீடுகள் என்பன வலயம் 02 இனால் வருமானமாகக் கருதப்பட்டிருந்தமையால் இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

- புத்தளம் அனல் மின் உற்பத்தி நிலைய உற்பத்தி 2012 மற்றும் 2013 இல் தடைப்பட்டமையாலும் வினைத்திறனின்மையாலும் ரூபா 25,098 மில்லியன் கிரயமான 1,394.33 மெகாவொட்ஸ் நட்டத்தினை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக 2013 இல் அறிவிக்கப்பட்ட 35 மோசடிகளின் பெறுமதி ரூபா 49 மில்லியனாகும்.

- திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 128,240 மில்லியன் தொகையான 04 கடன்கள் தொடர்பில் திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அதன்காரணமாக, மீளளித்தல் பட்டியல் மற்றும் அக்கடன்கள் மீதான வட்டி என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2009 முதல் அமுலுக்கு வருகின்ற அடுத்த சம்பளத் திருத்தத்லிருந்து உழைக்கும்போதே செலுத்தும் வரிப்பொறுப்பினை ஊழியர்களிற்கு நகர்த்துதல் வேண்டும் என்ற 2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக ஊழியர்களால் தாங்கிக் கொள்ளப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியினை சபை செலுத்தியிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் செலுத்தப்பட்டிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 1,312 மில்லியன் ஆகும்.

- 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு அமைச்சரவையின் அல்லது பொது நிர்வாக அமைச்சரின் அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சபையினால் பல்வேறு விதமான முப்பத்தொன்பது பதவியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2013 இல் அவ்வாறான படிகளாக ரூபா 642 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமை மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனை வெளிப்படுத்தியது.

- சில சுதந்திர மின் உற்பத்தியாளர்கள் ஏனைய சுதந்திர மின் உற்பத்தியாளர்களின் பராமரிப்பு ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்றிருந்தமையின் விளைவாக அவர்களுக்கிடையே தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்தன. ஆகையால், இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் மின் பொறிகளைப் பராமரிப்பதற்காக உண்மையில் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதனை மெய்மையாய்வு செய்யாது மேற்கொண்டிருந்த வரிகள் அடங்கலான செலவின மீளளிப்பின் பொருத்தப்பாட்டினை கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. 2013 ஆம் ஆண்டில் மீளளிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 78,356 மில்லியனாகும்.

- இலங்கைச் சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 235) 164 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதியமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தினை திருத்துவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கு அவரைக் கோராது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் வகைப்படுத்தல் தவறொன்று காரணமாக இலங்கை மின்சார சபை இலங்கை சுங்கத்திற்கு ரூபா 208,283,881 தண்டப்பணத்தைச் செலுத்தியிருந்தது.

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவேற்று, நடுத்தர மட்ட தொழில்நுட்ப சேவை, திறன்களைக் கொண்ட தொழில்நுட்பச் சேவை, பகுதியளவில் திறனுடைய தொழில்நுட்பச் சேவை மற்றும் ஏனைய திறன் தரங்களில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,486 ஆகும்.

- துணைக் கம்பனிகளுடனும் உப துணைக் கம்பனிகளுடனும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை சபை ஒவ்வோர் ஆண்டிலும் தயாரிக்கின்றது. சபை தனது கட்டுப்பாட்டினை வைத்திருக்காமையினைக் குறிப்பிட்டாக வேண்டியுள்ளதுடன் ஆகையால் சபையுடன் கலந்தாலோசிக்காது அந்த துணைக் கம்பனிகள் வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் டிரான்ஸ்போர்மர் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் கல்வனைசிங் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் இன்ஜினியர்ஸ் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட பவன் தனவி (தனியார்) கம்பனி போன்ற உப துணைக்கம்பனிகளை கூட்டிணைப்புச் செய்திருந்தன. உப துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளில் இலங்கை மின்சார சபையின் பிரதிநிதித்துவம் இல்லாமையால் உப கம்பனிகளின் மீதான சபையின் கட்டுப்பாடு பலவீனமடைந்திருந்தது.


# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தினால் அரசாங்க தொழில்முயற்சியொன்றாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபீசீ) உருவாக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து மேலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. நாட்டின் சுபீட்சத்திற்கு பங்களிக்கும் அதேவேளை பிராந்தியத்திலுள்ள பெற்றோலியம் மற்றும் அதுசார்ந்த கைத்தொழிலில் வாடிக்கையாளர் முன்னோக்கிய, சுற்றாடல் சார் முன்னனி நிறுவனமாக இருத்தலே சீபீசீ இன் தூர நோக்காகும். பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குனர் மற்றும் விநியோகத்தராக வணிகத்தை நடாத்திச்செல்லல் மற்றும் பெற்றோலியத்தினை வெளிக்கொணர்வதற்காக கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளலும் சுத்திகரிப்பினை நடாத்திச் செல்லலும் குறிக்கோள்களை அடைவதற்கு தற்செயலான அல்லது உதவியான எந்த வணிகத்தினையும் செயற்படுத்தல் என்பன சீபீசீ இன் பிரதான குறிக்கோள்களாகும்.

2013 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதியின் மொத்தக் கிரயம் ரூபா 535 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2013 இன் நடைமுறைச் சந்தைவிலையில் கணிக்கப்பட்ட ரூபா 8,674 பில்லியன் தொகையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 6.2 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் 2013 இன் மொத்த இறக்குப் பெறுமதியான ரூபா 2,323 பில்லியனில் ஏறத்தாழ 23 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

## நிதி விளைவு

2013 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனம் ரூபா 7,984 மில்லியன் தேறிய நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 236,529 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்து நிலையைக் கொண்டிருந்தது. மேலும், ஹெட்ஜிங் கொடுக்கல்வாங்கல் மீது கூட்டுத்தாபனத்தால் தாங்கிக்கொள்ளப்பட்ட நட்டங்களின் எதிர்மறையான தாக்கம் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை அதிகரிப்பதற்கு காரணமாகியது. முன்னைய ஆண்டின் ரூபா 97,308 மில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 89,324 மில்லியன் அதிகரிப்புக் காணப்பட்ட போதிலும், 2008 ஆம் ஆண்டிலிருந்து பாரிய நட்டம் ஏற்பட்டிருந்தமையின் விளைவாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்து நிலைமை மேலும் குறைவடைந்திருந்தது. ஆகையால் இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை ஐயத்திற்குரியதாகும். மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆறு ஆண்டுகளிற்கான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் தேறிய சொத்து நிலைமை என்பன கீழே உள்ள வரைபு 7 இல் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 7: 2007 – 2013 வரை சீபீசீ இன் தேறிய சொத்துக்களின் நிலைமை

கூட்டுத்தாபனத்தின் இந்நிதி நெருக்கடியினைச் சமாளிப்பதற்காக 2011, 2012 மற்றும் 2013 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டுச் சில்லறை விலைகள் திருத்தப்பட்டன. அதேநேரம், மின்சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபையால் பயன்படுத்தப்படுகின்ற உயர் கந்தக மற்றும் தாழ் கந்தக எரிபொருள் எண்ணையின் விலைகள் 2013 ஏப்ரல் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் முறையே ரூபா 90 மற்றும் ரூபா 100 வலைகளை அடைவதற்காக லீற்றர் ஒன்று ரூபா 25 ஆல் அதிகரிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் சீபீசீ இனால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்கள் கீழே அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளன.

| **பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்** | **லீற்றர் ஒன்றின் விலை (அமுலாகும் திகதி)** | | | **ஆண்டில் விலை அதிகரிப்பு (லீற்றர் ஒன்றிற்கு)** | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | *2012 பெப் 12* | *2012 திசெம் 14* | *2013 பெப். 22* | *2012* | | *2013* | |
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *ரூபா* | *சதவீதம்* | *ரூபா* | *சதவீதம்* |
| பெற்றல் 95 ஒக்டேன் | 167.00 | 167.00 | 170.00 | 12.00 | 7.7 | 3.00 | 1.8 |
| பெற்றல் 90/92 ஒக்டேன் | 149.00 | 159.00 | 162.00 | 22.00 | 16.1 | 3.00 | 1.9 |
| லங்கா ஒடோ டீசல் | 115.00 | 115.00 | 121.00 | 31.00 | 36.9 | 6.00 | 5.2 |
| லங்கா சுபர் டீசல் | 142.00 | 142.00 | 145.00 | 35.7 | 33.6 | 3.00 | 2.1 |
| லங்கா கைத்தொழில் மண்னெண்ணை | 111.00 | 111.00 | 115.00 | 35.00 | 46.1 | 4.00 | 3.6 |

அட்டவணை 6: சீபீசீ இனால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்கள்

## துறை ரீதியான செயலாற்றல்

2013 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சர்வதேச சந்தையில் மசகு எண்ணையின் விலை குறைவாகவே காணப்பட்டது. 2012 இல் காணப்பட்ட ஒரு பீப்பாய் மசகு எண்ணைக்கான யூஎஸ்டொலர் 112.41 உடன் ஒப்பிடுகையில் 2013 இல் ஒரு பீப்பாய்க்கான சராசரி விலை யூஎஸ்டொலர் 109.56 ஆகக் காணப்பட்டது. சர்வதேச விலைப் போக்குகளுடன் இணைந்ததாக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணையின் விலையும் 2012 ஆண்டின் யூஎஸ்டொலர் 114.00 இலிருந்து 2013 இல் யூஎஸ்டொலர் 109.84 இற்கு 3.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணையின் விலை குறைவடைந்தும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் அதிகரிக்கப்பட்டுமிருந்த போதிலும், அட்டவணை 7 இல் தரப்பட்டுள்ள தகவல்களின் படி கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தையே ஈட்டியிருந்தது.

| **துறை** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நட்டம்** | | |
|---|---|---|---|
| | **2013** | **2012** | **2011** |
| | **ரூபா மில்.** | **ரூபா மில்.** | **ரூபா மில்.** |
| **போக்குவரத்து** | | | |
| லங்கா ஒடோ டீசல் | (6,235) | (29,654) | (62,045) |
| **மின்வலு உற்பத்தி** | | | |
| நப்தா | (1,081) | (1,048) | (798) |
| எரிபொருள் எண்ணை - 3500 | (1,184) | (8,718) | (9,206) |
| எரிபொருள் எண்ணை - 1500 | (1,231) | (23,223) | (18,313) |
| எரிபொருள் எண்ணை - 1500 (L/S) | (9) | (11,733) | (5,764) |
| **விமானச்சேவை** | | | |
| "எவ்சுவர்" உள்நாடு | (1,251) | 122 | 114 |
| **கைத்தொழில்** | | | |
| எரிபொருள் எண்ணை - 1500 | (350) | (2,003) | (4,248) |
| எரிபொருள் எண்ணை - 800 | (333) | (904) | (1,790) |
| கைத்தொழில் மண்ணெண்ணை | (126) | (364) | (832) |
| உராய்வு நீக்கி எண்ணையும் கிரீசும் | (271) | 46 | 217 |

| | | | |
|---|---|---|---|
| **உள்நாடு** | | | |
| எல்பீ எரிவாயு (கே.ஜீ) | (436) | (377) | (224) |
| மண்ணெண்ணை | (2,449) | (3,525) | (6,886) |
| **விவசாயிகள்** | | | |
| விவசாய இரசாயணங்கள் | (70) | (2) | (5) |
| **ஏற்றுமதி** | | | |
| நப்தா ஏற்றுமதி | (976) | (43) | (675) |
| பர்னஸ் 1500 ஏற்றுமதி | (2,690) | (70) | (329) |
| **நிலக் கீழிடம்** | | | |
| டீசல் | (67) | | |
| எரிபொருள் எண்ணை 1500 | (729) | - | - |

அட்டவணை 7: உற்பத்திப்பொருள் ரீதியாக சீபீசீ இனால் உழைக்கப்பட்ட நட்டங்கள்

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நட்டமீட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களை மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. அதன்படி, எவ்சுவர் - சர்வதேச விமானச்சேவைத் துறை, உராய்வு நீக்கி எண்ணை மற்றும் கைத்தொழில் துறையிலுள்ள கிரீஸ் தவிர்ந்த ஏனைய எல்லா உற்பத்திப் பொருட்களும் தொடர்ச்சியாக நட்டத்தினை ஈட்டியிருந்தன.

## தொடர்ச்சியான நிதி நட்டத்திற்கு பங்களித்த காரணிகள்

சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாட்டு வினைத்திறனின்மை, ஐக்கிய அமெரிக்காவின் ஈரான் மீதான தடைகள் காரணமாக மசகு எண்ணை மூலங்களில் மாற்றம் ஏற்பட்டமையால் சுத்திகரிப்பு எல்லைகள் குறைவடைந்தமையின் விளைவாக வினியோக பற்றாக்குறையினை சமாளிப்பதற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருள் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு, விலை மாற்றத்திற்கு முன்னர் இலங்கை மின்சார சபைக்கு பர்னஸ் ஒயில் உயர் மானிய விலையில் வழங்கப்படுதல், ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா லிமிடட் ஆகியவற்றிற்கு ஒப்பந்த வாடிக்கையாளர் விலையிலும் குறைவான சகாய விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுதல், "ஹெட்ஜிங்" கொடுக்கல்வாங்கலைத் தீர்த்தமையால் ஏற்பட்ட பாரிய நட்டம், எரிபொருள் சிட்டைகளைத் தீர்ப்பதற்கு வங்கித் துறையிலிருந்து பெறப்பட்ட கடன்கள் அதிகரித்தமை, பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தலில் காணப்பட்ட வினைத்திறனின்மைகள் போன்ற காரணிகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிதி நட்டத்திற்கு பங்களித்திருந்தன.


## சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் வினைத்திறனின்மை

நாட்டின் தற்போதைய பெற்றோலியப் பொருட்களின் கேள்வியில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினை சமாளிப்பதற்கு இறக்குமதிசெய்யப்பட்ட மசகு எண்ணையை சபுகஸ்கந்தையில் அமைந்துள்ள சீபீசீ இற்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையித்தில் சுத்திகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நவீனமயப்படுத்தலின்

தாமதம் காரணமாக ஏற்பட்ட செயற்பாட்டுக் கோளாருகள் மற்றும் குறைவான சுத்திகரிப்பு வெளியீடு அத்துடன் சுத்திகரிப்பு விரிவுபடுத்தலின்மை என்பன கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

கூட்டுத்தாபனத்தினால் இறக்கமதி செய்யப்பட்ட மசகு எண்ணையின் அளவு 2011 இன் 2,070,000 மெற்றிக் தொன்னிலிருந்து 2012 இல் 1,486,720 மெற்றிக் தொன்களாக அல்லது 28.2 சத வீதமாக குறைவடைந்திருந்தது. அதன் விளைவாக, கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் அளவு 2011 இன் 3,961,000 மெற்றிக் தொன்னிலிருந்து 2012 இல் 460,000 மெற்றிக் தொன்களால் அல்லது 13.1 சத வீதத்தால் அதிகரித்திருந்தது.

2012 ஆம் ஆண்டின் 1,596,058 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தினால் (கையாளப்பட்ட) சுத்திகரிக்கப்பட்ட மசகு எண்ணையின் அளவு 2013 இல் 1,643,218 மெற்றிக் தொன்களாக அதிகரித்திருந்த போதிலும், நாளொன்றிற்கான 6,900 தொன்கள் அல்லது 2013 ஆம் ஆண்டிற்கான 2,415,000 மெற்றிக் தொன்கள் உற்பத்தி இயலளவினை செயன்முறை மட்டங்கள் அடைந்திருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்திய பத்து ஆண்டுகளிலும் ஆண்டொன்றிற்கு கையாளப்பட்ட மசகு எண்ணை அந்தந்த ஆண்டுகளின் உற்பத்தி இயலளவுடன் ஒப்பிடப்பட்டு கீழே வரைபடம் 8 இல் தரப்பட்டுள்ளது.




வரைபடம் 8: 2003 – 2013 வரையான காலத்தில் சுத்திகரிப்புச் செயற்பாடுகள்

1969 இல் நிறுவப்பட்ட தற்போதுள்ள 45 வருடங்கள் பழமைவாய்ந்த சுத்திகரிப்பு ஆலையினால் நாட்டின் அதிகரித்துச் செல்லும் பெற்றோலியப் பொருட்களிற்கான தேவையை நிறைவேற்ற முடியாதுள்ளதுடன் உலகிலுள்ள ஏனைய நவீன தொழல்நுட்பம் மற்றும் வசதிகளுடன் உயர் வினைத்திறனுடன் செயற்பட்டு குறைந்த கிரயத்தில் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய சுத்திகரிப்பு ஆலைகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த எல்லையில் காணப்படுகின்றது. இருப்பினும், குறைந்த கிரயத்தில் சந்தைக்கு எரிபொருள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தீர்மானமாகியுள்ள சபுகஸ்கந்த எண்ணைச் சுத்திகரிப்பு விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் இதுவரை சீபீசீ இனால் அமுல்படுத்தப்படவில்லை.

## ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா லிமிடட் ஆகியவற்றிற்கு சகாய விலையில் எரிபொருளை வழங்குதல்

ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவை ஒப்பந்த வழங்குனர்களாக காணப்பட்ட போதிலும் ஒப்பந்த வாடிக்கையாளர் விலையுடன் ஒப்பிடுகையில் குறைவான சகாய விலையில் அவற்றிற்கு எரிபொருள் வழங்கப்படுவதனால் மேற்படி கம்பனிகளுக்கு சகாய விலையில் விமாணச் சேவை எரிபொருள் வழங்கியமையால் 2013 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,009.7 மில்லியன் மற்றும் ரூபா 456.6 மில்லியன் நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு. விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | ஆண்டின் போது ஏற்பட்ட நட்டங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | 2011 | |
| | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 14.10 | 1,866.39 | 3.29 | 423.97 | 5.47 | 627.16 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 1.08 | 143.29 | 0.25 | 32.58 | 0.38 | 42.61 |
| **மொத்தம்** | **15.18** | **2,009.68** | **3.54** | **456.55** | **5.85** | **669.77** |

சகாய விலையில் இந்த இரண்டு கம்பனிகளுக்கும் எரிபொருள் வழங்கப்படுவதனை தவிர்த்து, அவற்றின் நலிவான நிதிச் செயலாற்றல் காரணமாக நிலுவையான எரிபொருள் சிட்டைகளைத் தீர்த்தல் மிகவும் பலவீனமானதாக காணப்பட்டது. உதாரணமாக: 2013 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் ரூபா 28.6 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவு செய்திருந்ததுடன் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆனது ரூபா 2013 இல் ரூபா 1.5 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவு செய்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறான நிலுவை மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 29,520 | 25,890 | 12,351 | 542 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 4,314 | 3,416 | 1,227 | 361 |

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 53,190 மில்லியன் மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 63.6 சதவீதத்திற்கு மேற்பட்டவை மேற்படி இரண்டு கம்பனிகளிடமிருந்து பெறவேண்டியவற்றை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் முன்னைய மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துச் செல்லும் போக்கை காட்டுகின்றது.

## வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களின் அதிகரிப்பு

தனது எண்ணைச் சிட்டைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களை கூட்டுத்தாபனத்தின் அதிகரித்திருந்ததுடன் அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் நட்டமீட்டல் அதிகரித்து கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் நிலைமையினை மேலும் தேய்வுக்குட்படுத்தியிருந்தது. மேலும் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காண்பித்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பாரிய நிதிக் கிரயம் சீபீசீ இற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கடன்கள் | நிதிக் கிரயம் | சாதாரண நடவடிக்கைகள் மீதான வருடாந்த நட்டம் | சாதாரண நடவடிக்கையிருந்தான நட்டத்தின் சதவீதமாக நிதிக் கிரயம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | |
| 2013 | 406,850 | 18,539.85 | 7,732.82 | 239.8 |
| 2012 | 399,520 | 18,359.68 | 89,569.18 | 20.5 |
| 2011 | 310,060 | 9,000.57 | 94,503.45 | 9.5 |
| 2010 | 168,020 | 6,858.90 | 26,922.82 | 25.5 |

கீழே காட்டப்பட்டவாறு அண்ணியச் செலாவணிக் கடன்களுக்குப் பிணையாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சார்பில் திறைசேரி வழங்கியிருந்த உத்தரவாத எல்லையினை கூட்டுத்தாபனம் விஞ்சியிருந்தது.

| வங்கியின் பெயர் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி | | பிணை – பொதுத் திறைசேயின் உத்தரவாதம் | | பிணையினை விஞ்சிய தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். | யூஎஸ்டொ. மில். | ரூபா மில். |
| இலங்கை வங்கி | 1,810.62 | 239,617 | 900 | 119,106 | 910.34 | 120,512 |
| மக்கள் வங்கி | 1,318.16 | 174,415 | 650 | 86,021 | 668.16 | 88,424 |

## பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறவேண்டிய முறையே ரூபா 15,416 மில்லியன் மற்றும் ரூபா 37,774 மில்லியனை உள்ளடக்கிய வியாபாரப் பெறவேண்டியவைகளின் மொத்தம் ரூபா 53,190 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 340 மில்லியன் 02 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்றன.

## “ஹெட்ஜிங்” கொடுக்கல்வாங்கல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஹெட்ஜிங் கொடுக்கல்வாங்களின் படி, பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஹெட்ஜிங் ஒப்பந்தங்கள் தொடர்பான நடுவர் தீர்ப்பு செயற்பாடுகளில் கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாகக் கலந்துகொண்டிருந்தது. ஆகையால் தரப்பினர்களிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த தீர்ப்பனவு உறுதியின் கீழ் ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கிக்கு (எஸ்சீபீ) யூஎஸ்டொலர் 60 மில்லியன் (ரூபா 7,612 மில்லியன்) தொகையினை 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தியிருந்தது.” மேலும், யூஎஸ்டொலர் 15.3 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தினால் சட்ட மற்றும் ஏனைய கட்டணங்களாக செலவிடப்பட்டிருந்தது. அதேநேரம், சிடி வங்கியுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் யூஎஸ்டொலர் 1.3 மில்லியன் (ரூபா 153 மில்லியன்) தொகையான நடுவர் தீர்ப்பு வெகுமதியொன்று கூட்டுத்தாபனத்திற்குச் சார்பாக வழங்கப்பட்டிருந்தது.

## எண்ணையினை எடுத்துச்செல்வதற்காக குழாய்வழி வலையமைப்பு

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப்பொருட்களானவை கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல குதங்களில் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் இறக்கமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் குதங்களுக்கு (சீபீஎஸ்ரீஎல்) மாற்றுவதற்கு கொழும்பு துறைமுத்திற்கும் கொலன்னாவைக்குமிடையே குழாய் வழிகள் காணப்பட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட பெற்றல், டீசல், மண்ணெண்ணை, மற்றும் பர்னஸ் எண்ணையை கொழும்பு துறைமுத்திலிருந்து கொலன்னாவைக்கு போக்குவரத்துச் செய்வதற்காக பல தசாப்தங்களுக்கு முன்னர் பொறுத்தப்பட்ட பெற்றோலியக் குழாய்வழிகள் மோசமாக சேதமடைந்துள்ளதுடன் அவற்றில் சில குழாய் வழிகள் சேதமடைந்து திருத்த முடியாத அளவில் காணப்பட்டன. நாட்டின் மொத்தக் கேள்வியில் அதிகளவிலான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாக போக்குவரத்துச் செய்யப்படுவதனால் இக் குளாய் வழிகளை நவீனமயப்படுத்தி புதுப்பித்தல் மிக அவசர தேவையாக உள்ளது. முடிவுற்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிற்கு நாட்டில் காணப்படுகின்ற கேள்வி காரணமாக இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாகவே இறக்குமதி செய்யப்படுவதனால் தடங்கல்களுக்கான ஆபத்து காரணமாக நாடு முழுவதிலும் பாரிய எரிபொருள் பிரச்சினை ஏற்படுவதற்குள்ள வாய்ப்பினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

கடற்கரையிலிருந்து அண்ணளவாக 7.2 கிலோ மீற்றருக்கு அப்பாலும் நடுக்கடலில் அமைந்துள்ள “சிங்ல் பொயின்ட் போய் முரிங்” (SPBM) ஊடாக முத்துராஜவெல தாங்கிக்கு எரிபொருள் பாய்ச்சப்படுகின்றது. கடல் கொந்தளிப்பாக இருக்கும் சந்தர்ப்பத்தல் அல்லது எஸ்பீபிஎம் பராமரிப்பிற்கு உட்பட்டிருக்கும் வேலையில் மாற்று விநியோக மூலங்கள் காணப்படவில்லை. அதேவேளை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை குதங்களுக்கிடையே மாற்றுவதற்காக முத்துராஜவெல குதத்திற்கும் கொலன்னாவ தாங்கிக்குடையே இணைப்புக்கள் காணப்படவில்லை. அவற்றிலுள்ள இவ்வாறான சிக்கலான தன்மைகள் காணமாக அந்தக் குதங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்” இற்காக 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டம் இதுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மனித வள முகாமைத்துவம்

2013 ஆம் ஆண்டிற்காக சகல பதவியணியினர் மட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 3,284 ஆனதுடன் அதில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்றுத் தரத்தில் (முகாமையாளர் உள்ளகக் கணக்காய்வு, வர்த்தக முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் உள்ளிட்ட) 153 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதேநேரம், பதவியணியின் சகல வகையின் கீழுள்ள 10 பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பட்டிருந்ததுடன் அதிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் 2011 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து பிரதிப் பொது முகாமையாளர் நிதி ஆக பதிற்கடமை அடிப்படையில் பணியாற்றி வருகின்றார்.

# கல்வி

அமைச்சின் இலக்குகளை சரியானமுறையில் அமுல்படுத்துவதற்கு கல்வி அமைச்சிற்கு இணையான நிறுவனங்கள் பல உள்ளன. மாகாண கல்வித் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சபை, இலங்கை நூல் அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை தேசிய யுனெஸ்கோ ஆணைக்குழு என்பன அந்த நிறுவனங்களாகும். இதற்கு மேலதிகமாக கல்விப் பகுதிக்குரிய செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் பங்களிப்பும் கிடைத்திருந்தது.

கல்விக்காக 2009 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 85,198 மில்லியன் தொகையான மீண்டெழும் நிதியேற்பாடு மற்றும் ரூபா 7,511 மில்லியன் தொகையான மூலதன நிதியேற்பாடு 2013 ஆம் ஆண்டு வரையில் முறையே ரூபா 115,525 மில்லியன் மற்றும் ரூபா 39,135 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 5,000 ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 2,427 மில்லியன் தொகையும் அறிவுடைய சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தினால் ரூபா 1,373 மில்லியன் தொகையும் ஆற்றலுடைய பிரிவுகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வி முறைமையினை மீளமைக்கும் செயற்திட்டத்தினால் ரூபா 242 மில்லியன் தொகையும் கல்வியின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்தது.

## பாடசாலைகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்

2012 ஆம் ஆண்டின் போது 10,737 எண்ணிக்கையிலான பாடசாலைகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 115 பாடசாலைகளினால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது 4,004,059 ஆக இருந்த அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் போது 4,037,001 வரை அதிகரித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின்போது 342,450 புதிய மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

2009 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சினால் 36,616 ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கப் பாடசாலைகளின் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 226,983 ஆக இருந்ததுடன் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 6.5 சதவீதமாகும்.

## ஆசிரியர்களை இடமாற்றுதலும் நியமித்தலும்

கல்வி அமைச்சுச் செயலாளரின் 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்படாமையின் காரணமாக 24 தேசிய பாடசாலைகளில் 10 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான காலம் ஒரே பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 653 ஆக இருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

விஷேட கல்வி கற்பித்தல் டிப்ளோமாவினைக் கொண்ட ஆசிரியர்களை நியமிக்கும் போது விஷேட தேவைகளையுடைய 1,145 மாணவர்கள் கல்வி பயிலுகின்ற 128 பாடசாலைகளுக்கு அவ்வாறான ஆசிரியர்கள் நியமிக்கப்படாது விஷேட தேவைகளையுடைய மாணவர்கள் இன்றிய 162 பாடசாலைகளுக்கு அவ்வாறான 176 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கல்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது அமைச்சினால் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட சீருடை பக்கற்றுக்களின் அளவு மற்றும் வருடாந்தம் செலவிடப்பட்ட செலவினம் என்பன கீழ்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட செலவினங்களில் 1.2 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | பக்கற்றுக்களின் எண்ணிக்கை | பக்கற்றுக்களுக்கான செலவினம் (போக்குவரத்து மற்றும் ஏனைய செலவினங்கள் தவிர) |
|---|---|---|
| | | ரூபா |
| 2009 | 6,633,850 | 1,176,772,857 |
| 2010 | 6,127,502 | 1,137,958,013 |
| 2011 | 6,393,990 | 1,421,641,647 |
| 2012 | 7,089,500 | 1,698,944,372 |
| 2013 | 6,809,370 | 1,719,549,886 |

## எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் அடையப்பட்ட நோக்கங்களும்

மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளப்பட்டதன் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

### ஆயிரம் பாடசாலைகள் செயற்திட்டம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஆயிரம் பாடசாலைகள் செயற்திட்டத்தின் மூலம் மஹிந்தோதய தொழில்நுட்ப பரிசோதனைக் கூடங்களை நிர்மாணிக்கும் கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் 817 பரிசோதனைக் கூடங்களின் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதிவரையில் ரூபா 4,274,077,350 தொகை செலவிடப்பட்டு 349 பரிசோதனைக் கூடங்களின் வேலைகளை மாத்திரம் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. திட்டமிடப்பட்ட 817 பரிசோதனைக் கூடங்களில் 171 பரிசோதனைக் கூடங்களுக்கு மாத்திரம் ரூபா 223,374,489 தொகை செலவிடப்பட்டு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### தனிமைப்பட்டுள்ள பாடசாலைகள்

50 மாணவர்களுக்குக் குறைவான எண்ணிக்கையில் இருக்கின்ற மற்றும் பூகோள ரீதியாக தனிமைப்பட்டுள்ள 1,347 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் சமுதாய அறிவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### நெணச செயற்திட்டம்

2009 யூலை 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட நெணச தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியார் நிறுவனத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த 1,962 தொலைக்காட்சிப் பெட்டிகள் 1,962 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 10, 11 ஆந் தரங்களில் கணிதம், விஞ்ஞானப் பாடங்கள் மற்றும் தரம் 5 கணிதம், தாய்மொழி, இரண்டாம் மொழி விடயங்களுக்காக பாடநெறியொன்றை ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பாடம் ஒளிபரப்பப்படும் கால இடைவெளியின் போது அந்த ஒளிபரப்பிற்கு தொடர்புபடும் வகையில் வகுப்பு நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப உபயோகம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நாட்டில் அமைந்துள்ள ஒட்டுமொத்த அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை 10,852 இற்கிடையில் 5,824 பாடசாலைகள் அல்லது மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கையில் 58 சதவீதத்திற்கு மாத்திரம் கணனி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. கணனி வசதிகளுடன் உள்ள பாடசாலைகளுக்காக வலைப்பின்னல் வசதிகளை வழங்கும் நோக்கத்தில் 2006 ஆம் ஆண்டின் போது பாடசாலை கணனி வலைப்பின்னலை ஸ்தாபித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2006 தொடக்கம் 2008 ஆம் ஆண்டிற்கிடையிலான காலப்பகுதியில் ரூபா 37,090,000 இற்கு அண்மித்த தொகையும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 579,140,248 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 1,724 பாடசாலைகளை உள்ளடக்கிய நிறுவனங்கள் இந்த இணைப்பைப் பெற்றிருந்தது. இருந்த போதிலும் தகவல்கள் கோரப்பட்ட 1,724 பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே தகவல்களை அனுப்பிய 414 பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களும் இந்த சேவையின் பயன்பாட்டில் ஆக்கபூர்வமாகவும், செயற்திறனாகவும் செயற்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த கணனி வலையமைப்பு அமுல்படுத்தாமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 16,122,312 தொகை செலவிடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்த கல்விசார் முகாமைத்துவ தகவல் முறைமையும் செயற்பாடற்றிருந்தது.

### 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திடைதலும் பிரபல்யமிக்க பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதிலுள்ள கஷ்டங்களும்

அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் வகுப்பில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையான 42 இனை விஞ்சி 1 ஆந் தரம் தொடக்கம் 5 ஆந் தரம் வரையான வகுப்புக்களில் அவ்வப்போது மாணவர்கள் உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 31 தேசிய பாடசாலைகளில் 5 ஆந் தரத்தின் வகுப்புக்களில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை விட மேலதிகமாக 1,250 மாணவர்கள் இருந்தமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக 2013 ஆம் ஆண்டின் போது 5 ஆந் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்த 1,250 மாணவர்களுக்கு தமது திறமையின் பிரகாரம் பிரபல்யமிக்க பாடசாலைகளுக்கு சேர்வதற்காக இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் பிரபல்யமிக்க பாடசாலைகள் கிடைத்திருந்த மாணவர்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | பிரபல்யமிக்க பாடசாலை கிடைத்த சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் பிரபல்யமிக்க பாடசாலை கிடைத்திராத மாணவர்களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்த போது பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் பிரபல்யமிக்க பாடசாலை கிடைத்திராத சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 310,329 | 33,383 | 25,837 | 7,546 | 22.60 |
| 2013 | 322,455 | 32,517 | 27,415 | 5,102 | 15.69 |

### கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சை பெறுபேறு

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை 4 வருடங்களின் போது கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையின் பெபேறுகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கபடுகின்றன.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிகை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிகை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிககை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதம் | சகல பாடங்களிலும் அசிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்திபெறாத மாணவர்கள் மொத்த எண்ணிக்கையின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 271,644 | 164,527 | 60.57 | 3,057 | 14,411 | 5.3 |
| 2011 | 270,032 | 164,191 | 60.80 | 3,908 | 12,795 | 4.7 |
| 2012 | 268,995 | 174,160 | 64.74 | 4,509 | 11,100 | 4.1 |
| 2013 | 264,772 | 176,534 | 66.67 | 5,737 | 9,444 | 3.6 |

2010 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 6,872 இனால் குறைவடைந்திருந்த போதிலும் பரீட்சையில் சித்தியடைதல் சதவீதம் 60.57 தொடக்கம் 66.67 சதவிதம் வரை அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் சகல பாடங்களிலும் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 88 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே சகல பாடங்களிலும் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கை 34 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## கல்விப் பொதுத்தரப் பத்திரப் (உயர் தரம்) பரீட்சைப் பெறுபேறு

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான 03 வருடங்களின் போது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிகை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிகை | சகல பாடங்களிலும் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் அசிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிகை | பரீட்சையில் சித்தியடைந்த மொத்த மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| 2011/2012 | 239,775 | 141,411 | 23,237 | 3,707 | 28,937 | 20.4 |
| 2012/2013 | 233,634 | 144,745 | 18,485 | 9,057 | 22,943 | 15.8 |
| 2013/2014 | 241,629 | 140,993 | 27,924 | 4,999 | - | - |

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிகை 1,854 இனால் அதிகரித்திருந்ததுடன் பரீட்சையில் சித்தியடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது 2013 ஆம் ஆண்டில் 418 இனால் குறைவடைந்திருந்து. மூன்று பாடங்களிலும் சித்திடையாத மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 4,687 ஆன அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒட்டு மொத்த பரீட்சைப் பெறுபேறுகளிலும் பின்னடைவு அவதானிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிவிஷேட சித்திபெற்ற மாணவர்களில் 35 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் அளவு உயர்வடைந்தமையின் காரணமாக 2011/2012 கல்வி ஆண்டின் போது பல்கலைக்கழகங்களுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பினைக் காட்டியது.

# சுகாதார சேவைகள்

சுகாதார அமைச்சு குறிக்கோள்களின் பிரகாரம், நாட்டின் சமூக பொருளாதார, உளவியல் மற்றும் புலமைச் சொத்து அபிவிருத்தி என்பவற்றிற்கு பங்களிப்பு செய்வதன் ஊடாக தேசிய சுகதாரத்தை கட்டியொழுப்புவதற்காக செயற்படுகின்றது.

சுகாதாரத் துறையில் 2013 ஆம் ஆண்டில் செலவழித்த ரூபா 119,530 தொகை 2012 ஆம் ஆண்டில் செலவழித்த ரூபா 98,999 மில்லியன் செலவினத்துடன் ஒப்பிடும் போது 21 சதவீத அதிகரிப்பை குறிக்கின்றது. கடந்த 4 ஆண்டுகளின் போது செலவினத்தில் அதிகரிப்பு பின்வருமாறு இருந்தது.

| விபரங்கள் | ஆண்டுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| சுகாதார அமச்சின் செலவினம் (ரூபா மில்லியன்) | 92,994 | 71,506 | 63,353 | 53,730 |
| மூலதனம் -உள்ளபடியானது (ரூபா மில்லியன்) | 17,435 | 13,647 | 10,359 | 8,622 |
| மீண்டெழும் (ரூபா மில்) | 75,559 | 57,859 | 52,994 | 45,108 |
| சுகாதார மொத்த மீண்டெழும் செலவினம் (ரூபா மில்லியன்) | 119,530 | 98,999 | 89,217 | 73,835 |
| மூலதனம் (ரூபா மில்லியன்) | 99,609 | 81,946 | 74,443 | 60,506 |
| சுகாதாரம் ஒன்றின் மீதான மீண்டெழும் செலவினம் (ரூபா) | 19,921 | 17,063 | 14,774 | 13,329 |
| சுகாதாரத்திற்கான தலைக்குரிய செலவினம் ரூபா) | 5,836 | 4,870 | 4,274 | 3,573 |
| நாட்டின் மொத்த உற்பத்தியின் சதவீதமாக சுகாதார மொத்த மீண்டெழும் செலவினம் | 1.38 | 1.31 | 1.36 | 1.32 |

மூலம்: சுகாதார அமைச்சு/ இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

## சுகாதாரத் துறை

கடந்த 05 ஆண்டுகளில் சுகாதார துறையில் ஏற்பட்ட மொத்த மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினம் முறையே ரூபா 77,741 மில்லியன் மற்றும் ரூபா 375,293 மில்லியன் கொண்ட ரூபா 453,034 மில்லியன் மொத்தமாகும். 2009 ஆம் ஆண்டில் ரூபா 3,496 மொத்தமான சுகாதாரம் ஒன்றின் மீதான மூலதனம் செலவினம் 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,836 இற்கு 67 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சுகாதாரத்திற்கு தனியார் வைத்தியசாலைகளிடமிருந்தான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் கட்டில்களின் அதிகரிப்பை குறிக்கின்றது. சுகாதாரத் துறையின் கட்டில்களின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர் படையணி குறிப்பிடப்பட்டது.

## தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல்

2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவு அதிகாரச்சட்டதின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தல் சபை 2006 இல் தாபிக்கப்பட்டிருந்தது. அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கான தரநிர்ணயத்தின் சூத்திரம் மற்றும் திட்டங்கள் வர்தமாணியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் ஆலோசனைச் சபையில் அமைச்சர் கட்டாயம் இருக்க வேண்டும். அத்தகைய கட்டளை வசதிகள் சேவைகள் குறிக்கின்ற சகல விபரங்கள் மற்றும்

தரநிர்ணய நியமத்தை நிர்ணயிக்கின்ற வேறு ஏதாவது விடயங்கள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். ஆனால், அந்த திட்டங்கள் அதிகாரச் சட்டம் செயற்பாட்டில் வந்து 8 ஆண்டுகள் கடந்த பின்னர் எதிர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. சகல தனியார் மருத்துவ நிறுவனங்களும் அதிகாரச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம், சபையுடன் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், பல்வேறு குறைபாடுகள் காரணமாக பெரும் எண்ணிக்கையான மருந்துவ நிறுவனங்கள் பதிவை பெற்றுக்கொள்ளாமல் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டுவரை அவர்களுடைய தொழிலில் ஈடுபடுகின்றனர். பதிவுக் கட்டணங்களில் 50 சதவீதம் உரிய மாகாண சபைகளிற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டுவரை மாகாண சபைகளிற்கு ரூபா 26,552,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டுவரையான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## அழகுசாதன பொருள், கருவிகள் மற்றும் மருந்துகள் அதிகாரசபை

1980 இன் 27 ஆம் இலக்க அழகுசாதன பொருள், கருவிகள் மற்றும் மருந்துகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஏதாவது அழகுசாதன பொருளோ அல்லது கருவிகளோ விளம்பரம் அதிகாரசபையின் எழுத்துமூல முன் அங்கீகாரத்துடன் மாத்திரம் செய்யப்பட வேண்டும். அத்தகைய விளம்பரங்களிற்கான 420 விண்ணப்பங்கள் 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த போதிலும் 206 விண்ணப்பங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அத்தகையவாறு 214 பதிவுசெய்யப்படாத அழகுசாதனப் பொருட்கள் மீதான விளம்பரங்கள் விளம்பரப்படுத்த வழங்கப்பட்டிருந்தது.

### டெங்கு பரவுதல் மற்றும் தடுத்தல்

இலங்கையின் பல்வேறு பிராந்தியங்களிலும் விரைவாக பரவுகின்ற டெங்கு மீதான கடந்த 05 ஆண்டுகளின் புள்ளிவிபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | நோயாளர்களின் எண்ணிக்கை | இறப்புகள் |
|---|---|---|
| 2009 | 35,095 | 346 |
| 2010 | 34,188 | 246 |
| 2011 | 28,473 | 186 |
| 2012 | 44,461 | 181 |
| 2013 | 31,876 | 89 |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2013 ஆம் ஆண்டில் நோய்கள் பரவுவதிலுள்ள வீழ்ச்சி நோய் தடுப்பு முறைகளில் பின்தங்கிய தன்மை காரணமாக திரும்பவும் அந்நிலையில் இருந்தமை ஆபத்தை குறிக்கின்றது. டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்பாட்டிற்காக டெங்கு தடுப்புப் பிரிவால் எடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கை பல்வேறு பிரச்சனைகளிற்கு முகம்கொடுத்தது. 2013 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்ட ரூபா 42,125,195 ஆன ஏற்பாடு பெருமளவு நோயாளர்கள் இறப்புக்கள் இருந்த பகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் செய்யப்பட்டிருந்தது. கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செய்யப்பட்ட நடவடிக்கைகள் மீதான மாதாந்த அறிக்கைகள் நிகழ்ச்சிதிட்டங்கள் வெற்றியளித்திருந்ததோ அல்லது தோல்வியடைந்திருந்ததேக என மதிப்பிடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நுளம்பு ஒழிப்பு முன்னோடிச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 31,250,000 இற்காக 125,000 பீரீஜ மாத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை முக்கியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமல் வழங்கப்பட்டமையால் குறித்த பெறுபேறுகளை அடைந்திருந்நவில்லை. 69,970 (60 சதவீதம்) பயன்படுத்தப்படாத மாத்திரைகளின் சுய பாவணைக்காலம் 2014 யூலையில் காலாவதியாகியிருந்தது. முன்னோடி செயற்திட்டத்தின் நோக்கம் நுளம்பு தடுப்பை கற்கைக்கு திரவமருந்து மற்றும் அல்லது பீரீஜ மாத்திரைகள் இரண்டும் பயன்படுத்தியிருந்த போதிலும் முன்னோடி செயற்திட்டம் திரவ பீரீஜ யை பயன்படுத்தியிருக்கவில்லை.

# போக்குவரத்து

இலங்கை போக்குவரத்து துறையில் பயணிகள் போக்குவரத்து சேவை முக்கிய பங்கை வகிக்கின்றதுடன் பிரதானமாக அரச மற்றும் தனியார் துறையால் செயற்படுத்தப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபையால் அரச போக்குவரத்து சேவை செயற்படுத்தப்படுள்ள அதேநேரம் தனியார் போக்குவரத்துச் சேவை தனியார் பஸ் உடமையாளர்களால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

### இலங்கை போக்குவரத்து சபை

இலங்கை போக்குவரத்து சபையானது 2005 இன் 27 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் திரும்ப ஒன்றிணைக்கப்பட்டதுடன் ஒடுவோரும் அரசதுறை பஸ்கள் உடமையாளர்களை முன்னணியில் வருகின்றது. பிராந்தியத்தில் அதிசிறந்த பயணிகள் போக்குவரத்து சேவையாவிருக்கின நோக்லெல்லையுடனும் அர்பணிப்புடனும் வினைத்திறனான பதவியணியினராலும் சபையின் ஆகக் குறைந்த வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய சேவைகளின் பாதுகாப்பு, நம்பகமாக, சுகமான, நியாயமான கட்டண முறையில் பொது மக்களிற்காக வீதி பயணிகள் போக்குவரத்து முறைமை மற்றும் சமப்படுத்தப்பட்ட பராமரிப்பு என்பவற்றின் ஏற்பாட்டை அதன் பணியாகவும் கொண்டவையே இலங்கை போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளாகும். தற்போது இலங்கை போக்குவரத்து சபை 104 பிரதான நிலையம் மற்றும் 16 உப நிலையம், 11 பிராந்திய வேலைத்தளங்கள், தலைமை அலுவலகத்தில் மேலதிகமாக சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், மற்றும் நாடுபூராவும் 12 பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றைக் கொண்டிருந்தது. சபையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கானதும் முன்னைய ஆண்டுகளினதும் சபையின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| **ஓடும் நிலை** | **2013** | **2012** | **2011** | **2010** |
|---|---|---|---|---|
| பஸ் அணி (சராசரி) | 7607 | 7,756 | 7,821 | 8,403 |
| நேர அட்டவணைத் வேண்டுகை- பஸ் (சராசரி) | 7,174 | 7,172 | 7,131 | 7,129 |
| ஓம் நிலையிலுள்ள பஸ்களின் எண்ணிக்கை (சராசரி) | 4,720 | 4,694 | 4,933 | 5,119 |
| ஒரு நாளிற்கு ஓடிய பஸ்களின் எண்ணிக்கை | 4,373 | 4,314 | 4,365 | 4,441 |
| நேர அட்டவணையின் சதவீதமாக ஓடும் பஸ்களின் எண்ணிக்கை | 61 | 60 | 61 | 62 |
| பட்டியலிடப்பட்ட கிலோமீற்றர்களின் எண்ணிக்கை | 603,004,472 | 609,651,210 | 611,411,135 | 616,363,455 |
| மொத்த ஓடிய கிலோமீற்றர்களின் எண்ணிக்கை | 343,691,735 | 337,830,439 | 340,840,718 | 341,617,984 |
| ஊழியரின் எண்ணிக்கை | 33,168 | 34,092 | 34,263 | 34,772 |
| ஓடும் நிலையிலுள்ள ஒரு பஸ்ஸின் ஊழியரின் எண்ணிக்கை | 8 | 8 | 7 | 7 |

மூலம்: திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு - இலங்கை போக்குவரத்துச் சபை

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம், 2010 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மொத்த பஸ் அணி 8,403 ஆனதுடன் 2013 ஆம் ஆண்டில் 15 சதவீதத்தால் 7,607 பஸ்களிற்கு குறைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் நேர அட்டவணை வேண்டுகை 7,129 பஸ்களாகும் அதில் 2013 ஆம் ஆண்டில் 0.6 சதவீதத்தல் 7,174 பஸ்களிற்கு உயர்வடைந்திருந்தது. இதன்படி, இலங்கை போக்குவரத்துச் சபை நேர அட்டவணை வேண்டுகையின் 61 சதவீதம் மாத்திரம் அடையமுடியும். இலக்கிடப்பட்ட ஓடுகின்ற கிலோமீற்றர்களிலிருந்து முன்னைய ஆண்டுகளின் ஓடிய கிலோற்றர்களின் எண்ணிக்கை 55 சதவீதமாக இருந்தது ஆனால் 2013 ஆம் ஆண்டில் 78 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் அத்தகையவாறு நேர அட்டவணைத் வேண்டுகையை நிறைவேற்றுவதற்கு பஸ் அணி போதியதாகவுள்ளது.

## வருமானம், செலவினம் மற்றும் இலாபத்தன்மை

இலங்கை போக்குவரத்து சபையின் திட்டமிடல் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் எஎன்பவற்றின் பிரகாரம், தற்போதைய 2013 ஆம் ஆண்டு மற்றுமு் முன்னைய 4 ஆண்டுகளின் வருமானம், செலவினம் மற்றும் இலாபம் மற்றும் நட்டம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | | |
| பயணிகள் போக்குவரத்தில் இருந்தான வருமானம் | 19,430,655,484 | 18,209,846,344 | 15,085,144,469 | 14,588,374,538 |
| ஏனைய வருமானம் | 8,018,965,187 | 2,095,904,299 | 2,079,969,382 | 2,545,970,515 |
| அரசாங்க மானியம் | 2,741,785,656 | 5,997,619,174 | 5,353,866,486 | 5,616,459,435 |
| மொத்த வருமானம் | 30,191,406,327 | 26,303,369,817 | 22,518,980,337 | 22,750,804,488 |
| ஓடிய ஒரு கிலோ மீற்றர் பயணிகள் போக்குவரத்தில் இருந்தான வருமானம் | 56.54 | 53.90 | 44.26 | 42.70 |
| ஒரு கிலோ மீற்றருக்கான மொத்த வருமானம் | 87.84 | 77.86 | 66.07 | 66.60 |
| **செலவினம்** | | | | |
| பஸ்களின் செயற்பாட்டுச் செலவினம் | 26,416,646,151 | 23,842,905,514 | 19,476,472,376 | 18,480,336,180 |
| ஏனைய செலவினம் | 5,307,753,254 | 4,946,751,969 | 4,319,067,869 | 4,408,086,157 |
| மொத்தச் செலவினம் | 31,724,399,405 | 28,799,659,483 | 23,795,540,245 | 22,888,422,937 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஓடிய ஒரு கிலோ மீற்றருக்கான பஸ் செயற்பாட்டுச் செலவினம் | 7.86 | 70.60 | 57.14 | 54.09 |
| ஓடிய ஒரு கிலோ மீற்றருக்கான மொத்தச் செலவினம் | 92.30 | 85.25 | 69.81 | 67.00 |
| அரசாங்க மானியங்களிற்கு முன்னரான செயற்பாட்டு நட்டம் | 4,274,778,734 | 8,493,908,840 | 6,630,426,394 | 5,754,077,884 |
| அரசாங்க மானியங்களிற்கு பின்னரான செயற்பாட்டு நட்டம் | 1,532,993,078 | 2,496,289,666 | 1,276,559,908 | 137,618,449 |
| ஒரு கிலோ மீற்றருக்கான அரசாங்க மானியங்களிற்கு முன்னரான நட்டம் | 21.44 | 25.14 | 19.45 | 16.84 |
| ஒரு கிலோ மீற்றருக்கான அரசாங்க மானியங்களிற்கு பின்னரான நட்டம் | 4.46 | 7.39 | 3.74 | 0.40 |

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம், பயணிகள் போக்குவரத்தில் இருந்தான வருமானம் படிப்படியாக உயர்த்தப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த உயர்வு 31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 6.7 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்தச் செலவினம் 38 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 10 சதவீதமாக இருந்தது. இதன்படி, இலங்கை போக்குவரத்து சபை அடைந்த செலவினம் வருமான அதிகரிப்பை விட அத்கமாக அதிகரித்திருந்ததுடன் இதன் விளைவாக சபை தொடர்ச்சியான நட்டம் அடைந்திரந்தது. இலங்கை போக்குவரத்துச் சபை 2010 அளவில் வெட்டுப் புள்ளியை அடைவதற்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 65.54 உழைக்க வேண்டியிருந்ததுடன் இது 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 90.30 இற்கு அதிகரித்திருந்தது. சபை தொடர்ச்சியாக நட்டங்களை அடைகின்றதானால் அரசாங்கம் அல்லது பொதுத் திறைசேரி என்பவற்றிடமிருந்து எவ்வித நிதி உதவியையும் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ந்தியங்கும் தன்மையாக இலங்கை போக்குவரத்து சபை தொடருவதற்கு முக்கியமற்றதாக இருக்கவேண்டும்.

## அவதானிக்கப்பட்ட பொதுவான நலிவுகள் மற்றும் அத்தகைய நலிவுகளை விலக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

### அ. இலங்கை போக்குவரத்தச் சபையின் பஸ் அணியின் போதாதன்மை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் மொத்த பஸ் அணி 7,143 ஆகும். அதில் 4,245 பஸ்கள் 10 ஆண்டுகளிற்கு மேல் பழமையாக இருந்ததுடன் ஓடும் நிலையிலுள்ள பஸ்களின் எண்ணிக்கை 4,699 தொகையாகும். எவ்வாறாயினும், தற்போது திட்டமிடப்பட்ட நே அட்டவணை 7,174 பஸ்களாகும். இதன்படி, சபையின் பஸ் அணி நேர அட்டவணை தேவையை செய்வத ற்கு போதாதிருந்ததுடன் பிரேரிக்கப்பட்ட ஒழுங்கற்ற நேர அட்டவணை மேம்படுத்துவதற்கு பஸ் வேண்டுகை 40 சதவீதம் வழங்குவதற்கு தவறியிருந்தது. அத்தகையவாறு, சபையின் பஸ் அணியை அதிகரிப்பதற்கு

அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். சபையானது 2013 ஆம் ஆண்டின் போது புதிய பஸ் அணியை 233 கூட்டியிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் இன்னொரு 2,200 பஸ்பள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டது.

### ஆ. ஓடுகின்ற வழியின் எண்ணிக்கையைக் குறைத்தல்

பஸ் அணி போதாமை மற்றும் ஓடுகின்றதிலிருந்து பழைய பஸ்களை அகற்றுதல் காரணமாக ஓடுகின்ற வழி படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கை போக்குவரத்து பஸ்களின் எண்ணிக்கை மேற்செல்லாமல் நின்றதற்கு பூரனமாக வந்திருந்தது. வழி இல: 103 பொரளை – கோட், வழி இல: 173 நாஹென்பிட்டிய – கேட்டை வழி உதாரணமாக குறிப்பிட முடியும். இதன்விளைவாக, சபையின் பல பஸ்கள் சிக்கனமற்ற வழியில் செயற்வடுவதற்கு வரையறுக்கப்பட்டது. இதன்படி, குறிப்பிடப்பட்ட வழிகளில் ஓட மீள தொடங்கமுடியுமெனவும் சபையின் ஆகக் குறைந்த வளங்களைப் பயன்படுத்தி புதிய பஸ் வழிகளை உருவாக்குவதற்கும் பஸ் அணியை அதிகரிப்பதற்கும் படிமுறைகள் எடுக்கவேண்டியிருந்தது.

### இ. வருடாந்த பஸ் ஓடுதல் கிரயம் அதிகரிப்பு

கடந்த பல ஆண்டுகள் தொடர்பில் சபையின் செலவினம் அதிகரிக்கின்றதுடன் அவதானிக்கப்பட்ட இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணங்கள் எரிபொருள் கிரயம், ரயர் மற்றும் ரியூப் கிரயம், திருத்தங்கள் உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் அதிகரிப்பாக இருந்தது. சில பிரதான செலவின விடயங்களின் வகைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 12,544,928,647 | 11,405,107,132 | 8,117,487,323 | 7,650,699,703 |
| ரயர் மற்றும் ரியூப் | 1,799,416,147 | 1,421,908,482 | 1,588,854,899 | 1,196,568,809 |
| பஸ் திருத்தங்கள் | 168,930,616 | 125,423,630 | 122,304,598 | 165,836,532 |
| உதிரிப் பாகங்கள் | 1,098,627,197 | 879,514,919 | 1,200,417,694 | 1,172,912,210 |
| மொத்தம் | 15,611,902,607 | 13,831,954,163 | 11,030,064,514 | 10,186,007,256 |
| ஓடும் பஸ்களின் எண்ணிக்கை | 4,720 | 4,694 | 4,933 | 5,119 |
| ஒரு பஸ்ஸிற்கான செலவினம் | 3,307,607 | 2,946,731 | 2,235,975 | 1,989,843 |

கடந்த பல ஆண்டுகளின் போது பஸ்கள் ஓடிய கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை கருத்திற்கொள்ளக் கூடியளவு அதிகரித்திருக்காத போதிலும் எரிபொருள் கிரயம் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 64 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் சந்தையில் எரிபொருள் கிரயம் ஏறத்தாழ 17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எரிபொருள் நுகர்வு மீகுதியான எரிபொருள் கிரயம், பஸ் திருத்தச் செலவினம் மற்றும் எரிபொருள் மோசடி இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணமாக இருந்தது. மேலும், பஸ் திருத்தங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மீதான பெருமனவான செலவினம் ஏற்பட்டிருந்தது. விட்டுக்கொடுப்பு கடமை முறைமை ஒன்றின் கீழ் உதிதிப் பாகங்களின் கொள்வனவு ஒன்றிற்காக தனியார் கம்பனியின் உதவி பெறப்பட்ட போதிலும் இதுவும் தவறியிருந்தது. இதன்படி, சிக்கனமான முறையில் உயர்ந்த தரமாக உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வதல், பஸ்களின் எரிபொருள் நுகர்வுக் கட்டுப்பாடு மற்றும் பஸ் அணியிலிருந்து பழைய பஸ்களை அகற்றல் மற்றும் பஸ் அணிக்கு புதிய பஸ்களை சேர்த்தல் என்பதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

**ஈ. பஸ் செயற்பாடுகள் மீதான மேற்பார்வை போதாமை**

நேர அட்டவணைக்கமைய பஸ்களின் செயற்பாடுகள் மீதான போதிய மேற்பார்வை தலைமை அலுவலகம் அல்லது பிராந்தி மட்டம் அல்லது நிலைய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பஸ் செயற்படுத்தல் பொறுப்பாண்மை சாரதிகள் மற்றும் நடத்துனர்களிற்கு கைசாத்திடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஜீபீஎஸ் தொழில்நுட்பத்தின் கீழ் பஸ் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு முக்கியத்துாவமாக உள்ளது.

**உ. நடத்துனர்களால் குறைவுகளுடன் நாளாந்த வருமானங்களை கையளித்தல்.**

நடத்துனர்களுடைய நிலுவையாகவிருந்த தொகை குறைவுகளுடன் நாளாந்த வருமானச் சேகரிப்பை கையளித்த நடத்துனர்கள் படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் அந்த நிலுவையாவிருக்கின்ங தொகைகளை அறவிடுவதில் தாமங்கள் நிலவின. இதன் விளைவாக, ஒவ்வொரு பஸ் நிலையத்திற்கும் ரிக்கட் இயந்திரங்கள் வழங்குவதற்கும் பஸ் ரிக்கட் காசு சேகரிப்பிலிருந்து காசு மோசடிகளைக் குறைக்கும் நோக்கில் பயணம் செய்யும் மக்கள் தொகுதியை வலுப்பலுத்தலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**அதனை மேம்படுத்துவதற்காக சபையால் எடுக்கப்பட வேண்டியிருந்த ஏனைய வழிகள்**

- தனியார் மற்றும் அரச துறைப் போக்குவரத்தில் கொள்கை 40 இற்கு 60 சதவீதத்தினை அமுலாக்கல்
- பயணிகளிற்காக முற்செலுத்திய அட்டை முறைமையினை அமுலாக்கல்
- சபையின் சாரதிகள் பயிற்சி பாடசாலைகளை முற்னேற்றுதலும் நாட்டிற்கு ஒழுக்கமுடைய மற்றும் பயனுள்ள சாரதிகளை உருவாக்கலும்.
- சபை பஸ்களின் ரயர் தேவைகளை நிரப்புவதற்கு அம்பாறை ரயர் தொழிற்சாலையின் இயலளவை அதிகரித்தல்.
- பயனுள்ள நோக்கத்திற்காக சபைக்கு சொந்தமாக பயன்படுத்தப்படாத காணி மற்றும் கட்டிடங்களை பயன்படுத்தல்.
- செயற்பாட்டில் இருக்கின்ற முறைமைகளை மீளாய்வு செய்த பின்னர் தற்போதைய நிலையை சரிசெய்வதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் மீளமைப்பு.
- பதவியணியினர் பயிற்சி, அவர்களுடைய ஊக்குவிப்பு மற்றுமு் சபை ஊழியர்களின் பாதுகாப்பில் உயர்மட்ட முகாமைத்துவம் கவனம் செலுத்துதல்.
- இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, தாமதமில்லாமல் கணக்காய்விற்காக கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றுமு் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையினை அறிமுகப்படுத்தல்.
- உள்ளக கணக்காய்வு பிரிவை வலுப்படுத்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவால் அறிக்கையிடப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்காக உயர்மட்ட முகாமைத்துவத்தின் தலையீடு செய்தல்.
- உயர் மட்ட முகாமைத்துவம் உள்ளடங்கிய சகல பதவியணியினரும் உள்ளக மற்றும் வெளிவாரி சட்டங்கள், விதிகள் மற்றுமு் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்குதல்.

## தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

சாரதிகளின் சுகாதார பிரச்சனைகள் வீதி விபத்துக்கள் அதிகரிப்பை நேரடியாக பாதித்திருந்தது. ஆகவே, இலங்கையிலுள்ள சாரதிகளால் அவர்களுடைய தொழில்திறனை பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல நபர்களும் நிறுவத்தில் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களை ஓட்டுவதற்காக உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் திறன் உள்ளனரா என நிர்ணயிப்பதற்கான அதிகாரம். இதன்படி, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் திறனுள்ள விண்ணப்பதாரிகளிற்கு மாத்திரம் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் வீதி விபத்துக்களை குறைப்பதற்கு பங்களிப்பு செய்கிறது. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் 1997 இன் 25 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் 1999 மே 01 இல் தாபிக்கப்பட்டு தற்போதும் உள்ளது. நியதிச் சட்டச் சபை உருவாக்குகின்ற சுய வருமானமாக போக்குவரத்து அமைச்சு செயற்படுகிறது. இந்த நிறுவகம் “இருக்கைக்கு கீழ் ஆரொக்கியமாக சாரதி பின்னால் ஒவ்வொரு நெறிப்படுத்துகின்ற சக்கரங்கள்‘ மற்றும் இலங்கைக்குள் போக்குவரத்து துறையில் முன்னோடியாக இருப்பதில் உடல் மற்றும் உள மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வதன் மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கும் சகல சாரதிகளின் உடல் மற்றும் உள உறுதியை சான்றுபடுத்துவதே அதன் நோக்காக உள்ளது. சாரதி அனுமதிப்பத்திரங்களிற்கான சகல பரீட்சார்த்திகளதும் ஒழுக்கம் மற்றும் தரமான மருத்துவ பரிசோதனையை நடாத்துவதன் மூலமும் அவர்களுடைய உடல் மற்றும் உள உறுதிப்பாட்டை சான்றுபடுத்துவதன் மூலமும் மருத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 251 ஊழியர்களின் பதவியணியினரைக் கொண்டு அதன் பிரதான நோக்கங்களை அடைவதற்றும் நாட்டின் போக்குவரத்து மருத்துவத்தில் முதன்மையாக இருக்கும் நோக்கத்துடன் தலைமை அலுவலகம் உள்ளடங்க பத்தென்பது கிளை அலுவலகங்கள் தாபிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் போக்குவரத்து மருத்துவ நிறுவகம் மற்றும் அதன் கிளைகளின் மொத்த வருமானம் ரூபா 328,962,497 ஆகும். அதேநேரம், மொத்தச் செலவினம் ரூபா 217,481,289 ஆகும், ஆதலால் ரூபா 111,481,209 மிகையை காட்டுகினறது. மீளாய்வாண்டின் போதும் கடந்த 03 ஆண்டுகின் போது மேற்கொள்ளப்பட்ட மருத்தவ பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் விபத்து மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 371,796 | 164,652 | 274,605 | 302,214 |
| நோய் காரணமாக தவறுதல்களின் எண்ணிக்கை | 29,593 | 12,146 | 18,019 | 19,278 |

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட பருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை விபரங்கள்

| | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2,494 | 2,343 | 1,960 | 1,315 |
| உடல் உறுதியுடையோர் எண்ணிக்கை | 2,295 | 2,192 | 1,826 | 1,210 |
| உடல் உறுதியுயற்றோர் எண்ணிக்கை | 199 | 151 | 134 | 105 |

# தேசிய மரபுரிமைகள் மற்றும் மத விவகாரங்கள்

## தேசிய மரபுரிமைகள் அமைச்சு

இறுக்கமான, மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த ஓர் உலகில் ஒரு நாட்டின் கலாசாரம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது என யுனெஸ்கோ (UNESCO) கூறுகின்றது. ஒரு நாட்டின் அடையாளம் தேசிய மரபுரிமையால் வரைவிலக்கணப்படுத்தப் படுகின்றது. அங்கு கலாசாரங்களைச் செழுமைப்படுத்தும் காரணிகளாக தொல்லியல் நினைவுச் சின்னங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் தொடக்கம் பாரம்பரிய நற்பாங்குகள் மற்றும் நவீன கலைப் படைப்புகள் வரை பரந்துள்ளன. மேலும், இயங்குதன்மை, ஆக்கத் திறன், செழிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தின் அபிவிருத்தியானது தேசிய மரபுரிமை, ஆக்கத் திறன் என்பவற்றினால் ஆக்கப்படுகின்றது. இலங்கையில் தேசிய மரபுரிமையுடன் தொடர்புடைய ஒவ்வொரு செயற்பாடும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் ஆக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில், தேசிய மரபுரிமை பிரதிபலிக்கத் தக்க வகையில் எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கத் தக்கவாறு சமூக-பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கும், புலப்படும், புலப்படா மரபுரிமைக்கும் வினைத் திறனான பங்களிப்புச் செய்தலின் மூலம் தேசிய மரபுரிமையைப் பாதுகாத்தலில் பிராந்தியத்தில் முன்னோடியாகத் திகழும் பெருமை மிக்க நாடாக இருப்பதே அமைச்சின் பணியும் தொலை நோக்குமாகும்.

சுதேச, தனித்துவமான மீயுயர் தேசிய மரபுரிமையில் உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்தலுக்கான உறுதியான அடித்தளத்திற்கு வழிசமைத்தல், தேசிய மரபுரிமையில் இளைஞரை ஈடுபடுத்தல், பாரம்பரிய, வழமைகள் மற்றும் சமூக விழுமியங்கள், தேசிய மரபுரிமைகள் சிதைவடைதலைப் பாதிக்கும் காரணிகளைத் திருத்தியமைத்தலுக்காக நன்னெறிகள் மூலம் மக்களுக்கு வலுவூட்டுதல், நாட்டுப் பற்றுள்ள மனநிலை மூலம் அபிவிருத்தி இலக்குகளை அடைதலை நோக்கி முன்னேறுதல் என்பவற்றறை அமைச்சின் பிரதான நோக்கங்கள் உள்ளடக்குகின்றன.
2013 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நோக்கங்களை அடைதலிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செலவுகள் பின்வருமாறாகும்.

| நிறுவகம் | 2013 மீண்டெழும் ரூபா மில் (அ) | 2013 மூலதன ரூபா மில் (அ) | 2013 மீண்டெழும் ரூபா மில் (ஆ) | 2013 மூலதன ரூபா மில் (ஆ) | 2012 மீண்டெழும் ரூபா மில் (அ) | 2012 மூலதன ரூபா மில் (அ) | 2012 மீண்டெழும் ரூபா மில் (ஆ) | 2012 மூலதன ரூபா மில் (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 152.3 | 176.9 | 98.6 | 97.3 | 120.5 | 248.2 | 97.8 | 98.6 |
| தொல்பொருளியல் திணைக்களம் | 572.7 | 172.5 | 571.7 | 124.0 | 501.4 | 185.1 | 474.5 | 111.8 |
| தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் | 112.8 | 92.4 | 105.9 | 45.3 | 101.4 | 76.2 | 92.1 | 29.7 |
| சுவடிக்கூடத் திணைக்களம் | 81.9 | 294.2 | 77.4 | 67.5 | 60.9 | 316.9 | 59.7 | 240.4 |
| காலி மரபுரிமைகள் மன்றம் | 5.5 | 7.5 | 5.4 | 7.5 | 7.5 | 15.7 | 5.3 | 2.5 |
| தேசிய கிராமியக் கலைகள் நிலையம் | 12.7 | 10.0 | 11.0 | 6.7 | 9.5 | 10.0 | 9.4 | 4.5 |

(அ) மதிப்பீடு (ஆ) உண்மையானது

**2013 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம்**

மும்தாஜ் மகாலைப் பாதுகாத்தல், சபாநாயகரின் பழைய உத்தியோக பூர்வ வதிவிடத்தை அதனது தொல்லியல் பெறுமதி கருதி ஒரு சுற்றுலா மற்றும் தொல் பொருளியல் அருங்காட்சியகமாக மாற்றுதல், திருகோணமலையிலுள்ள பழைய டச்சு கடற்படை ஆணையாளரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தை அருங்காட்சியகமாக மாற்றுதல் போன்ற செயற்திட்டங்களை 2012 ஆம் ஆண்டு முடிவுறுத்தத் தீர்மானித்திருந்தும் இச் செயற்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், யாழ்ப்பாணத்திலுள்ள பழைய டச்சுக் கோட்டை நெதர்லாந்தின் நிதியுதவியுடன் ரூபா 124.5 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. “பிள்ளைகளுக்கு எமது மரபுரிமைகள்” எனும் தலைப்பிலான ஒரு நிகழ்ச்சித் திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தின் இணைவுடன் தொல்பொருளியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்டிருந்தது.

தீகவாபி ஸ்தூபம், இந்திக்கட்டு செயவிற்கு அருகிலுள்ள களுகல் குளம், தாந்திரி மலையிலுள்ள திவங்க சிலைகள் இல்லம் மற்றும் அருங்காட்சியகம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு மத்திய கலாசார நிதியத்திலிருந்து ரூபா 117 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், தொல்பொருளியல் பாதுகாப்பிற்கான ஒரு தேசிய மட்ட திட்டம் இல்லாமையால் இந்த செயற்பாடுகள் அமைச்சினதும் தொல்பொருளியல் திணைக்களத்தினதும் நிபுணர்களின் மேற்பார்வையில் இருக்கவில்லை.

## தேசிய மரபுரிமை

### கலைப் பொருட்களை அழிக்கும் செயற்பாடுகள்

முன்னைய தசாப்தங்களில் பல்வேறு நலன்களுக்காக கலைப் பொருட்களை நாசம் செய்யும் எண்ணம் எழுந்திருந்தது. தொல் பொருளியல் நினைவுத் தூபிகளருகே உள்ள பகுதிகளில் கலைப் பொருட்களைத் திருடுதல், சட்டத்திற்கு முரணாக கலைப் பொருட்களை அகழ்தல் மற்றும் சிதைத்தல் போன்ற புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான நிகழ்வுகள் குறித்து புராதனப் பொருட்கள் பாதுகாப்பிற்குப் பொறுப்பான பொலிஸ் பகுதிக்கு அறிக்கை செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறாகும்.

| **குற்றத்தின் தன்மை** | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** |
|---|---|---|---|---|---|
| கலைப்பொருட்களைத் திருடுதல் | 17 | 12 | 32 | 74 | 43 |
| கலைப்பொருட்களை அழித்தல் | 31 | 42 | 25 | 67 | 70 |
| கலைப்பொருட்களுக்காக அகழ்தல் | 95 | 145 | 135 | 216 | 216 |
| புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின்கீழான பிற குற்றங்கள் | 92 | 95 | 28 | 13 | 11 |
| **மொத்தம்** | **235** | **294** | **220** | **370** | **340** |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட கலைப் பொருட்களை அழிக்கும் சந்தர்ப்பங்கள் குறைவடைந்திருந்தன. எவ்வாறாயினும், கலைப் பொருட்களைத் தோண்டி எடுக்கும் சந்தர்ப்பங்கள், கலைப் பொருட்களை அழிக்கும் உயர் எண்ணிக்கையான நிகழ்வுகள் என்பன 216 இற்குச் சமமாக முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் இருந்தன.

மாகாணங்களைப் பொறுத்த வரையில், கலைப் பொருட்களை அழிக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டவாறு முறையே வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் 8 இலிருந்து 18 ஆகவும் 82 இலிருந்து 116 ஆகவும் அதிகரித்திருந்தன. மிக அதிகமான எண்ணிக்கையான தொல்பொருள்

நினைவுச் சின்னங்கள் உள்ள, வருடாந்தம் மிக அதிக எண்ணிக்கையான கலைப் பொருட்களை அழிக்கும் சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்படும் வடமத்திய மாகாணத்தில் 2013 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 41 வீதத்தால் அதிகரித்திருந்தது.

2010 இலிருந்து 2013 வரை அறிக்கையிடப்பட்ட 1459 சந்தர்ப்பங்களில் 1060 சந்தர்ப்பங்களுக்கு நுண்ணாய்வுகள் முடிவுறுத்தப்பட்டும் 399 நிகழ்வுகள் பரிசீலனையிலுமிருந்தன.

### கலைப் பொருட்களை அழித்தலைத் தடுப்பதற்கு உதவுவோரை ஊக்குவிக்காமை

தொல்பொருளியல் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், தகவலளிப்போருக்கும், கலைப் பொருட்களைப் பாதுகாக்க உதவும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பரிசளித்தல் உட்பட சில நோக்கங்களுடன் 1998 இன் 24 ஆம் இலக்க புராதனப் பொருட்கள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் புராதனப் பொருட்கள் பரிசு நிதியம் தாபிக்கப்பட்டது. கலைப் பொருட்களை அழித்தல் தொடர்பான வழக்குகளில் நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டு தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பட்பட்ட குற்றப் பணங்களினால் ஆக்கப்பட்ட இந்த நிதியத்தின் 2013 இன் இறுதியில் உள்ளவாறான மீதி ரூபா 44,619,540 ஆகியிருந்தது. எனினும், நிதியம் நிறுவப்பட்ட நோக்கங்களுக்காக இப் பணம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

### கற்குழிகளினால் கலைப் பொருட்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம்

நாட்டின் துரித அபிவிருத்திச் செயன்முறையில் உபயோகிக்கப்படும் கிரனைற் கற்களைப் பெறுவதற்காக கற்குழிகளை அமைப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கலில் ஒரு கடுமையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அனுமதிப் பத்திரங்கள் வழங்கலிலும் தொடர் நடவடிக்கைகளிலுமுள்ள பலவீனங்கள், இடங்களின் தொல்பொருளியல் ரீதியான முக்கியத்துவத்தைப் பரிசீலிப்பதற்குத் தவறியமை, அனுமதிப் பத்திரங்கள் வழங்க முன்னர் தொல்பொருளியல் திணைக்களத்துடன் இணைப்பினை ஏற்படுத்தாமை போன்ற காரணங்களால் தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களை கற்குழிக்காரர்கள் சிதைத்திருந்தனர். 2013 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டதன் படி, பொலன்னறுவை சிறிபுரவிலுள்ள பாளுதெனிய நினைவுச் சின்னத்துடன் தொடர்பான 12 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிக்குரிய 8 நினைவுச் சின்னங்கள், அம்பாந்தோட்டையின் சீனுக்கலவிலுள்ள தொல்பொருளியல் நினைவுச் சின்னத்திலுள்ள ஒரு ஸ்தூபத்தின் அத்திவாரத்தின் எச்சங்கள் என்பவற்றை உள்ளடக்கிய தொல்பொருளியல் தடங்கள் சிதைக்கப்பட்டிருந்தன.

## சமய விவகாரங்கள்

புத்தசாசனம் மற்றும் ஏனைய சமயங்கள் தொடர்பான நிகழ்வுகள் புத்தசாசன, சமய விவகாரங்கள் அமைச்சினால் இணைப்புச் செய்யப்படுகின்றன.

புத்த சமயத்தை உள்ளடக்கிய அனைத்து சமய போதனைகளையும் அடிப்படையாகக் கொண்ட நெடுங்காலத்திற்கு வரையப்பட்ட தூர நோக்கின் கீழ் சமய வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொள்வதன் மூலம் நன்னெறி விழுமியங்களை மதிக்கும் ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஒரு முன்னோடி அனுசரனையாளராக வருவதில், அனைத்து அக்கறையுடையோரின் ஈடுபாட்டுடன் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தொகுத்து நடைமுறைப் படுத்துவதன் மூலம் ஓர் உண்மையான வாழ்க்கை முறையை இயலச் செய்யும் கோட்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு சமூகத்தை வளர்ப்பதைப் பணியாகக் கொண்டு புத்தசாசன, சமய விவகாரங்கள் அமைச்சு தொழிற்படுகின்றது.

இந்த நோக்கங்களை வினைத்திறனுடன் அடைவதற்காக, அமைச்சின் அதிகாரப் பரப்பின் கீழ் பௌத்த சமய விவகாரங்கள், முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள், கிறிஸ்தவ சமய விவகாரங்கள், இந்து சமய மற்றும் கலாசார விவகாரங்கள் போன்ற அனைத்து சமயங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் திணைக்களங்கள் நிறுவப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களமும் செயற்படுகின்றது.

### செயலாற்றல்

புத்தசாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சு தனது அதிகாரப் பரப்பிற்குட்பட்ட திணைக்களங்களை இணைப்புச் செய்வதன் மூலம் நோக்கங்களை அடைவதற்காக பௌதீக அபிவிருத்தி தொடர்பான 5 நிகழ்ச்சித் திட்டங்களையும், ஆன்மிக அபிவிருத்தி தொடர்பான 5 நிகழ்ச்சித் திட்டங்களையும், குருமார் தொடர்பான 2 நிகழ்ச்சித் திட்டங்களையும் புனித தலங்களின் அபிவிருத்தி தொடர்பான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையும் உள்ளடக்கிய 13 நிகழ்ச்சித் திட்டங்களை 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 344 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், இந் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை எதிர்பார்த்தவாறு அடைய அமைச்சு தவறியிருந்தது.

சில செயற்பாடுகளை தேசிய மரபுரிமைகள் அமைச்சுடனும் அதன் கீழுள்ள ஏனைய நிறுவகங்களுடனும் முறையான இணைப்புடன் செய்யவேண்டியது புத்தசாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சிற்கு அவசியமாயினும் அவ்வாறான இணைப்பு கவனிக்கப்பட்டிருக்கவில்லை.

### புத்தசாசன மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சு

2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் 93 வீதத்திற்குச் சமமான ரூபா 451 மில்லியன் சமய வழிபாட்டுத் தலங்களின் அபிவிருத்தியில் செலவிடப்பட்டிருந்த போதும் பௌதீகச் செயற்பாட்டைப் பரிசோதிப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஏனைய இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கும் புத்த பிக்குகளின் பிறமொழி அறிவை விருத்தி செய்வதன் மூலம் பௌத்த தத்துவத்தை உள்நாட்டிலும் அனைத்துலக ரீதியிலும் பரப்புவதற்குமான நோக்கில் பிற மொழிகளையும் விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய 3 ஆண்டுகளின் போது செய்யப்பட்டிருந்த ரூபா 7.9 மில்லியனான ஒதுக்கீடுகள் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

புத்தசாசன மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட புத்தசாசன நிதியத்தை ஆளும் அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்படி உள்ளூரிலோ சர்வதேச ரீதியாகவோ எந்த மூலத்திலிருந்தாவது காசு பெறப்பட்டிருப்பினும் அது ஏற்றுக்கொள்ளப்படுவதோடு சபை கருதும் மிகப் பொருத்தமான வழியில் புத்தசாசனத்தைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நிதியமானது அதனது பிரதான தொழிற்பாட்டைப் பற்றிய முறையான அறிவு குறித்த நன்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உதாரணமாக, 2012 ஆம், 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 644 மில்லியனை விஞ்சிய வருமானப் பெறுகையிலிருந்தும், நிதியம் நிறுவப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக ரூபா 6 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது.

# சுற்றுலாத்துறை

சுற்றுலா தொழிற்துறையின் பிரதான இலக்கான 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகையை கவர்வதன் மூலம் 2016 ஆம் ஆண்டளவில் 2.75 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சுற்றுலா வருமானத்தை அடைவதற்கு மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை மாநாட்டுப் பணியகம் ஆகிய 4 நிறுவகங்களை அரசாங்கம் நிறுவியிருந்ததுடன் இந்த நான்கு நிறுவகங்களையும் பராமரிப்பதற்கு அரசாங்கம் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,560 மில்லியனைச் செலவிட்டுமிருந்தது. மக்கள் சீனக் குடியரசு, இந்தியா, ரஷ்யா ஆகிய இடங்களில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக ரூபா.814 மில்லியன் செலவில் பாரிய அளவிலான சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. ரூபா 92.4 மில்லியன் செலவில் சில வர்த்தக மேம்பாட்டு செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டில் இலங்கையை முடிவிடமாகக் கொண்ட 04 நிரந்தர விமான சேவைகளையும், 5 தற்காலிக விமான சேவைகளையும் ஆரம்பித்தமை சுற்றுலாத் தொழிற்துறையை வளர்ச்சியடையச் செய்யக் காரணமாயிருந்தது. 2012 ஆம் ஆண்டில் 1,005,605 ஆக இருந்த சுற்றுலாப்பயணிகளின் வருகை 2013 ஆம் ஆண்டில் 1,274,593 ஆக அல்லது 26.75 வீதமாக அதிகரித்து சுற்றுலா தொழிற்துறை மேம்பாடு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்தது. இதனோடு இணைந்து 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டவாறு 65.1 வீதமான திடமான வளர்ச்சிகளை சுற்றுலா தொழிற்துறை வருமானம் பதிவு செய்ததுடன் இலங்கையின் தேசிய வருமானத்தின் சேவைக்கணக்கின் மிகைக்குப் பிரதான காரணியாகவும் இது இருந்தது.

பிராந்திய ரீதியான சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 2013 ஆம் ஆண்டின் மொத்த வருகையின் 33 வீதத்துடன் மேற்கு ஐரோப்பா முக்கியம் வாய்ந்த இடத்தினை தொடர்ந்தும் பேணி வருகின்றது. இதற்கு மேலதிகமாக, உயர்ந்த வருகைகளின் வரிசையில் தெற்காசியா, கிழக்காசியா, கிழக்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா என்பன அமைகின்றன. மேற்கண்ட பிராந்தியங்களில் உள்ளடக்காத இலத்தீன் அமெரிக்க நாடுகள், கரீபியன் தீவுகள் ஆகியவற்றிலிருந்தான 2013 ஆம் ஆண்டிற்கான வருகைகள் 3166 ஆக இருந்தன. எவ்வாறாயினும், இந்த எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 94 வீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஈடான வசதிகளை அதிகரிப்பதற்குரிய முதலீடுகள் செய்யப்படுவதுடன் பெந்தோட்டை, பாசிக்குடா, குச்சவெளி கற்பிட்டி, தேதுவ, யால ஆகிய சுற்றுலா வலயங்களில் பாரிய முதலீடுகளை செய்வதற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் 854 அறைகளைக் கொண்ட 13 ஹோட்டல்கள் பாசிக்குடாவில் நிர்மாணிக்கப்பட்டு வியாபாரத்திற்காக திறந்து வைக்கப்பட்டன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் உபசரிப்பு இல்லங்கள் எனப்படும் புதிய நிகழ்ச்சித்திட்டமானது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் பாரிய வரவேற்பை பெற்றதுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதிவரை 151 சுற்றுலாப் பயணிகள் உபசரிப்பு இல்லங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கும் அதனது முன்னைய நிறுவனத்திற்கும் 1968 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அரசாங்கத்தால் மாற்றப்பட்ட காணிகளில் இந்த நிறுவனங்களால் சுற்றுலா தொழிற்துறை நலனுக்காக 2000 ஏக்கர் அளவில் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- பெந்தோட்டை தேசிய விடுமுறை நிலையத்திற்கு சொந்தமான 15 ஏக்கர் பரப்பிலான ஒரு பகுதி ஒரு தனியார் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தும் இக்காணியின் உரிமைகளை மீட்டெடுக்க அதிகார சபை நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை.

- பெந்தோட்டை சுற்றுலாப் பயணிகள் வலயத்தில் உள்ள 2 ஹோட்டல்களுக்கு தண்ணீர் வழங்கியதன் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட பொய்யான சிட்டைகளால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 9,212,657 ஆகும்.
- பெந்தோட்டை கழிவகற்றல் முறைமையின் பராமரிப்புக்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட பிழையான கொடுப்பனவு ரூபா 6,608,749 ஆக இருந்தது.

- 04 மாகாண சபைகளுக்கு ரூபா 200 மில்லியன் கொடுக்கப்பட்டிருந்தும் செயற்றிட்டங்களின் முன்னேற்றம் தொடர்ச்சியாகப் பார்க்கப்பட்டிருக்கவில்லை.

- பெந்தோட்டை சுற்றுலாத் தளத்தில் உள்ள 48 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 8,802,999 ஆன வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கதிர்காமம் வாடி வீட்டில் நிர்மாணம் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,428,613 ஆன ஒரு மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது

- முகத்துவாரம் இறங்குதுறையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட bulldozers மற்றும் மோட்டார் வாகனங்களின் வாடகை கட்டணங்களாக ரூபா 3,255,750 செலுத்தப்பட்டிருந்தும் இந்த சேவைகளைப் பெற்றுக்கொண்டதற்கான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

- கற்பிட்டி துறையடி இறங்குதுறையின் நிர்மாணத்திற்கும், வாவியின் அருகிலுள்ள பகுதிக்கு தாரிடவும் கற்களுக்கு ரூபா 824,000 ஆன ஒரு மேலதிகக் கொடுப்பனவும், கற்களுக்கும் மற்றும் கிறவல் இடுவதற்கும் பிழையான கொடுப்பனவாக ரூபா 2,549,000 தொகையும் செய்யப்பட்டிருந்தது.

- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 4952 சதுர அடி பரப்பளவை இலவசமாக பாவிப்பதற்கு ஓர் இனந்தெரியாத நபருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியதன் மூலம் ரூபா 16,379,700 ஆன தொகை இழக்கப்பட்டிருந்தது.

# இராஜதந்திர உறவுகள்

அணிசேரா வெளிநாட்டு கொள்கையொன்றைப் பின்பற்றி அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தக மற்றும் கலாசார துறைகளில் நட்புடன் பேணி உலக சுற்றாடல் மற்றும் காலநிலை தாக்கம் மற்றும் அத்துடன் சர்வதேச நியதிகள் மற்றும் உடன்படிக்கைகளுடன் ஒன்றினைந்து நடவடிக்கைகளை எடுத்து நாட்டின் கௌரவம் மற்றும் அபிமானத்தை பாதுகாக்கும் வகையில் செயற்பட்டு வெளிநாடுகளின் கவனத்தை மேம்படுத்தல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் தூதரகங்களின் அடிப்படை நோக்கமாகும். இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதானமான அபிலாசைகளை வெளிநாடுகளில் மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு உலகம் பூராவும் 50 நாடுகளில் 65 தூதரகங்கள் அமைத்துள்ளது.

இந்த இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக 2013 இன் நடுப்பகுதி வரையில் தூதரங்களில் நிரந்தரமல்லாத உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 463 ஆக இருந்ததுடன், 32 வெற்றிடங்களாக இருந்தன. நிரந்தர உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 494 ஆக இருந்ததுடன், 82 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.

**தூதரகங்களிருந்தான வருமானம் மற்றும் செலவினம்**

- 2013 ஆம் ஆண்டின் போது தூதரகங்களின் மூலம் ரூபா 1,352 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கள், தூதுவர் செயற்பாடுகள் மற்றும் பொலிஸ் தீர்வை நடவடிக்கைகள் என்பவற்றிற்காக சேகரிக்கப்பட்டிருந்ததுடன், கூடுதலான வருமானமான ரூபா 181 மில்லியன் தொகை இத்தாலியின் ரோமாபுரி தூதரகத்திலிருந்து சேகரிக்கப்பட்டிருந்ததுடன், குறைந்த வருமானமான ரூபா 0.05 மில்லியன் ரமல்லா தூதகரத்திலிருந்தே கிடைக்கப் பெற்றிருந்தன. அத்தோடு பாரிஸ் மற்றும் இலண்டன் தூதரகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 100 இனை விட மிகைத்துக் காணப்பட்டன.

- மீளாய்வாண்டின் போது அமைச்சின் மதிப்பிடப்பட்ட, உள்ளவாறான மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2013 ஆம் ஆண்டில் தேறிய ஏற்பாடு**<br>ரூபா. மில்லியன் | **2013 ஆம் ஆண்டில் உள்ளவாறான செலவினம்**<br>ரூபா. மில்லியன் |
|---|---|---|
| மீண்டுவருபவை | **7,718** | **7,702** |
| மூலதனம் | **2,421** | **2,303** |

- அமைச்சின் செலவினக் கட்டமைப்பின் பிரகாரம் தூதரகங்களிற்கே கூடிய செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அது 78.6 சதவீதமாக இருந்தது. ஒவ்வொரு தூதரகங்களையும் ஒப்பிடும் போது 2013 ஆம் போது அதிகளவில் வொஷிங்டன் தூதகரத்திற்கே அதிகளவு செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் அது ரூபா 1,041 மில்லியனாக இருந்தது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தூதரகமொன்றான உகண்டா தவிர்த்து செங்கு தூதரகத்திற்கு குறைந்த செலவிடப்பட்டிருந்தது. இது ரூபா 20 மில்லியனாகும்.

- 2013 ஆம் ஆண்டின் மொத்த செலவினத்தில் தூதரகங்களிற்கான மூலதனச் செலவினம் ரூபா 1,149 தொகையும் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 6,716 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தன. மீண்டுவரும் செலவினங்களில் 50 சதவீதமளவில் பதவியணியின் ஏனைய படிகளுக்காகவே செலவிடப்பட்டிருந்தன.

- தூதகரங்களிற்கான மீண்டுவரும் செலவினத்தில் ரூபா 1,047 மில்லியன் அல்லது 15.6 சதவீதம் கட்டிட வாடகைகளாக காணப்பட்டதுடன் வாடகைக்காக மேற்கொள்ளப்பட்ட

செலவினங்களை குறைப்பதற்கு அந்நாடுகளில் நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கும் அல்லது கொள்வனவு செய்வதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்தியிருக்கவில்லை. பல்வேறுபட்ட காரணங்களால் இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்திருக்கவில்லை.

**தீர்க்கப்படாத முற்பண மீதிகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு தூதரகங்களில் தீர்க்கப்படாத மீதி ரூபா **333,055,195** ஆக இருந்ததுடன், இம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு இதுவரையில் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இம்மீதிகளில் கீழே காட்டப்பட்டுள்ள தூதரக அலுவலகங்களில் ரூபா 15 மில்லியனுக்கு மேற்பட்ட முற்பணம் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| *தூதரகங்கள்* | *முற்பண மீதி ரூபா மில்லியன்* |
|---|---|
| டோக்கியோ | 15.60 |
| நிவ்யோர்க் | 20.08 |
| வொஷிங்டன் | 20.06 |
| இலண்டன் | 36.60 |
| டொரன்டோ | 29.80 |
| **மொத்தம்** | **122.14** |

**அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளில் மீதிகள் அத்திகதியில் தீர்க்கப்படாத மீதிகள் மற்றும் தூதரகங்களின் தொகைகளின் மீதிகள் உள்ளடஙகளாக இனங்காத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டதுடன், விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கட்டுநிதி இலக்கம்** | **அமைச்சின் புத்தங்களில் காணப்படும் கட்டுநிதி கணக்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **தீர்க்கப்படாத மீதி** | | |
|---|---|---|---|---|
| | | **அமைச்சு** | **வெளிநாட்டு தூதரகங்கள்** | **மொத்தம்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 35/08 | 63,350,921 | 4,800,000 | 61,855,518 | 66,655,518 |
| 35/09 | 32,271,945 | | 31,146,303 | 31,146,303 |
| 35/10 | 675,170,151 | 309,773 | 38,695,854 | 39,005,627 |
| 35/11 | (463,557,480) | | 38,847,021 | 38,847,021 |
| 35/12 | 101,950,473 | | 85,555,612 | 85,555,612 |
| 35/13 | 496,559,214 | 848,377 | 76,954,889 | 104,024,215 |
| மொத்தம் | 905,745,224 | 11,958,150 | 333,055,197 | 345,013,347 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத கட்டுநநிதி மீதி | | | | 345,013,347 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தூதரகங்களினான இறுதி காசு மீதி | | | | 382,965,393 |
| அமைச்சில் இருக்க வேண்டிய கட்டுநிதி மீதி | | | | 727,978,740 |
| ஒதுக்கீட்டுக் கணக்கில் அமைச்சின் பதிவேடுகளின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் மொத்தம் | | | | 905,745,224 |
| **வேறுபாடு** | | | | **177,766,484** |

இதன் பிரகாரம் கட்டுநிதி மற்றும் உள்ளவாறான கட்டுநிதி மீதிக்களுக்கிடையே ரூபா 177,766,684 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், திறைசேரி கட்டுநிதி மீதியும் ரூபா 905,745,224 ஆக இருந்தமையால் அக்கணக்குகளுக்கிடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

# நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு

பூமியில் 70 சதவீத்திற்கு மேல் நீர் காணப்பட்ட போதிலும் குடிப்பதற்கு சுத்தமான நீர் 1 சதவீதத்திற்கும் குறைந்த அளவே காணப்படுவதால் நீர் வளங்களுக்கு இடையே மட்டுப்படுத்தப்பட்ட வளமொன்றாகும். சுத்தமான நீர் ஒவ்வொரு உயிருக்கும் அத்தியவசியமாக இருப்பதுடன், எதிர்காலத்தில் சுத்தமான நீரின் கேள்விக்கு ஒப்பாக சுத்தமான நீரை வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சுகாதார ரீதியில் சுத்தமான குடி நீரை வழங்குவது பபரதானமான சவால் ஒன்றாக மாறியுள்ளது.

நகரங்களின் சனத்தொகை வேகமாக வளர்ச்சியடைகின்றமை, கைத்தொழில்மயமாக்கல் மற்றும் காலநிலை மாற்றம், மற்றும் இயற்கை விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற மாற்றங்களால் சுத்தமான நீரை பாதுகாக்கப்பட வேண்டியதுடன், அனைத்து உயிர்களினதும் வாழ்வதற்கும் ஆரோக்கியத்திற்கும் தேவையான நீரிற்கு எந்தவொரு மாற்றீடு இல்லையென்பதாலும் அதனை தரத்தில் பராமரித்துச் செல்லல் அரசின் அல்லது அமைப்பொன்றினதோ பொறுப்பாக உள்ளது. உள்நாட்டில் இப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருக்கும் பிரதானமாக இரண்டு அரச நிறுவனங்களான நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் செயற்படும் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபையினாலும் கடந்த 05 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க செலவினம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சு** ரூபா மில்லியன் | **நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை** ரூபா மில்லியன் | **மொத்தம்** ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| 2009 | 287 | 22,930 | 23,217 |
| 2010 | 1,351 | 25,091 | 26,442 |
| 2011 | 439 | 26,783 | 27,222 |
| 2012 | 380 | 30,899 | 31,279 |
| 2013 | 640 | 25,436 | 26,076 |

### நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சு

நீரேந்து மற்றும் சுற்றாடல் சமநிலைத் தன்மையைப் பேணி சுத்திகரிக்கப்பட்ட குடி நீரையும் போதியளவில் சுகநலன் வசதிகளையும் வழங்குவதை செயற்பணியாகக் கொண்டு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. நீர் வழங்கல் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி குடி நீர் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான வசதிகள் என்பவற்றை வழங்குவதினூடாக அனைத்து தரப்பினருக்கும் வசதிகளை வழங்குதல் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய வழிகாட்டல்களையும் வழங்கும் பொறுப்பு இந்த அமைச்சு கடப்பாடாக உள்ளது.

### நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை

நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை 1972 இன் 02 ஆம் இலக்க சட்டத்தினால் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டதுடன், வீட்டுப் பாவனையாளர்களுக்கும் தொழிநுட்ப மற்றும் வர்த்தக துறை போன்ற நலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் குழாய் நீர் மற்றும் கழிவு நீர் முறைமையை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் அதன் பொறுப்பாக உள்ளது. நீர் வசதிகள் மற்றும் சுகநலன் வசதிகள் சேவைகளை தொடர்ச்சியாக பராமரித்துச் செல்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன் அதற்காக வெளிநாட்டு நிதியப் பயன்பாடு தொடர்பான விபரம் பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

| செயற்திட்டம் | 2011 | | | 2012 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடு ரூபா மில். | பயன் பாடு ரூபா மில். | சதவீதம் | ஏற்பாடு ரூபா மில். | பயன் பாடு ரூபா மில். | சதவீதம் | ஏற்பாடு ரூபா மில். | பயன் பாடு ரூபா மில். | சதவீதம் |
| பாரிய | 26,632 | 26,511 | 99.55 | 30,265 | 27,469 | 90.76 | 29,218 | 24,399 | 83.51 |
| சிறிய மற்றும் நடுத்தர | 2,050 | 1,879 | 91.66 | 3,253 | 2,532 | 77.83 | 3,499 | 2,981 | 85.19 |
| சுனாமி | 1,156 | 947 | 81.92 | 1,598 | 1,644 | 102.87 | 902 | 706 | 78.27 |
| நீர்த்துறையின் சமூக வசதிகள் | - | - | | 210 | 95 | 45.23 | 1,145 | 405 | 35.37 |
| **மொத்தம்** | **29,838** | **29,337** | **98.32** | **35,326** | **31,740** | **89.84** | **34,764** | **28,491** | **75.44** |

உள்நாட்டு நிதி மற்றும் வெளிநாட்டு உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் பலவீங்கள் அவதானிக்கப்பட்டன.

- செயற்திட்டங்களின் அடிப்படை திட்டங்கள் மற்றும் கற்கைகளின் பிரகாரம் அச்செயற்திட்டங்களை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தெரிவு பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கிடையே 90 சதவீதமான செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. வெவ்வேறு காரணங்கள் அதற்கு தாக்கமளித்திருந்த போதும் மேலதிக வேலை மற்றும் விலை அதிகரிப்பு என்பன காரணமாக செயற்திட்டக் கிரயம் அதிகரித்தமை என்பன செயற்திட்ட தாமதத்திற்கான இடைவிளைவுகளாக அவதானிக்கப்பட்டன.

- குறிப்பாக இனங்காணக்கூடிய செயற்திட்டங்களுக்கு பொதுத் திறைசேரியால் வழங்கப்படும் நிதிஏற்பாடுகள் குறித்த செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தாமல் அங்கீகாரமின்றி வேறு செயற்திட்டங்களுக்காகவும் நீர் வழங்கல் சபையின் பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படடிருந்தன.

- உள்நாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி சிறிய அளவிலான பல செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலம் கடந்திருந்த போதும் அச்செயற்திட்டங்களில் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்படாமல் அல்லது இடைநடுவில் விடப்பட்டிருந்ததுடன், இதற்கான நிதி, நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் அரசிடமிருந்து கிடைக்கவில்லையென்பது காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

- எதிர்பார்க்கப்பட்ட இயலளவில் நீர் இல்லாமை, மக்களின் பங்களிப்பு குறைவடைந்தமை, சமூக அமைப்புக்களின் பலவீனமான நிதிக் கட்டுப்பாடு, திட்டமிடலில் பலவீனம் மற்றும் மேற்பார்வை செய்வதில் பலவீனம் நீர் வழங்கல் சபையின் நீர் குழாய் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளல் போன்ற காரணங்களால் ஏறத்தாழ 308 சமூக நீர் வழங்கல் மற்றும் சுகநலன் செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

## நிதி விளைவுகள்

சபையினால் வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய சில ஆண்டுகளில் சபை தொடர்ச்சியான நட்டத்தை அடைந்திருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வருடாந்தம் தொடர்ச்சியான இலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய 06 ஆண்டுகளில் சபையின் நிதி விளைவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | இலாபம் /(நட்டம்) |
| --- | --- |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2008 | (2,914) |
| 2009 | (1,425) |
| 2010 | (5,955) |
| 2011 | 684 |
| 2012 | 367 |
| 2013 | 1,003 |

சபையின் தேறிய இலாபத்தில் படிப்படியான வளர்ச்சியொன்று தென்பட்ட போதிலும், அதிக மேந்தலைக் கிரயம் காரணமாக 2008 முதல் 2010 வரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் தேறிய நட்டத்தை அடையும் நிலைமையை அடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் நீர்க்கட்டணம் திருத்தியமைக்கப் பட்டமையால் சபையின் நிதி நிலைமையை சிறந்த நிலைமைக்கு மாற்றக் கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் சபையின் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 19 சதவீத அதிகரிபொன்றைக் காட்டியிருந்தது. எனினும் செயற்பாட்டு செலவினங்களில் 46 சதவீதமான அளவு பதவியணியின் சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தாலும் நீர் உற்பத்திக்காக நேரடியாக பங்களிப்புச் செய்த ஆளணிக்கான ஊழியர் செலவினம் 8 சதவீத அதிகரிப்பொன்றையும் காட்டியது.

இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட சேவை துண்டிக்கப்பட்ட மற்றும் நீர் தூண் கடன் மீதி ரூபா 840 மில்லியனாக இருந்ததுடன், 3 ஆண்டுகளை மிகைத்த கொழும்பு மாநகர சபையினதும் ஏனைய கடன்பட்டோர்களினதும் மீதிகள் முறையே ரூபா 28.5 மில்லியன் மற்றும் ரூபா 8.7 மில்லியனாக இருந்தன.

2012 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட இலாபம் ரூபா 367 மில்லியனாக காண்பிக்கப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டின் போது அது ரூபா 1,003 மில்லியன் வரை அதாவது 173 சதவீதம் அதிகரிந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. சபையின் நிதித் தகவல்களின் பிரகாரம் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நீர் அலகொன்றின் கிரயம் மற்றும் இலாப நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2013 | | 2012 | | 2011 | | 2010 | | AVERAGE | | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| சாதாரண விற்பனை விலை | | 44.72 | | 38.93 | | 33.71 | | 33.28 | | 37.66 | |
| உற்பத்திக் கிரயம் | | | | | | | | | | | |
| நேர் கிரயம் | 17.14 | | 13.87 | | 11.50 | | 12.27 | | 13.69 | | |
| வருமானம் கிடைக்கப் பெறாத நீருக்கான கிரயம் | 7.42 | (24.56) | 5.91 | (19.78) | 4.86 | (16.36) | 5.58 | (17.85) | 5.94 | 19.63 | 34.78 |
| ஒரு அலகிற்கான செயற்பாட்டு இலாபம் | | 20.16 | | 19.15 | | 17.35 | | 15.43 | | 18.02 | 15.10 |
| ஏனைய கிரயம் | | | | | | | | | | | |
| பெறுமானத் தேய்வு | | (5.23) | | (4.58) | | (5.94) | | (10.83) | 6.64 | | 16.88 |
| நிர்வாக செலவினம் | | (9.45) | | (8.6) | | (6.72) | | (7.64) | 8.10 | | 20.59 |
| நிதிச் செலவினம் | | (5.19) | | (4.68) | | (4.24) | | (5.78) | 4.97 | | 12.63 |
| மொத்த செலவினம் | | 44.43 | | 37.64 | | 33.26 | | 42.10 | 39.34 | | |
| இலாபம் / (நட்டம்) | | 0.29 | | 1.29 | | 0.45 | | (8.82) | (1.68) | | |

- உற்பத்தி கிரயத்தை தவிர்த்து திரட்டிய செலவினத்தில் 17 சதவீதம் அளவில் சொத்துப் பெறுமானத் தேய்விற்காக செலவிடப்பட்டு வருவதுடன், இதன் மூலம் நிதிப்பாய்ச்சல் ஒன்று இடம்பெறாத போதிலும், தற்போது இருக்கும் சொத்துக்களில் பங்களிப்பு மூலம் செயற்பாட்டு நிலைமையை அதிகரிப்பதற்கு முடியுமாக இருந்துள்ளதுடன், விசேடமாக வெளிநாட்டு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் சொத்துக்களில் மிகவும் கூடிய கிரயம் இதற்கு தாக்கமளித்திருந்தது.

- நிர்வாகச் செலவினத்திற்காக திரட்டிய செலவினத்தில் 21 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் அதிகளவான தொகை பதவியணியின் சம்பளம் மற்றும் படிகளுக்காக செலவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. முன்னைய காலப்பகுதியில் பதவியணி ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரித்தமை இதற்குத் தாக்கமளித்திருந்தது.

- சபையின் மூலதன செலவினத்திற்காக பெற்றுக்கொண்ட கடன்களுக்காக மொத்தமாக ஒவ்வொரு நீர் அலகிலிருந்தும் ரூபா 4.97 தொகையொன்று வட்டியாக கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்துள்ளதுடன், அது மொத்த உற்பத்தி செலவில் 12.63 சதவீதமாக இருந்தது.

**நீர் விற்பனை வருமானம்**

2009 வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் 15 நீர் அலகுகளுக்கு குறைவாக பயன்படுத்தும் பாவனையாளர்களுக்காக வழங்கக் கூடிய கழிவுவிற்காக பொது திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய ஏற்பாடு கிடைக்காமையால் 2012 ஆம் ஆண்டின் சபையின் வருமானத்திலிருந்து செலவிடுவதற்கான கிரயம் ரூபா 118,614,518 ஆக இருந்தது.

**வருமானம் கிடைக்கப் பெறாத நீர் விகிதம்**

2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வருமானம் கிடைக்கப்பெறாத திரட்டிய நீர் விகிதத்தை 20.08 வரை குறைத்துக் கொள்வதற்கு சபை திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரின் அளவில் 30.24 சதவீத அளவிற்கும் கொழும்பு நகரில் விநியோகிக்கப்படுகின்ற நீரின் 47.71 சதவீதமான அளவிற்கும் வருமானம் கிடைக்காமல் காணப்பட்டது.

வருமானம் கிடைக்கப் பெறாத நீரின் விகிதத்தைக் குறைப்பதற்காக சபையினால் வெவ்வேறு செயற்திட்டங்கள் மற்றும் 6 உப செயற்திட்டங்கள் என்பவற்றின் கீழ் ரூபா 3,100,169,648 தொகை ஒதுக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு வரை அதில் 50 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும், வருமானம் கிடைக்கப்பெறாத நீர் விகிதம் கருத்திற் கொள்ளக்கூடிய வகையில் குறைப்பதற்கு முடியாதிருந்ததமை கடந்த 6 ஆண்டுகளில் வருமானம் கிடைக்கப் பெறாத நீர் இணைப்பின் பொழிப்பில் உறுதிப்படுத்தப்பட்டது.

| ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் கிடைக்காத நீரின் சதவீதம் | 30.24 | 28.29 | 30.36 | 31.55 | 31.06 | 32.13 |

**சமூக நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு**

கிராம பிரதேசங்களில் நீர் மற்றும் சுகநலன் வசதிகளை இனங்காணல் கிராமியநீர் முன்மொழிவுத் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துவதற்காக அரச நிறுவனங்களான நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு அமைச்சும் நீர் வழங்கல் சபையால் பல்வேறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களில் 2013 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் மீள் குடியேறிவர்களுக்கான நீர், சுகநலன் மற்றும் சுகாதாரம் தொடர்பான செயற்திட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சமுதாய அடிப்படை கிராம நீர் வழங்கல் மற்றும் சுகநலன்களை மேம்படுத்தும் செய்திட்டம், மட்டக்களப்பு மன்னார், வவுனியா சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம்,

பதுளை மற்றும் மொனறா செயற்திடகலை கிராம நீர் வழங்கல் மற்றும் சுகநலன் சேவைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களில வேலை மற்றும் ஒப்பந்த அளிப்புக்களில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

**உலர்வலய நீரின் குணநலன்**

இலங்கையின் உலர்வலயத்தில் ஆண்டு பூராக காணப்படும் நிலத்தின் சுற்றுப் புறங்களில் உள்ள நீர் வளம் பற்றாக்குறையாக இருப்பதால், குடி நீரைப் பெற்றுக் கொள்வதற்காக நீர்த்தேக்கங்களை தெரிவு செய்த போதிலும், நீர் மூலவளங்கள் அசுத்தமாவது தூய குடிநீரை வழங்குவதற்குவதற்கான சவாலாக இருக்கின்றது. இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோய் தொற்றுநோய் மட்டத்தில் அதிகரித்திருந்ததுடன், சபையின் குழாய் நீர் முன்மொழிவுத் திட்டத்தின் மூலம் சுத்திகரிக்கப்படும் விநியோகிக்கப்படுகின்ற நீர் மூலம் இந்நோயை கட்டுப்படுத்த முடியும் என இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வட, வட மத்திய மாகாணத்தை மேவுகை செய்யக்கூடிய வகையில் அனைவருக்கும் குழாய் நீர் வசதியை வழங்க முடியாமையால் நீர் வழங்கல் இல்லாத கிராமங்களுக்கு மழை நீரை சேகரிப்பதற்காக மழை நீர்த்தாங்கிகளை நிர்மாணித்தல், பவுசர் மூலம் சுத்தமான குடிநீரை வழங்குதல் சமூக அமைப்புக்கள் மூலம் மீள் சுழற்சி (Ro Plant) நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல் போன்ற குறுங்கால நடைமுறைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**கழிவுநீர் முறைமை**

வெளிநாட்டு உதவி கிடைக்கப்பெறுகின்ற 07 கழிவுநீர் செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு வரையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 36,618 மில்லியன் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டு பாரிய கொழும்பு கழிவு நீர்முகாமைத்துவ செயற்திட்டம், மொரட்டுவ - இரத்மலான – ஏகல – ஜாஎல, கழிவு நீர் செயற்திட்டம், கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் வீடு மற்றும் நதிகளுக்கு அண்மையில்கழிவு நீர் இணைப்பினை மேம்படுத்துதல் மற்றும் கொழும்பு சுகநலன் நடவடிக்கைகளுக்கான செயற்திட்டம் போன்ற செயற்திட்டங்களில், ஒப்பந்தங்களை அளிப்புச் செய்தல் மற்றும் வேலைத் தாமதங்கள் காரணமாக கிடைக்கப் பெற்றிருந்த கடன் மற்றும் நன்கொடைகளில் ரூபா 36,618 மில்லியன் எஞ்சியிருந்ததுடன், சபையால் கழிவுநீர் முறைமை மூலம் சேவைகள் வழங்கல் தொடர்பில் போதிய முன்னேற்றமொன்று காண்பித்திருக்கவில்லை. விசேடமாக ரூபா 16,300 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொரட்டுவ, இரத்மலான, ஜாஎல, ஏகல கழிவு நீர் செயற்திட்டத்தின் வேலை முழுமையாகவே தாமதமடைந்திருந்ததுடன், 2013 இல் பிரதான ஒப்பந்தகாரர் வங்கொரோத்து அடைந்து ஒப்பந்தத்தை இடையில் நிறுத்தியமையால் செயற்திட்டத்தின் வேலைகள் மேலும் தாமதமடைந்திருந்தன.

# துறைமுக சேவைகள்

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தில் இலங்கையில் துறைமுக சேவை நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை உருவாக்கப்பட்டிருந்ததுடன், கொழும்புத் துறைமுகம், மற்றும் திருகோணமலைத் துறைமுகம் போன்ற பிரதான துறைமுகங்கள் மற்றும் காங்கேசன்துறை மற்றும் ஒலுவில் போன்ற இரண்டு துறைமுகங்கள் துறைமுக அதிகார சபையின் கீழ் உருவாக்கப்பட்டிருந்தது. காங்கேசன்துறைத் துறைமுகத்தின் செயற்பாடுகள் கடற்படையினால் மேற்கொள்ளப்படுவதுடன் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டிலும் கடந்த 04 வருடங்களிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தேறிய வருமானம் (ரூபா மில்லியன்) | 36,343 | 38,098 | 31,086 | 28,279 | 23,831 |
| மொத்தச் செலவினம் (ரூபா மில்லியன்) | 33,916 | 32,886 | 30,829 | 29,530 | 21,970 |
| வரிக்குப் பிந்திய இலாபம் / (நட்டம்) ரூபா மில்லியன் | 2,427 | 4,078 | (18) | (1,065) | 2,114 |

2013 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது அவதானிக்கப்பட்ட குறிப்பிடக்கூடிய மாற்றங்கள்

- ❖ 2013 ஆம் ஆண்டின் போது மொத்தத் தேறிய வருமானம் ரூபா 36,343 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்தத் தேறிய வருமானம் ரூபா 1,755 மில்லியனால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் வருமானத்தில் 4.6 சதவீதம் குறைவு காணப்பட்டது.

- ❖ 2013 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினம் ரூபா 33,916 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 1,030 மில்லியனால் அதிகரித்திருந்தது. அது 3.13 சதவீத அதிகரிப்பாக இருந்தது.

- ❖ 2013 ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 2,427 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் இலாபத்துடன் ஒப்பீடு செய்த போது ரூபா 1,651 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அது முன்னைய ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபத்துடன் ஒப்பீடு செய்த போது 40.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருடங்களில் இலங்கையின் சகல துறைமுகங்களுக்கும் வருகைதந்த கப்பல்கள் மற்றும் சகல துறைமுகங்களிலும் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை மற்றும் மரபு ரீதியான கப்பற் சரக்குகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| கப்பல் வருகை | 4,799 | 4,931 | 5,153 | 4,657 | 5,162 |
| கையாளப்பட்ட இருபது அடிக்குச் | 2,502 | 2,317 | 2,299 | 2,167 | 1,714 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சமமான கொள்கலன் அலகுகள் (அலகுகள் 000) | | | | | |
| கையாளப்பட்ட பாரம்பரிய கப்பல் சரக்குகளின் அளவு (மெட்ரிக்தென் 000) | 5,664 | 6,508 | 6,265 | 5,463 | 4,984 |

- ❖ 2013 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு வருகைதந்த மொத்த கப்பல்களின் எண்ணிக்கை 4,799 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுன் ஒப்பீடு செய்த போது கப்பல் வருகையின் எண்ணிக்கை 2.67 சதவீத குறைவாகும்.

- ❖ 2013 ஆம் ஆண்டின் போது கையாளப்பட்ட இருபது அடி கொள்கலன்களின் எண்ணிக்கை 2,502 ஆயிரங்கள் ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 8 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும் பாரம்பரிய கப்பல் சரக்கு கையாளல்கள் 2013 ஆம் ஆண்டின் போது மெட்ரிக் தொன் 5,664 ஆயிரங்களாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் கையாளல்களுடன் ஒப்பீடு செய்தபோது 12.97 சதவீத வீழ்ச்சியாகும்.

## பிரதான துறைமுகங்களின் செயற்பாட்டு விளைவுகள்

அதிகார சபையினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டுகளிலும் பிரதான துறைமுகங்களான கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி என்பவற்றின் இலாபம் மற்றும் நட்டங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| செயற்பாட்டு இலபம் - கொழும்பு | 2,755 | 5,499 | 705.2 |
| திருகோணமலை | (232) | (240) | (309.17) |
| காலி | (96) | (47.84) | (139.17) |

- ❖ காலித் துறைமுகம் 06 வருட காலமாக தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 1,314 மில்லியனாகும்.

- ❖ அவ்வாறே திருகோணமலைத் துறைமுகம் 06 வருடகாலமாக தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 1,862 மில்லியன் ஆக இருந்தது.

# முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கொழும்பு தெற்கு துறைமுகம்

ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் கொழும்புத் துறைமுகத்தை விரிவாக்கும் செயற்திட்டமாக கொழும்பு தெற்கு துறைமுகத்தின் நீர் வழி, கப்பல் வருகைக்கான வழி மற்றும் ஆழப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காகச் செய்யப்பட்ட செலவினம் ரூபா 42,055 மில்லியனாகும். (உள்நாட்டு நிதி ரூபா 9,876 மில்லியன் மற்றும் வெளிநாட்டு நிதி ரூபா 32,179 மில்லியன்) என இருந்த போதிலும் ரூபா 42,055 மில்லியன் கிரயத்துடன் மேற்கொள்ளப்பட்ட உரிய துறைமுக செயற்பாடு நடவடிக்கைகள் துறைமுக அதிகார சபையினால் 35 வருடங்களில் மீளக்

கையளிக்கப்படும் அடிப்படையில் கொழும்பு சர்வதேச கொள்கலன் மேடை என்ற கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் மேடைக் கம்பனி என்பவற்றிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் முதல் 05 வருடங்களில் ஒரு கொள்கலனுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு 3.9 டொலர் இறைக் கட்டணத்தை மாத்திரமே பெறுகின்றது. இந்த இறைக்கட்டணம் கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கும் செயற்திட்டத்தின் வருமானத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கான ஆகக் குறைந்த நலன் கிடைக்கப்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**அம்பாந்தோட்டை துறைமுகம்**

2008 பெப்ரவரி 15 ஆந் திகதி அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண செயற்திட்டத்தின் முதலாவது நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் துறைமுக நிர்மாண நடவடிக்கைகளில் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 105,109 மில்லியனாக இருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாவது கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறைமுகத்தில் பாரந்தூக்கிகள் பொருத்தப்படாமையினால் கொள்கலன்களைக் கையாள முடியாதிருந்ததுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகின்ற கப்பல்களின் அளவு மோட்டார் வாகனங்களைக் கொண்டுவருகின்ற கப்பல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அமெரிக்க டொலர் 808 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடனை ஈடுபடுத்தி அம்பாந்தோட்டை இரண்டாவது கட்ட துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தில் கப்பல் செயற்பாடுகளுக்கான உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் கையாளல் மேடைகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த செயற்திட்டம் 2015 ஏப்ரல் 14 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்குத் தேவையான நிதி சீனாவின் எக்ஸிம் (Exim) வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வத்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காகப் பெறப்பட்ட கடனுக்காகச் 2016 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய வட்டி மற்றும் தவணைப்பணம் என்பன கீழே தரப்படுகின்றது.

| வருடம் | வட்டி | கடன் தவணைப் பணம் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2012 | 2,208 | - |
| 2013 | 2,479 | - |
| 2014 | 2,233 | 1,826 |
| 2015 | 1,987 | 1,827 |
| 2016 | 1,742 | 1,827 |

எனினும் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்குப் போதுமான வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை. 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் அம்பாந்தோட்டை துறைமுக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நட்டம் முறையே ரூபா 11.9 மில்லியன் மற்றும் ரூபா 25.5 மில்லியனாக இருந்தது.

**ஒலுவில் துறைமுக நிர்மாண செயற்திட்டம்**

டென்மார்க் அரசாங்கத்தின் DANIDA முகவரிடமிருந்து கடன் பணம் பெறப்பட்டு ஒலுவில் துறைமுகத்தை நிர்மணித்தல் 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் யூரோ 38.96 மில்லியன் (இலங்கைப் பணத்தில் ரூபா 6,780 மில்லியன்) தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 444 மில்லியனைச் செலவிட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒலுவில் கப்பல் மற்றும் மீன்பிடி துறைமுகங்களாக வெவ்வேறாக நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் துறைமுகத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவோ அல்லது துறைமுகத்திற்கு கப்பல் வருகை தரலோ இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே ஒலுவில் துறைமுகம் மிகவும் குறைந்த ஆழமுடன் அதாவது 8 மீற்றர் அளவிலான

ஆழமுடைய துறைமுகமாகையினால் மிகவும் சிறிய அளவிலான கப்பல்களே வருகைதர முடியும் என உறுதிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் ஒலுவில் துறைமுக நிர்மாணத்திற்காகப் பெற்ற கடன் தொடர்ந்துவரும் 10 வருடங்களில் மீளச் செலுத்த வேண்டியமையினாலும் அத்துறைமுகத்திலிருந்து குறைந்த வருமானத்துடன் துறைமுக செயற்பாட்டு நடவடிக்கைகள் பேணப்படுகின்றமைக்காக பாரியளவிலான செலவினங்களைச் செய்யப்படுகின்றமையையும் கவனத்திற்கொள்ளும் போது பெறப்பட்ட வெளிநாட்டுக் கடனுக்கான தவணைப்பணம் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்பதை புறந்தள்ள முடியாதுள்ளது.

# பகுதி – VI

# தெரிவுசெய்யப்பட்ட விடயப் பரப்புகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரை

# நெல் கொள்வனவும் களஞ்சியப்படுத்தலும்

2012/2013 ஆம் ஆண்டுகளின் போது நெற்கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் என்பன தொடர்பாக பின்வருமாறு ரூபா 578.4 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

| | ரூபா. மில்லியன் |
|---|---|
| சேதமான இருப்புக்கள் | 17.4 |
| பொருட்குறைவுகள் | 506.1 |
| விலை நிர்ணயத்தின் போது பொய்யான தகவல்கள் | 54.8 |
| **மொத்தம்** | **578.4** |

நெற்கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் எனும் செயற்பாடுகளில் சபையின் உள்ளக கட்டுப்பாடு இன்மை, பலவீனமான முகாமைத்துவம் என்பன அவதானிக்கப்பட்டன. பிராந்தியங்களில் உள்ள சேதமடைந்த இருப்புக்களின் பெறுமதியை (ரூபா 17.4 மில்லியன்) சீர் செய்ய தவறியமை தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்டதுடன், முறையான இருப்பு கட்டுப்பாட்டு முறைமைகளில் கஷ்டங்களும், இருப்பு மெய்ம்மையாய்வு இன்மையும் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் உள்ள இருப்புக்களின் நிச்சயமற்ற தன்மையாலும் நெற்சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்களில் உள்ள நெல் இருப்பாக அறிக்கையிடப்பட்ட ரூபா 5,638.9 மில்லியன் பெறுமதியின் சரியான தன்மை குறித்து கணக்காய்வில் திருப்தியடைய முடியாதிருந்தது. சபையால் 2013 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு செலுத்தித் தீர்க்கப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 10,883.5 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் செலுத்த வேண்டியிருந்த உள்ளகக்கடன்கள் ரூபா 791.1 மில்லியனாக இருந்தன.

நெற்கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் ஆகியவை தொடர்பாக அவதானிக்கப்பட்ட உள்ளகக்கட்டுப்பாட்டு பலவீனங்கள்

- களஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பான கைநூல் இன்மை
- பல களஞ்சியங்களின் கட்டுப்பாட்டை ஒரு களஞ்சியப் பொறுப்பாளருக்கு ஒதுக்குதலும், கடமைகளை எழுத்தில் வழங்குதலும்
- களஞ்சிய பொறுப்பாளர்களின் அடமாற்றத்தின் போது பொருளிருப்பு பாரம் கொடுத்தல், பாரமெடுத்தலில் முறையான நடைமுறை இன்மை
- பொருளிருப்புக்களை மாற்றுதல். கட்டளைகள் இன்றி ஒரு களஞ்சியத்திலிருந்து மற்றுமொரு களஞ்சியத்திற்கு மாற்றுதல்
- நெல் கொள்வனவில் பழுதடைந்த தொகையான விதை நெல்லை தீர்மானிப்பதற்கு முறையான நடைமுறை இன்மை
- சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கமைவாக நெல் களஞ்சியப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை.
- பொருளிருப்புப் புத்தகங்களை முறையாகப் பேணத்தவறியமை
- நல்ல அளத்தல், நிறுத்தல் உபகரணங்கள் இன்மை
- ஒவ்வொரு விவசாயிடமும் கொள்வனவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு மேலதிகமாக கொள்வனவு செய்தல்

- அனுமதிக்கப்பட்ட உச்ச அளவிற்கு மேலதிகமான ஈரப்பதனுடன் நெல்லை கொள்வனவு செய்தல்

கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொடர்பான விரிவான கூற்றில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லைப் பதிதல், சான்றுபடுத்தலை பதிதல், பெறுவனவு அறிவித்தலை சான்றுபடுத்தல், கொடுப்பனவு அறிவித்தலை பதிவு செய்தலும் சான்றுபடுத்தலும், இருப்புப் புத்தகம் பேணுதல், நியமங்களைப் பரிசீலித்தல், நெல்லை நிறுத்தல் என்பன எவ்வித உள்ளக் கட்டுப்பாடுகளுமின்றி களஞ்சியப் பொறுப்பாளராலேயே செய்யப்படுவது மோசடிகளைப் புரிவதற்கு சந்தர்ப்பங்களை அளித்திருந்தன.

**நெல் இருப்பு, விநியோகித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றில் உள்ளகக்கட்டுப்பாட்டுப் பலவீனங்கள்**

- தலைமையலுவலகத்திலிருந்து வழங்கல் கட்டளைகளின்றி நெல் இருப்புக்களை விநியோகித்தல்

- நெல்லை விநியோகிப்பதற்கு தலைமையலுவலகத்தால் அதிகாரமளிக்கப்பட்ட களஞ்சியங்களைத் தவிர்ந்த ஏனைய களஞ்சியங்கள் தலைமையலுவலகத்திற்கு அறிவிக்காமல் நெல்லை விநியோகித்திருந்தன.

**நெல்லிற்கு விலையிடலில் பலவீனங்கள்**

- 1971 இன் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தற் சபை அதிகாரச் சட்டத்தின் 4(1)ஆம் பிரிவின்படி, நெல், அரிசி என்பவற்றின் கொள்வனவு, விற்பனை, வழங்கல், விநியோகம் என்பன தொடர்பான சகல அதிகாரங்களும் பணிப்பாளர் சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையால் ஆலோசனை வழங்கப்பட்டபின் இவ்விடயம் தொடர்பான சகல ஏற்பாடுகளையும் அமைச்சர் செயற்படு திகதிகளுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். எவ்வாறாயினும், இச் செயன்முறைகள் தொடர்பான ஏற்பாடுகள் நெல் சந்தைப்படுத்தற் சபையால் 2008 ஆம் ஆண்டில் அதன் மீளமைப்பின்போதாவது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

- வர்த்தமானி அறிவித்தலிற் பிரசுரிப்பதற்குப் பதிலாக ஒரு விலையிடற் குழுவால் விலைகளைத் தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், விலையிடல் தொடர்பான விடயங்களைக் கருத்திலெடுக்காமலும், இந்நோக்கத்திற்காகத் தேவையான தகவல்களைப் பெறாமலும் குழு தீர்தானமெடுத்திருந்தது. இந்த நடைமுறையால் ஏற்படுத்தப்பட்ட நட்டம் இண்ணளவாக ரூபா 54.86 மில்லியனாக இருந்தது.

# வனவிலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதுகத்தல்

வனச்சீவராசிகள் வளம் என்பது, எதிர்கால சந்ததியினரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தங்குதடையின்றியும் தற்போதைய சந்ததியினருக்கு தொடர்ச்சியாக உயர் நலனை ஏற்படுத்தும் விதத்திலும் உயிரியல் கோளத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக முகாமைத்தும் செய்வதாகும்.

உயிரியல் கோளத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக முகாமைத்தும் செய்கையில் வனச்சீவராசி வளமாகிய வன விலங்குகள் மற்றும் விருட்சகங்களைப் பாதுகாத்தல் மிக முக்கிய கருமமாக கருதப்படுகின்றது. உதாரணமாக 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையின் நிலப்பரப்பில் 70 சதவீதமானதாக இருந்த வனப்பரப்பு அந்த நூற்றாண்டின் இறுதியில் 22 சதவீதம் வரை குறைவடைந்திருந்தமை இவ்வளத்தின் முகாமைத்துவத்திற்கான முக்கியத்தவத்தினை உணர்த்தும் காரணியாகும். வன வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு வனச்சீவராசி வள அமைச்சிற்கும் வனச்சீவராசி வளப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் உரித்தானதாகும்.

பல் உயிரினப் பாதுகாப்பிற்காக 1992 ஆம் ஆண்டில் இலங்கை சர்வதேச பல் உயிரினப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்களை உயிர்ப்பிப்பதற்காக தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம், வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டம், கடலோரப் பாதுகாப்பு அதிகாரச்சட்டம், கடற்றொழில் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டம், தேசிய வனப்பிரதேசங்கள் மரபுரிமை அதிகாரச்சட்டம், மரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் போன்ற சட்டதிட்டங்கள் 1907 முதல் 2009 வரையான காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டன.

அவற்றில் வன உயிரின வளங்கள் பாதுகாப்பிற்காக நேரடியாக பங்களிக்கும் 1937 இன் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டம் (Fauna and Flora Protection Ordinance) 1964, 1970, 1993 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது.

இலங்கையின் வன விலங்குகள் மற்றும் தாவரங்களையும் அவை வாழும் பிரதேசங்களையும் பாதுகாத்துக் கண்காணித்தல், அந்த வன விலங்குகள் மற்றும் தாவரங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் வர்த்தக ரீதியாகவும் அல்லது வேறு வகையிலும் முறையற்ற விதத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதனைத் தடுத்தல், இலங்கையின் பல் உயிரினங்களைப் பாதுகாத்தல் என்ப 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களாகும்.

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் ii ஆம் பகுதியின் மூலம் தேசிய பாதுகாப்பு நிலப்பரப்பிற்கும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களிற்கும் வெளியே காணப்படும் பிரதேசங்களில் யானைகள் மற்றும் எருமைகளை பாதுகாக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றில் காட்டிலிருந்து பிடிக்கப்பட்ட யானைகளை முறைப்படியான உத்தரவுப் பத்திரமின்றி வைத்திருத்தல் கடுமையான குற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்வின் மூலம் மிகவும் மன உளைச்சலைத் தரும் சுற்றாடல் பிரச்சினையான யானைகள் மனித மோதல்களை குறைக்கும் நோக்குடன் யானை வேலிகளை அமைத்தல் மற்றும் யானைக் குட்டிகளை காட்டிலிருந்து பிடித்து சட்டவிரோதமாக தம் வசம் வைத்திருத்தல் தொடர்பில் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டது.

வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின் படி அத் திணைக்களம் 2014 செப்தெம்பர் இறுதி வரை 359 யானைகளுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருந்தது. இவற்றில் விகாரைகள், மிருகக் காட்சி சாலைகள் மற்றும் வீடுகளிலுள்ள யானைகள் தொடர்பில் தனித்தனியான பதிவேடுகள் திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. வீடுகளிலிருப்பதாக குறிப்பிட்டு பதிவுசெய்யப்பட்டிருந்த 14 யானைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கிய கோவைகள் கணக்காய்வில் பரிசோதிக்கப்பட்டதுடன் வெளிப்பட்ட பிரதான மோசடிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- வீட்டிலுள்ள பெண் யானையொன்று கர்ப்பமடைந்திருந்தமை தொடர்பில் 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 10 மற்றும் 22(9) ஆம் பிரிவுகளின் படி வனப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்காமை.

- யானைக் குட்டிகளின் பிறப்புக்கள் பதிவுசெய்யப்பட்டிருக்காமை மற்றும் அதிகாரச்சட்டத்தின் படி மரணித்த யானைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்காமை.

- யானைக் குட்டிகளின் பிறப்பினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தர்களின் சான்றிதழை போலியாகத் தயாரித்திருந்தமை.

- பொய்யான சத்தியக் கடதாசிகளும் உரிமையினைக் காட்டும் பதிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை

- களப் பரிசோதனைகளை மேற்கொண்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்காதிருந்ததுடன் சில பொய்யான அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தனர்.

- முறையாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலும் டீ.என.ஏ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.

- முன்னர் பதிவுசெய்யப்பட்டிருந்த யானைகளின் கோவைகளை மோசடியாக திருத்தம் செய்து யானைக் குட்டிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தமை.

- யானைகளின் பிறப்பின் போது சிகிச்சையளித்த மிருக வைத்தியரின் விபரங்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.

மேற்படி விடயங்களின் படி, பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட சகல கோவைகளுக்குமுரிய யானைகள் சட்ட விரோதமாக காட்டிலிருந்து பிடித்து வைக்கப்பட்டு பின்னர் பதிவுசெய்யப்பட்டு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளின் படியும் (ரீட் 625/09 வழக்கு) கட்டளைச் சட்டத்தின் படியும் பதிவுசெய்யப்பட்டிருக்காத யானைகளை தம்வசம் வைத்துள்ள நகர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கவனிப்பாரற்ற யானைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு வழகாட்டல்களையும் தயாரித்தல் வேண்டும். இருப்பினும், யானைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் திணைக்களம் பின்பற்றியிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறை, விசேடமாக பதிவேடுகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டன. இதன் காரணமாக யானைகளைப் பதிவுசெய்வதற்காக பராமரிக்கப்பட்டிருந்த 06 பதிவேடுகளில் ஒன்று காணாமல் போயிருந்தது.

யானைகளைப் பதிவுசெய்தல் நடைமுறையில் காணப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

- பதிவுசெய்வதற்காக விண்ணப்பங்களை வழங்குகையில் குறித்த கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் விண்ணப்பப் பத்திரத்தை வழங்கவதற்கு நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்காமை.

- பதிவுசெய்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய யானையின் புகைப்படமும் யானையை இனங்கண்டுகொள்வதற்காக புகைப்படத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பண்புகள் உறுதிப்படக் குறிப்பிடப்பட்டிருக்காமை. (உதாரணமாக: யானையின் காது, வால், தும்பிக்கை பொன்றவற்றை தெளிவாக இனங்காணக்கூடியவாறு)

- வழங்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழிலும் வருடாந்தம் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்திலும் ஒட்டப்பட்டிருந்த புகைப்படத்தை கழற்றி வேறொறு புகைப்படத்தை ஒட்ட முடியாதவாறு புகைப்படம் சீல் வைக்கப்பட்டோ அல்லது ஏனைய பாதுகாப்பு முறைகளோ பின்பற்றப்பட்டிருக்காமை.

- பதிவுக்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவதற்காக குறிப்பிட்டளவு காலம் எடுக்கப்படுகையில் பதிவுச் சான்றிதழையும் வருடாந்த அனுமதிப்பத்திரத்தையும் வழங்கும் திகதி வரை யானையின் உண்மையான வயது, உயரம், முன் பாதத்தின் பரிதி போன்றன குறித்த சான்றிதழ்களில் உள்ளடக்கப்படாது விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த தகவல்களை உள்ளடக்குதல்.

- யானைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற பெயர்கள் பதிவுச் சான்றிதழிலும் வருடாந்த அனுமதிப்பத்திரத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்காமை.

- வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வருடந்தோரும் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டு கால நீடிப்புச் செய்தல் வேண்டும். இதில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

  - வருடாந்த அனுமதிப்பத்திரக் காலத்தினை நீடிக்கையில் அதற்காக விண்ணப்பிக்கின்ற திகதிக்கு யானையின் உண்மையான வயது, உயரம், முன் பாதத்தின் பரிதி போன்ற குறிப்பிடத்தக்க பண்புகளை உள்ளடக்கிய விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் இதற்காக படிவமொன்றும் அறிமுகப்படுத்தப் பட்டிருக்காமை.

  - வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுகையில் பணம் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச் சீட்டில் அல்லது பணம் செலுத்திய உறுதிச்சீட்டில் யானையின் பதிவிலக்கம் அல்லது எந்த யானைக்காக பணம் செலுத்தப்பட்டது போன்ற இனங்காணக்மூடிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காமை.

  - வருடாந்த அனுமதிப்பத்திரக் காலத்தினை நீடிக்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் உறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காமை.

- DNA அறிக்கையினைப் பெற்றுக்கொள்தல்

  யானைகளைப் பதிவுசெய்கையில் அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரக் காலத்தினை நீடிக்கையில் DNA அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டோ அல்லது அமுல்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

  - DNA பிரோசோதனைக்காக இரத்த மாதிரிகளை எடுக்கும் விதம்

  - அறிக்கையில் உள்ளடங்கியிருக்க வேண்டிய விடயங்கள்

  - அறிக்கையில் யானையின் புகைப்படத்தை உள்ளடக்குதலும் புகைப்படத்தின் மாதிரியும்

  - அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் யானை மற்றும் ஆண் யானை தொடர்பான தகவல்கள் (வயது, உயரம், முன் பாதத்தின் பரிதி போன்றன)

- வருடாந்த அனுமதிப்பத்திரக் காலத்தினை நீடிக்கையில் நீடிக்கப்பட்டமைக்கான எழுத்தாவணமா அல்லது சான்றிதழா வழங்கப்படும் என்று அல்லது வழங்கப்பட்டுள்ள

அனுமதிப்பத்திரத்திலேயே காலநீடிப்புச் செய்யப்படுமாயின் நீடிப்புச் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்ட இடம் போன்ற திடமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.